மணப்போர்

தில்லை-வில்லாளன்

மனப்போர்

தில்லை - வில்லாளன்

பாரி நிலையம்
59, பிராட்வே :: சென்னை-1

முதற்பதிப்பு நவம்பர் 1950
இரண்டாம் பதிப்பு ஜனவரி 1952

விலை ரூபாய் 1-0-0

பொன்னி அச்சகம், சேணியம்மன் கோவில் தெரு, சென்னை-21.

கேள்விக் குறி...ஆச்சரியக் குறி...
ஆனல், முற்றுப்புள்ளி இல்லை

போர், போர்........மனப்போர்........நடக்கிறது! நடந்துகொண்டே இருக்கிறது!

அப்போரின் தன்மையை விளக்க முயற்சி செய்யப்படுகிறது இங்கு....காதல் என்ற களத்தில் பாவம் என்ற படையும், புண்ணியம் என்ற பட்டாளமும் மோதுகின்றன, முடிவே இல்லாமல். அதைப்பற்றிய விளக்கமே இது, முடிவுரை அல்ல இது!

கொலை, களவு, பொய், காமம்....இப்படிப் பாவப் பட்டியல் நீளுகிறது. ஆனல் சமூகம் செய்யத் தூண்டுகிறது அதே பாவங்களை. ஏன் அந்த நிலையென்ற கேள்விக் குறிதான் இந்த நூல். இதைச் செய்யாதே என்று சொல்லி விட்டு அதைச் செய்யவே விரட்டியடிக்கிறதே இந்தச் சமூகம் என்ற ஆச்சரியக் குறியின் மறு வடிவமே இந் நிகழ்ச்சிப் பின்னல். இது பாவத்தைப் பற்றிய கருத்துரைகளை 'ஒரே மூச்சாக' முடிக்கத் துடிக்கும் முற்றுப் புள்ளி அல்ல....அப்படி யாரும் நினைத்து விடவேண்டாம்!

'மனப்போர்' கற்பனையல்ல — நிமிடத்திற் கொரு நிகழ்ச்சி வந்து ஆச்சரியத்தை அள்ளிக் கொட்டும் கண்டுபிடிப்புக் கதையுமல்ல—மக்கள் மனத்திலே நாளும் போராடும் எண்ணங்களின் விண்ணப்பம்—அவைகளின் இதயத் துடிப்பு—ஏக்க ஒலி! பலர் சொல்ல நினைப்பார்கள்—சொல்லத் தெரியாது. சிலர் சொல்ல முனைவார் கள்—ஆனல் சொல்லப் பயப்படுவார்கள்—சிலர் வெட்கப் படுவார்கள். இவர்களுக்குப் பரிந்து கொண்டுவந்து நிற்கிறது இந்நூல்—இல்லை யென்று சொல்ல முடியுமா?

இதனைப் புத்தக வடிவாக்கும் **பாரியாருக்கும்**, ஏற்கனவே **'திராவிட நாட்டில்'** வெளியிட்டு உதவிய **அறிஞர் அண்ணு** அவர்களுக்கும் என் வணக்கம்.

காஞ்சி
25-8-50

தில்லை-வில்லாளன்

எழிலேடு!

— அண்ணாவின் முன்னுரை

முத்தமிழ், செத்துப்போன கொள்கைகளுக்குச் சாமரம் வீசும் பயனற்ற காரியத்துக்குப் பலியிடப்பட்டு வந்த கொடுமையைக் களைவதற்கு, ஒரு அறிவுப்படை தமிழகத்திலே தயாராகிவிட்டது. அந்த அறிவுப்படையிலே தோழர் வில்லாளன், முன் வரிசையிலே உள்ளவர்களில், முக்கியமானவர், இளைஞர். கல்லூரியில் உயர்தரப் பட்டம் பெற்றவர். தமிழார்வம் கொந்தளிக்கும் உள்ளம் படைத்தவர். கற்பனைத் திறமிக்க கதைகளைச் சித்திரத் தமிழிலே தீட்டித் தருபவர். தென்றலாக வன்றோ இருக்கிறது இப்பகுதி, இதோ தேனொழுகுகிறது, அப்பப்பா! புயல்வேகம்—என்று எவரும் வியந்து கூறும் போக்கிலே, அவருடைய எழுத்தோவியங்களிலே, ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையிலே சிறந்து விளங்குகிறது.

சூழ்நிலையைக் கூர்மையான அறிவுக்கண் கொண்டு பார்த்துவிடலாம்—அத்திறம் படைத்தவர்கள் பலர் உண்டு; கண்ட சூழ்நிலையைக் காட்சியாக மட்டும் கொண்டுவிடாமல் அதனைத் தக்கபடி திருத்தவேண்டும், பயன் தருவதாக அமைக்கவேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டுவிடுவதில்லை—துணிவு வேண்டும் அதற்கு; அந்தத் துணிவும் எண்ணமும் ஏற்பட்டுவிட்டால் மட்டும் போதாது, திருத்தி அமைக்கும் வழிவகை காணவேண்டும், அதற்கேற்ப செயலாற்ற வேண்டும்—இவ்வளவும் ஒருசேர அமைவதுதான் கடினம்—அமைந்து

விட்டாலோ அவர்களின் செயல் மூலம், நாடு வளம் பெற்றே தீரும். தில்லை வில்லாளன், அத்தகைய செயலாற்றும் வீறுகொண்ட இளைஞர். எனவேதான், அவர் எழுத்தோவியங்களில், எண்ண எழிலைக் காணமுடிகிறது. நடை அழகைக் காணமுடிகிறது.

நாடு, நாம் காணும்போது இருப்பதைவிட, ஒரு சிறிதளவேனும், பண்பிலே உயர, நமது செயல் பயன் பட்டது என்று நமது உள்ளம் உரைத்திடுமானால், அது போதும். பெறற்கரிய பரிசு அதுதான். இந்தக் குறிக்கோளால் உந்தப்பட்டவர்களின் எழுத்து, இன்று மிக மிகத் தேவை. எனவே நண்பர் வில்லாளனின் எழுத் தோவியங்களின் எழுத்து, இன்று மிகமிகத் தேவை. எனவே நண்பர் வில்லாளனின் எழுத்தோவியங்கள், எழுத் துலகத்துக்கு மட்டுமல்லாமல் நாட்டுக்கே தேவையான நற்பணி.

முத்தமிழின் மூலமும் முன்னவர்கள், மனிதனை மறைத்தே விட்டனர் —மனிதனை மனிதனிடமிருந்து மறைக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். காரணம் பல இருக்கலாம் — பிற இனக் கலாச்சாரப் படையெடுப்பு இதற்கு முக்கியமான காரணம் என்பதைப் பலர் கூறியுள்ளனர். இங்கிருந்து சென்ற பிறகு என்ன? என்ற ஒரே பிரச்னைதான் மனித குலத்துக்கு இருப்பதுபோலக் கருதிக்கொண்டு, இயல், இசை, நாடகம் எனும் மூன்று முனைகளிலும் பணிபுரிந்தனர் — நெடுங்காலம். எனவே தான், அசுரரையும் தேவர்களையும் மோதவிடுவதும், அவர்களுக்கிடையே ஆண்டவனை அழைத்து வந்து நீதியை நிலைநாட்டச் செய்வதும், ஆகிய கற்பனைகளைத் தீட்டினர் பலப்பல ஏடுகளில். அடுத்த வரிசையாக, அரசர்கள்—அவர்களிலே நல்லவர், கெட்டவர், ஆண்டவன் நல்ல அரசர்களைக் காப்பாற்றுவது—அவதாரம் எடுத்தாவது—என்ற கதைகளைத் தீட்டினர். மனிதனைக் காண

மறுத்தனர் — மனிதனே மனிதனால் வஞ்சிக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டு, அடிமைப் படுத்தப்பட்டு, உழன்று கொண்டிருந்தான். பழங்கால ஏடு தீட்டுவோரோ, மிருகக்காட்சிச் சாலைக்குச் சிறுவர்களை அழைத்துச் சென்று, இதோ பார் சிறுத்தை—இதுதான் சிங்கம்—இதோ காண்டாமிருகம் - என்று காட்டுவது போல, இதோ பார் சூரியன், இதோ இராவணன், இது தான் பீமன் - என்று காட்டினர் ஏடுகள் மூலம். மனிதனைக் காட்டவில்லை!

இப்போது முத்தமிழ் கற்றோர்க்கு உள்ள முக்கிய மான, முதல் வேலை, மனிதனைக் காட்டுவது. மனிதனிடம் மனிதனைக் காட்டும் வேலை! எளிதாகத்தான் தோன்றும் முதலில்-முயற்சிக்கும் போதுதான் தெரியும் அதிலுள்ள கஷ்டம்-சிக்கல்!

மனிதனைக் காட்ட வேண்டும் என்று நான் கூறிவிட் டேன், சுலபமாக. ஆனால் சுலபமான காரியமா அது? இல்லை-இல்லை. மனிதனைக் காட்ட வேண்டுமானால், மனிதனைக் கண்டு பிடிக்க வேண்டுமே! அவன் தான் மறைக்கப்பட்டும், மறைந்துகொண்டும் இருக்கிறானே — பூச்சும், புனைவதும், பேச்சும் பிறவும்—அவனை மறைத்து விடுகின்றன! அதற்குப் பின்னால் இருக்கிறான் அவன் — மனிதன்! அவனைக் கண்டுபிடிக்கவேண்டும். ஒரு சமயம் அவன், கையிலே கற்பூரப் பொட்டலத்தோடு கணபதி கோயிலுக்குச் சென்றுகொண்டிருப்பான் — அவன் பக்த னாகவன்றி வேறு யாராக இருக்க முடியும் என்று முடிவு செய்துவிட முடியாதே - கூடாதே! அவன் "மைனர்" சொத்தைத் தின்று ஏப்பம்விட்ட எத்தனாக இருக்கக் கூடும்! இதோ இன்னும் அரைமணி நேரத்தில் கற்பூரத் தைக் கொளுத்தப்போகும் அதே கரம், காரிருளில் கதி யற்ற கன்னியைத் தொட்டு இழுத்திருக்கக் கூடும்! 'அப்ப மோடவர் பொரி கப்பிய கரிமுகனு' துதி பாடப்போகும் அதே வாய், 'யாரும் இல்லே - பயப்படாதே... சீ சீ, வா...

கண்ணில்லே...' என்று குளறியதாக இருந்திருக்கலாம். யார் கண்டார்கள்! யார் காண முயற்சிக்கிறார்கள்!

இதனால்தான் கூறுகிறேன் மனிதனைக் கண்டு பிடிப்பது கடினம் என்று—வைரத்தைக் கண்டுபிடிப் பதுபோல. அறிவு ஒளி வீசும் வைரங்கள், அன்பர் வில்லாளன் நமக்குத் தருவது—காரணம், நான் சொன்ன படி, மனிதனைக் காட்டுவதுதான்.

இந்தத் துறையிலும், கவர்ச்சியும் அதே போது சிக்கலும் அதிகமாக உள்ள பகுதிக்குள் நுழைகிறார், இளைஞர்—ஆமாம்—காதல் பிரச்சனையில்! அதிலேயும், காதலின் கனியைப் படம்பிடித்துக் காட்டுவது அல்ல, அவர் மேற்கொண்டுள்ள வேலை—காதலின் துவக்கம், வளர்ச்சி, இந்நிலையில் ஏற்படும் "மனப்போர்"—இதனைத் தீட்டுகிறார்—தீந்தமிழில்.

"மனப்போர்"— இனிமையும் பயனும் உடைய ஏடு—படித்ததும் அனைவரும் கூறுவர் திருப்தியுடன்—ஆம், காரணம் என்ன?—மனிதனின் படம் தெரிகிறது, அதிலே!

"சமூகம் ஒரு கடல். அதில் பாவ, புண்ணியம், அலைகள்! எது பாவ அலை, எது புண்ணிய அலை என்று பிரிப்பதே கடினமாகப் போய்விட்டது!"

இந்த "அலைகளை", நண்பர் வில்லாளன், "மனப்போர்" ஏட்டிலே, அழகழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். சமூகத்திலே, காதற்களத்திலே நேரிடும் சம்பவங்களைச் சித்தரித்துக் காட்டுகிறார். மனப்போர் ஏற்படும் விதம், அதன் விளைவு இரண்டையும் விளக்கிக் காட்டுகிறார். இவ்வளவும், ஒரு சுவையுள்ள கதை தீட்ட வேண்டும் என்பதற்கு அல்ல, சமூகத்தின் ஒரு சாயலைக் காட்டவேண்டும் என்பதற்காக—அதைத் திறம்படச்

செய்திருப்பதால், சுவையும் பயனும், எதிர்பார்த்தால் கிடைக்கக் கூடியதை விட அதிகமான அளவிலும் தாக் குடனும் கிடைக்கிறது.

"சமூகம் என்ற நிலத்தில் மூட எண்ணங்கள் என்ற எருக்களை இட்டு, நம்பிக்கை என்ற நீரைப் பாய்ச்சி, பிரிவு என்ற விதையை இட்டு, மதம் என்ற மரத்தை வளர்த்து சாதி யென்ற கிளைகளைப் பரப்பி, வேற்றுமை என்ற இலை களை நிரப்பி, பாவம் புண்ணியம் என்ற கனிகளையும் உண்டாக்கி, தங்களுக்குச் சுயநலம் என்ற நிழலை உண் டாக்கிக் கொண்டார்கள்."

சமூகத்திலே உள்ள சூழ்நிலையை, இவ்வளவு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார், தில்லை வில்லாளன். சமுதாயத்திலே புதியதோர் எழில் உண்டாக வேண்டும் என்ற இதயத்துடிப்பு இருந்தாலன்றி, எப்படி இயலும் இத்தகைய படப்பிடிப்பு! எண்ணம், தூய்மையான குறிக்கோளைக் கொண்டதாக இருப்பதால் தான், எழுத்துக்கள், அணிவகுத்துச் செல்லும் படை வீரர்கள் போல், ஒழுங்கும் எழிலும் ஒருசேர அமைந்தனவாக உள்ளன.

சமூகத்தை, மொத்தமாகப் படம் பிடித்துக்காட்டு வதிலே மட்டுமல்ல, இந்த இளைஞர் கைதேர்ந்தவர்— பாருங்கள் வேறோர் காட்சியை—கண்தேர்ந்தவர் என்பது விளங்கும்—கற்பனைக் கண்களைக் குறிப்பிடுகிறேன்!

பாக்கியமும்—சேரனும் சந்திக்கிறார்கள்.

சேரனுக்குக் காதல் நோய்—புயல் வேகத்தில்.

பாக்கியம்—ஒரு நர்ஸ்—மருந்து கேட்கிறான் நோயாளி—மற்ற நோயாளிகளைப் போலவா கேட்பான்— இவனுக்குத்தான் காதல் நோயாயிற்றே! நர்ஸ் பாக்கியம், நோயாளிக்குச் சிகிச்சை செய்யாமலிருக்கலாமா! அந்த

வைத்திய சாலைக்கு, அழைத்துச் செல்கிறார் நண்பர். இனி மேலே படியுங்கள்! "ஆர்வத்தோடு உதடுகளைப் பதித்தான். மறுப்பில்லை—மறுபதிப்பும் கிடைத்தது." எப்படி, சிருங்காரச் சுவை நடை! மறுப்பு இல்லை—மறுப்பு இல்லாதது மட்டுமல்லவாம்—மறுபதிப்பும் கிடைத்ததாம்!

இத்தகைய சுவையுள்ள பகுதிகளுக்கு இடம் தரும் "மனப்போர்"—அதேபோது சமூகத்தின் நிலைமையைச் சித்தரிக்கும் சிந்தனைக் களஞ்சியமாகவும் அமைந்திருப்பதுதான் இந்த ஏட்டின் தனிச் சிறப்பு.

வில்லாளன், வளர்ந்துவரும் புதுமை இலக்கியத்துக்குக் கிடைத்துள்ள, அரும்பணியாளர். அவர் மூலம், புதுமை இலக்கியம் பொலிவுபெற்று, அதைக்கொண்டு, சமூகம் நலன் பெறும் என்று திடமாக நம்புகிறேன். "மனப்போர்" திராவிடரின் படிப்பகத்திலே சேர்க்கப்படவேண்டிய எழிலேடு. இதனைத் தீட்டிய தம்பிக்கு, என் பாராட்டுதல்.

அண்ணாதுரை.

மனப்போர்

1

அவள் அன்று வந்த கடிதத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டாள். அவள் எதிர்பார்க்காத நேரத்தில் எதிர் பாராத மூலையிலிருந்து அந்தக் காகிதம் வந்திருந்தது. பாதை வழியே செல்லும்பொழுது 'பத்துப் பவுன் செயின்' ஒன்று கிடந்தால்கூட அவளுக்கு அந்த ஆனந்தம் வந்திருக்காது. அந்த முக்காலணு அஞ்ச லட்டை என்ன வேலை செய்துவிட்டது? அவள் கண் களிலே குறுகுறுப்பை இழுத்து வந்துவிட்டது; அவள் கன்னங்களில் ஒரு கதகதப்புணர்ச்சியைப் பூசிவிட்டது. அவளது உதடுகளில் அவளையுமறியாமல் சின்னஞ் சிறு குழந்தைச் சிரிப்பு. அவளது இதய அடிவானத்தில் இன்பத்தின் செந்நிறப் படையெடுப்பு முழுக்க முழுக்க வெற்றியடைந்துவிட்டது! அவள் வான வெளியிலே நடப்பது போல நடந்து கொண்டிருந்தாள். அவள் கால்கள் 'தத்துக்கிளித்தனம்' பண்ணி அவளது உள்ளம் என்ற எழுத்தாளன் எழுதி முடித்த களிப்புக்கூத்து என்ற புத்தகத்திற்கு 'முகவுரை' எழுதின. எந்த வேலை யும் செய்யவிடாமல் அவள் மனம் கனவுத் திட்டங்கள் இட்ட வண்ணமே இருந்தது.

'கடிதங்கள் படிப்பது என்பதே ஒரு கலை—விரித்து விளக்கிட முடியாதபடி மிகப் பெரிதாக வளர்ந்து நிற்கும் இலக்கிய வேலை! சிலர் விடிந்து எழுந்தவுட

னேயே அஞ்சல்காரனின் 'திவ்ய தரிசனம் தாலாகாதா' என்று ஏங்கிக் கொண்டிருப்பர். அவனது 'வரப் பிரசாதம்' கிடைக்காத நாளெல்லாம் சித்தங் கலங்கிய பித்தரைப் போல இருப்பர்.

ஆனல், அவளுக்கு அந்தக் கடிதம் வீட்டிலே கிடந்தது என்று வேலைக்காரி எடுத்துக் கொடுத்ததுதான்... அவள் காலையிலே மருத்துவ மனைக்குச் சென்று மாலையிலேதான் திரும்ப முடியும். அப்பொழுது அவளது வீட்டைப் பூட்டியேதான் போட்டு விடுவாள். வேலைக்காரி தங்கம்மா—அவள் சக்கரக்காலி—எங்காவது வம்படிக்கப் போய்விடுவாள். அஞ்சல்காரன் கதவிடுக்கு வழியாகப் போட்டிருக்கிறன். அவள் திறந்தபொழுதும் கவனிக்கவில்லை. மாலையிலே வரும்பொழுது அவள் வாடிப்போன மல்லிகை ஆரமாகத்தான் வருவாள். காலையிலே கிளம்பும் பொழுது அன்று அலர்ந்து மணம் பரப்பும் புது ரோஜாவாகத்தான் தோன்றுவாள். மாலையிலே அவள் முகத்திலே ஏறிக் குதிக்கும் களைப்பு அவளது கண்களுக்குத் திரைகட்டி வேடிக்கை செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிருட்டிணவேணி 'மார்க்' நீல மையினுல், முப்பத்தேழு ரூபாய் 'பார்க்கர்' பேனுவின் துணை கொண்டு நினைத்து நினைத்து, நிறுத்தி நிறுத்தி, முத்து முத்தாக எழுதியிருந்த அந்த அஞ்சலட்டை கண்களில் படாமல் இருக்குமா? தமயந்தியிடம் தூது சென்ற நளன் கற்றுக்கொண்ட மறைவு மந்திரத்தையா இரவல் வாங்கி வந்துவிட்டது? இல்லை! ஆனல், நளனும் தமயந்தியும் நாயகன் நாயகியாக உள்ள நளவெண்பாவிலிருந்து கொஞ்சம் 'காப்பி' யடித்துவிட்டது என்பது மட்டும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை! அங்கு நளனுக்கும் தமயந்திக்கும் நடுவில் தூது சென்று வந்த பெருமை உயிருள்ள அன்னத்தைச் சேரும். இங்கு இந்த அஞ்சல் முத்திரையட்டை அந்த அன்னத்தின் அருந்தொண்டைத் தானே மேற்கொண்டு வந்துவிட்டது!

'தூது நீ சொல்லி வாராய்' என்று பாடிய ஒரு வாலிப னுக்குப் பரிந்துகொண்டு பறந்து வந்துவிட்டது.

அந்தக் கடிதத்தை ஒரு முறை படித்தாள்...மீண்டும் படித்தாள்...இப்படிப் பலமுறை படித்துவிட்டாள்! இதை 'ஜாடைமாடை'யாகக் கவனித்த வேலைக்கார மங்கம்மாவுக்குச் சிரிப்பு ஒருபுறம். சிந்தனை மற்றொரு புறம்—அவள் ஏதோ வேலை செய்வதுபோல் நடித்துக் கொண்டே தனது தலைவியைக் கவனித்தாள். அவள் மீண்டும் மீண்டும் அந்த நான்கு வரிக் கடிதத்தைப் படிப் பதைப் பார்த்துச் சிரித்தாள் இலேசாக—பிறகு பலமாக— கடைசியில் உரக்க, உரக்க அப்பொழுதுதான் தன்னை மங்கம்மா கவனித்திருக்கிறாள் என்ற உண்மை புலப் பட்டது. அவள் முகவானத்தில் நாண வெண்மேகங் களும், அச்சக் கருமேகங்களும் கலந்து பரவின!

அந்தக் கடிதத்தில் அப்படி என்னதான் எழுதி யிருந்தது? யார் எழுதியிருந்தார்கள்? அவளை அப்படி ஆட்டிவைக்கக் காரணந்தான் என்ன?

பாக்கியம் என்றால் இப்பொழுது திருச்சியிலே உள்ள பெரிய மனிதர்களுக்கு, அதே நேரத்தில் 'ஏழை எளிதுகளுக்கு' நன்றாகத் தெரியும். ஆம்! சாதாரணப் பாக்கியமல்ல, பலர் வாழ்விலே பாக்கியத்தைப் பாய்ச்ச வந்த 'நர்ஸ்' பாக்கியம்! மருத்துவ மாது—வைத்திய வனிதா — சிகிச்சை செய்யவந்த சிங்காரி — பிரசவ வேதனை அகற்றவந்த பிராட்டி—பிணிபோக்கப் பணியாற் றும் பெண் அணங்கு! 'மாத்திரை மாத்திரைன்னு ஊரை ஏமாத்திரே — என்னடி பிழைத்திரே — ஆமாம், அவன் போய்ட்டான் வைகுண்ட யாத்திரை' என்று கிண்டல் பேசவேண்டிய வைத்திய வள்ளல் பரம்பரையில் அவள் சேர்க்கப்பட வேண்டியவள் அல்லவே அல்ல! அவள் உதவிக்கு வந்துவிட்டாளென்றால் எந்தப் பிணியாளனும் தான் பிழைத்து எழுந்து விட்டதாகக்கூட எண்ணி

விடுவான். அவள் பிணியாளர்களிடம் உதிர்க்கும் கனி மொழிகள், சற்கண்டுச் சொற்கள், சர்க்கரை வார்த்தைகள், தேன் எழுத்துக் கோவைகள் — டாக்டரின் மருந்தை விட, உடலிலே ஏற்றும் ஊசிச் சிகிச்சையைவிட வெற்றி தரும் மூலிகைகள்! அவளது குளிர்ந்த பார்வையினால் குணம் பெற்ருேர் கோடானுகோடி. அவளது இன்ப நோக்கால் வலியை மறந்து சிரித்துச் சிரித்துப் பிணி யொழித்தவர் எவ்வளவோ பேர்! அன்புத் தடவலில், தாய்மைத் தொடுதலில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், என்ற பொன்மொழியைப் படித்துக்கொண்டவர் எண்ணிலடங்கார். பாக்கியம் வந்துவிட்டால் தங்கள் முன் ஜென்ம தவத்தினுல் விளைந்த பாக்கியம் என்றே கருதுவார்கள்.

தூய வெண்மை நிற ஆடையில் அவள் தோன்றும் போது புராணக்காரராக இருந்தால் 'வெள்ளைக் கலையுடுத்தி வெண்தாமரைப் பூவிலிருப்பாள்...'என்று பாடவே ஆரம் பித்துவிடுவர்.

அவள் நல்ல கருப்பு—ஆனுல் அந்த நிறத்தினுல் தான் அவள் அழகு அதிகமாகிறது என்னலாம். கருப்பு நிறத்திலும், 'களை' உள்ள முகம், மாந்தரை மயக்கும் மருண்ட பார்வையை அடிக்கடி வீசும் கண்கள், ஒளி யுள்ள நெற்றி, முத்தத் தடாகத்தின் முதற் படிகளான கன்னங்கள்.........சேர்ந்துவிட்டதால் அவள் அழகுத் 'தேவதை', கொள்ளை அழகு, அழகு......அங்கே திரண்டு உருண்டு வந்துவிட்டது என்று கூறுவர் அவளைப் பார்த்து மயங்கி நிற்கும் வாலிபர்கள்! சுருங்கச்சொன்னுல் அவள் அழகானவள் அல்ல என்று மட்டும் யாராலும் கூற முடியாது.

அழகுக்குப் பொருளெழுதாத—எழுத முடியாத 'டிக்ஷனரி'தான் உண்டு! அழகு என்று எழுதி, பொரு ளெழுதவேண்டிய இடத்தில் ' அவரவர் விருப்பம்போல்

எழுதிக் கொள்க...' என்ற குறிப்பு மட்டும் எழுதியிருக்க வேண்டும். அந்தப் புரியாத பதங்களுக்குப் பொருள் கூறிப் புரியவைக்கும் புத்தகத்தில்!

இவள் அழகி, இவள் அகோரம் என்று கூறும் திடீர் முடிவுக்காரர்கள் எப்பொழுதும் ஏமாந்துவிடுவார்கள்! அவர்கள் நீதிபதிகளாக இருக்கவே முடியாதவர்கள், —கூடாதவர்கள்! இவள் கூந்தலழகி, இவள் பல்லழகி, இவள் நிறத்தால் வனப்புடையவள், இவள் நடையால் சிறப்புற்றுள் என்று கூறுபவர் நடுநிலே வகித்து நல்ல தீர்ப்புத் தரத் தகுதியுடையவர்கள். அழகு ஒரு அழகான வர்ணச் சிலே......அதில் அமைப்பு சரியாக இருக்கலாம். வர்ணச் சேர்க்கை சரியில்லாமலிருக்கலாம்! ஆகவே சிலே சிறப்பிழந்தது என்று சொல்லிவிடக்கூடாது. வர்ணச் சேர்க்கை வேறுக இருந்தால்...என்றுகூறவேண்டும்.

அழகு ஒரு இன்பக் கனவு! அது ஆளுக்கொரு விதமாக அமைகிறது.

அதுவும் பெண்களின் அழகைப் பற்றிக் கூற வேண்டுமாஞல் சங்கடமான நிலேமைதான். ஆனுல், ஒருவழி உண்டு. சிறந்த முறை அது. அழகு ஒரு ரூபாய் நாணயம். அதில் பதினுறு அணுக்களின் மதிப்பு அடங்கியிருக்கிறது என்பதை மறக்காமல், முப்பத்திரண்டு இலட்சணங்கள் என்று முன்னர் எழுதி வைத்ததையும் மறக்காமல், ஆராய்ச்சியில் இறங்கினுல் தோல்வி இல்லே. பட்டம் பெற்றே வெளியில் வரலாம். அதுதான் ஒவ்வொரு உறுப்பின் அழகையும் கவனித்து முடிவுக்கு வருதல் என்ற சிறந்த முறை! ஒன்றின் அழகு அதிகரிப்பால் ஒருத்தி 'அழகி' என்ற பட்டம் பெறலாம். ஒன்றின் அகோரம் அளவிற்கு மீறி நிற்பதாலே ஒருத்தி 'எட்டே கால் இலட்சணம்' என்ற கவிதைக்கு இலக்கியமாகி விடலாம்! சர்க்கரை அதிகரிப்பதால் பால் பருக முடியாமல் போவதில்லே! உப்பின் அளவு கூடுதலால் குழம்பு குப்பை

மேட்டிற்குப் போவதைப் பார்க்கிறோம்—மறக்கக் கூடாத செய்தி இது!

அழகி பாக்கியம் திருச்சிக்கு வந்துசேர்ந்ததிலிருந்தே அவளுக்குப் புகழும், பேரும் பெருகிக்கொண்டே இருந்தன. ஆகவே அங்கு வருகிற புது டாக்டர்களும், லேடி டாக்டர்களும் வந்த முதல் நாளே பாக்கியத்தின் 'தரிசனமும், தயவும்' கிடைக்க வழிசெய்து கொள்வார்கள்.

டாக்டர் கருணாகரன் வயதானவர். நாற்பதையுங் கடந்து நரை 'துவக்க விழா' செய்யவேண்டிய பருவத்திலே உள்ளவர். அவருக்குப் பாக்கியத்திடம் அளவு கடந்த அன்பு, மதிப்புங் கூட! அவர் நகரிலே எந்த நோயாளியைப் பார்க்கச் சென்றாலும் பாக்கியத்தை உடன் அழைத்துச் செல்வார். 'ஆயிரம் பேரைக் கொன்றவன் தான் அரை வைத்தியன்' என்று கூறுவார்களே—அப்படிப் பார்த்தால் கருணாகரர் வைத்தியரே அல்லர். அவர் இதுவரை ஆயிரம் பேர்களுக்கு மேல் பிழைக்க வைத்திருப்பார். அவருக்கு இந்தக் 'கைராசி' என்று சொல்வார்களே, அது அதிகம் போலும்! அவர் மருத்துவம் பார்க்கச் சென்ற இடங்களில் சாவு வருவதில்லை...வந்துவிடும் என்று அவரே பலமுறை எதிர் பார்த்த நேரங்களிலும் 'எமதருமருக்குக்' கருணாகரர் எதிரியாக இருந்து வருகிறார்.

பாக்கியத்திடம் அவருக்கு அதிக அன்பு வளர்வதற்குக் காரணம் அவளது திறமையும், குணமும் மட்டுமல்ல, வேறு ஒரு காரணமும் உண்டு. பாக்கியம், சமூக வெறியர்களின் முழுப் பழிக்கும் ஆளான பிரிவு—ஆதித் திராவிட வகுப்பு—'அரிஜன' சாதி என்று அவருக்குத் தெரியும்! தாழ்த்தப்பட்ட வகுப்பிலே பிறந்து இந்தத் தகுதிலை அடைந்த அந்தப் பாவையிடம் பரிதாபம் கொஞ்சம்......அது நாளடைவில் பாசமாக மலர்ந்து விட்டது.

சமூக வெறியர்கள் எத்துணை சூதுக்காரர்கள்...... எவ்வளவு தந்திரமாகத் தாங்கள் உயர்ந்து விட்டார்கள் பாருங்கள்! அவர்கள் ஒரு புதிய 'கற்பக தரு'வை வளர்த்துவிட்டார்கள். சமூகம் என்ற நிலத்தில், மூட எண்ணங்கள் என்ற எருக்களையிட்டு, நம்பிக்கை என்ற நீரைப் பாய்ச்சி, பிரிவு என்ற விதையை இட்டு, மதம் என்ற மரத்தை வளர்த்து சாதியென்ற கிளைகளைப் பரப்பி, வேற்றுமையென்ற இலைகளை நிரப்பி, பாவம் என்ற காய்களை விடச்செய்து, புண்ணியம் என்ற கனிகளையும் உண்டாக்கித் தங்களுக்குச் சுயநலம் என்ற நிழலை உண்டாக்கிக் கொண்டார்கள். அவர்கள் நினைத்ததையெல்லாம் தரு கிறது அந்த மரம்......அந்தோ, அநியாயம், கொடுமை.

பாக்கியம் பல சமயங்களில் இந்தச் சமூகத்தை எண்ணியெண்ணிச் சிரிப்பாள்; சில நேரங்களில் அழுதும் விடுவாள்!

அவள் பள்ளியிலே படிக்கும்பொழுது வனஜா எவ்வளவு கடுகடுப்பாக நடந்து கொள்வாள்......'எடுத்தெறிந்து' பேசுவாள். இடையிடையே சாதியை இடித் திடித்துப் பழிப்பாள்; பக்கத்தில் உட்காரவும் அஞ்சுவாள். தொட்டுக்கொள்ளவும் கூசுவாள். ஆனால்...... அன்றொரு நாள் நடந்த நிகழ்ச்சி......பாக்கியம் இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் சமூகத்தின் இந்தக் 'கேடுகெட்ட' நிலைமையை எண்ணி ஏங்குவாள்.

பாக்கியம் அன்று 'ஆஸ்பத்திரி'யிலிருந்து திரும்பி வந்து உடைகளை மாற்றிவிட்டு, மங்கம்மா கொடுத்த சூடான 'காபி'யையும் அருந்திவிட்டு, 'ஈஸிசேரில்' சாய்ந்திருந்தாள். எதிரிலிருந்த 'ரேடியோ' ஏதோ ஒரு பாட்டை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. அவள் பாட்டைக் கேட்கவில்லை. அவளது சிந்தனை எங்கோ ஓடியாடிக் களைப்புத் தெரியாமல் திரிந்து கொண்டிருந்தது.

..."சாதி ஏதம்மா, இது வீண் வாதம்மா" என்ற பாட்டை அடுத்தபடி அந்தக் குயில் குரலாள் பாட ஆரம்பித்தாள். பாக்கியம் பாட்டிலே தன் மனதை இழுத்து வந்து ஈடுபடுத்தினாள். அந்தப் பாட்டு முடியவில்லை. ஒரு கிழவர் அவசர அவசரமாக உள்ளே வந்தார்.

"வாங்க, வாங்க, அவசரம்......" என்றார் வந்தவர், கொஞ்சமும் தாமதிக்காமல்.

"என்ன......?"—பாக்கியம் கேட்டாள்.

"என் மகளுக்கு...சுகப் பிரசவம் இருக்காது போலிருக்கு...கொஞ்சமும் தயவு செய்யுங்க!"

"சரி..."

பாக்கியம் உடனே கிளம்பி, வந்தவரின் காரிலே சென்றாள். அங்கு போய்ப் பார்த்தால் 'வக்கீல்' வரதராசரின் மகள், அவளது பள்ளித்தோழி வனஜாவேதான்! இவளைக் கண்டதும் கட்டிக்கொண்டு அழுதாள். அவளைத் தேற்றியதும் மட்டுமல்ல, தங்கச் சிலைமாதிரி ஒரு ஆண் குழந்தையும் 'ஆயுதகேசி'ல்லாமல் பிறக்கவும் செய்தாள். வனஜா அவளை வாயார வாழ்த்தினாள். பழைய வார்த்தைகளை நினைவூட்டி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள்.

பாக்கியம் சிரித்துக் கொண்டாள். சமூகத்தின்மீது பரவியுள்ள தீண்டாமை ஒரு படை நோய். இது போகக் கல்வியென்ற மருந்திடவேண்டும். பணம் என்ற 'சோப்பை'க்கொண்டு கழுவிவிட வேண்டும். பதவி என்ற 'டர்க்கி டவலால்' துடைக்கவேண்டும்!

சமூகம் செய்த சதிக்குப் பலர் தெரியாமலே உடந்தையாக இருக்கிறார்கள்; வேறு சிலர் தெரிந்தும் உதவியாக

இருக்கிறார்கள். ஒரு சிலர் சாதியை எதிர்க்காமலும் இருப்பதில்லை. அவள் படித்த பெண்கள் பள்ளியின் தலைமையாசிரியை சாரம்மாவின் அன்பான ஆதரவினால் பாக்கியம் எவ்வளவோ பயன் அடைந்திருக்கிறாள். அந்தத் தலைமையாசிரியை வேறு யாருமல்ல, இப்பொழுதுள்ள 'டாக்டர்' கருணாகரரின் சொந்த மனைவியேதான். பாக்கியத்திடம் 'டாக்டர்' அன்பாக இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம். சாரம்மா, பாக்கியத்தைத் தன் சொந்த மகளைப் போலவே பாவித்து நடத்தி வந்தாள். 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்' என்று கேட்டார் வள்ளுவர். சாதியென்ற கதவும், சம்பிரதாயத் தாழ்ப்பாளும் உண்டு என்று சொல்லும் 'வைதீக வக்கீல்கள்' இன்னமும் இருக்கிறார்கள், மாறாமல்! சாரம்மாவுக்கு அந்தச் சாதிக்கதவு இருக்கும் இடமே தெரியாது. தனது கருணைக் கடப்பாறையினால் இடித்துப் பெயர்த்தெறிந்து விட்டாள் போலும்! அந்த அம்மாவின் அறிவுரைப்படியே பாக்கியம் 'நர்ஸ்' ஆனாள். அவருடைய கணவரின் கீழே இன்று வேலையும் செய்கிறாள்.

சாரம்மாவைப் போலவே அவளுக்கு மற்றுமொருத்தி துணையாக இருந்தாள்; அவளது பள்ளிப் பருவத்தில்...! அவள் பெயர் வில்லி என்பதாகும். அவள் இப்பொழுது அரசியலார் பணிமனையில் ஒரு 'டைப்பிஸ்ட்'... இப்பொழுதுதான் பெண்களுக்குப் 'போலீஸ்' வேலை கூட உண்டாமே! நமது சர்க்காருக்குள்ள புத்தி யாருக்கு வரும்...? 'பஸ் கண்டக்டர்', பாதுகாப்பு 'போலீஸ்'... பெண்களுக்குரிய அரிய வேலைகள்! அது எப்படியோ போகட்டும். வில்லி இன்னமும் பாக்கியத்தை மறந்துவிடவில்லை. மதுரையிலிருந்து அடிக்கடி கடிதம் எழுதுவாள்; பாக்கியமும் அவ்வப்பொழுது பதிலிறுப்பாள். அவளுக்கு மன ஆறுதல் தரக்கூடியன வில்லியின் அன்புக் கடிதங்கள் தாம்...!

அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கியவுடன் லில்லி தான் எழுதியிருப்பாள் என்று எண்ணினாள். லில்லி எழுதவில்லை. அவள் ஆச்சரியத்தை அள்ளிக் கொட்டு வதைப்போல ஒரு அழகான வாலிபன்—அவளுக்குத் தெரிந்தவன்தான்—எழுதியிருந்தான். என்ன எழுதி யிருந்தான்...? ஏன் அவள் மகிழ்ச்சியால் கூத்தாடு கிறாள்...?

> 'அன்பு பாக்கியத்திற்கு...ஆசை வாழ்த்துகள் ஆயிரங்கோடி...தோழன் சேரன் வருகிறான், பண் டைய நாள் தோழியைப் பார்க்க! ஆவர்வத்தோடு கூடிய வரவேற்பு இருக்கும்—இருக்கவேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான். பாக்கியமே, கிடைக்குமா ?...
>
> அன்புள்ள சேரன்.'

—இதுதான் அந்தச் சின்னஞ்சிறு கடிதம்.

அவளால் அவனையே நம்ப முடியவில்லை. கண்கள்மீது அவளது மனம் 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' கொண்டு வந்துவிட்டது! சேரனா எழுதியிருக்கிறான்... அன்பைத் தெளித்து அனுப்பியிருக்கிறான்... முக்காலணா அஞ்ச லட்டையில்! இருக்காதே... அவளால் கொஞ்சமும் நம்ப முடியவில்லையே!

நினைவு என்பது ஒரு புண்! ஏதாவதொரு நிகழ்ச்சி யென்ற கல் பட்டுவிட்டால் பழைய எண்ணம் என்ற இரத்தம் ஒழுகிக்கொண்டே இருக்கும். அப்படித்தான் அந்த எழுத்துக் கல்லால் மீண்டும் நினைவுப் புண் இரத்த ஊற்றெடுத்துவிட்டது. அந்தக் கடிதம் அவளைப் பரபர வென இழுத்துக்கொண்டே போய் அவளது சொந்த ஊர் கல்லூரில் நிறுத்திவிட்டது!

கல்லூர் என்ற எண்ணம் வந்தவுடனேயே அவள் உள்ளத்திலே குதூகலம்...உணர்ச்சிப் புரட்சி! ஊரை

வளைத்து ஓடும் சிற்றாறும், அதில் துள்ளிக் குதிக்கும் மீன்களும், அவைகளைப் பிடிக்கத் தங்கள் துணிகளை விரித்து ஏமாறும் தோழியரும், தோழர்களும் உடனே வந்துவிட்டார்கள்!

கல்லூர் ஒரு குக்கிராமம்.

ஊரைச்சுற்றி வளமான வயல்கள் உண்டு. அவ்வூர் முருகன் கோயிலுக்கு மும்முறை படையல் உண்டு தினமும்... அது போலவே முப்போகச் சாகுபடி! கிராமத்திலேயே இரண்டு பிரிவு...ஒன்றில் மேல்சாதிக்காரர்கள்—அதிலேயே மிக உயர்ந்தவர்கள் வாழும் அக்கிரகாரம்! மற்றொரு பிரிவு சேரி...அங்குதான் தாழ்த்தப்பட்ட, உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் வாழ்கிறார்கள். ஊர்ப் பிரிவுகளுக்கிடையில் ஒரு நல்ல தோப்பு...மாந் தோப்பு...அதனுள்தான் முருகன், வள்ளி தெய்வயானையுடன் 'கேம்ப்' இருந்தார்.

அந்த ஊரில் ஒரு நடுத்தரப்பள்ளி இருந்தது. அது உயர்ந்தோர் வாழும் பகுதியிலிருந்தது. எட்டாம் வகுப்புவரை அங்கு படிக்க வசதியிருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்து வரலாற்றில் ஒரு புரட்சியே நடந்திருக்கிறது. அதன் தலைமையாசிரியர் சுப்பிரமணியம் என்பவர், அவர்தான் முருகன் கோவில் குருக்களின் அருமைத் திருமகனார். கோவில்களில் பூசை செய்யும் குருமார்களுக்கே அவர் செய்யும் தெய்வீகத் தொழிலில் நம்பிக்கையில்லை போலும்! இல்லாவிட்டால் சாம்பலையும், சிவப்பையும் கொடுத்துவிட்டுக் கிடைக்கும் பாதிக் தேங்காயையும், வாழைப்பழத்தையும், கொண்டு தங்கள் பிள்ளைகளை வழக்கறிஞராகவும், பள்ளியாசிரியராகவும், வேறு பல வேலைகளுக்கும் அனுப்புவார்களா? ஊர் மக்களுக்காக ஆண்டவனிடம் தூது நிற்பது எவ்வளவு புண்ணிய வேலை...அதை விடுத்து எப்பாடுபட்டாவது தம் பிள்ளைகளை 'நீச' மொழியைக் கற்கச்செய்து வேறு வேலைகளில்

அமர்த்துவதின் 'மர்மம்' யாது? குருமார் கூட்டத்தார் தெய்வத்தை எவ்வளவு கேவலமாக நினைக்கிறார்கள் பாருங்கள்! இல்லாவிட்டால் முருகன் கோயில் குருக்கள் மகன் பி. ஏ., எல். டி. ஆவானேன்? தங்க வியாபாரி தவிடு விற்கப் போவானேன்? பால் பாயாசம் இருக்கப் பச்சரிசிக் கஞ்சிக்குத் தவிப்பானேன்?

சுப்பிரமணியத்தின் நாட்களிலேதான் ஒரு பெரிய புரட்சி நடந்துவிட்டது. அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆதித் திராவிடப் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சேரியார் கேட்டார்கள். ஆனால் மற்ற வரோ மறுத்துவிட்டனர். இந்த மறுப்பிற்கு முக்கிய மான காரணம் ஊரிலே உள்ள இரண்டு 'பெரும் புள்ளி களின்' தூண்டுதல்தான். ஒருவர் குருவப்பா, சுப்பிர மணியத்தின் சொந்தத் தந்தை. மற்றவர் வைதிகப்பிள்ளை, ஊரிலே பெரும்பண்ணை! ஆனால் இதைக்கண்டு சேரியார் நடுங்கவில்லை. ஏன்? அங்கேயும் ஒரு குறிப்பிடத்தக்க தீரன் இருந்தான்.

வீரன் என்றால் பெயருக்கேற்ற காரியம் செய்யக் கூடியவன் என்று எவரும் சொல்வர். ஊரில் உள்ள பெரிய சாதிக்காரர்களே வீரப்பிள்ளையென்று வாலொட்டிக் கூப்பிடுவார்கள் என்று சொன்னால் வீரனின் தீரச் செயல்களைப்பற்றி எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ...! அந்தச் சேரித் தலைவர் தனது பிடியை விடவே இல்லை. அவர்கள் குலப்பிள்ளைகளை அங்கு சேர்த்து, அவர்கள் படித்துத் திரும்புவதை அவரது கண்களால் பார்க்க வேண்டும் என்று துடித்தார்.

வீரனார் அவசரப்படவில்லை; அதற்காக அடங்கியும் விடவில்லை. சாதியென்ற மதுவருந்திய மற்றவரோ ஆத் திரத் திருக்கூத்தாடினர்.

படிப்பு என்பது நல்ல காற்று. அது எவர் மீதும் படும், தொடும்! அதை நிறுத்த முயற்சி செய்கிறார்கள் புத்திசாலிகள்......! ஆற்று வெள்ளத்திற்கு அணை, வைக்கோல் துரும்புகள். அறிவுத் தாகத்தை அடக்க ஓடி வரும் இளம் பிள்ளைகளைத் தடுக்கச் சாதியணை, சாத்திரத் துணை இதற்கு......! 'கலைமகள்' பூசைக்கு வருகிற பக்தர்களைத் தடுக்கிறார்கள், பக்திமான்கள்!

வீரனார் எதிர்ப்பு முன்னணி அமைத்தார். அதற்கு ஏற்ற திட்டமும் போட்டார்.

பத்துப் பிள்ளைகள் மறுநாள் காலை அந்தப் பள்ளிக்குப் போகவேண்டும். அந்தத் தலைமையாசிரியர் மறுக்க வேண்டும். அதனைச் சாட்சியோடு ஆளவந்திருக்கும் தலைவர்களுக்கு அனுப்பவேண்டும். பிறகு அவர்களின் நேரடியான நடவக்கைகளைப் பார்க்கவேண்டும் என்று திட்டமிட்டார். அதற்குப் பிள்ளைகள் வேண்டுமே......! யார் அனுப்புவார்கள்? அவர்கள் அடித்துக் கொன்றாலும் கொன்றுவிடுவார்கள். அந்த ஊராருக்குள்ள சாதி வெறியின் அளவு தெரியுமே...ஒரு சமயம் கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை எடுக்கத் துடித்தோடிய முனியனைத் தடுத்துவிட்டார்கள். குழந்தை இறந்தாலும் கிணற்று நீரின் தூய்மை கெடக்கூடாது என்று சொன்னவர்கள் அந்த ஊரார். நெய் போட்டுச் சாப்பிடதற்காகத் தடி கொண்டு தாக்கியிருந்தார்கள். தெருவில் தெரியாமல் நுழைந்த வெளியூர் வெள்ளைச்சாமியை புளிய மிலாறினால் அடித்திருக்கிறார்கள். கோடை வெயிலில் தாகந் தாங்காமல் குளத்தில் நீர் அள்ளிக் குடித்ததற்காகக் கட்டி வைத்து உதைத்திருக்கிறார்கள். முருகன் கோவிலின் வெளிவாயில் புறத்தில் தவறிப்போய் உள்ளே சென்ற மாட்டை ஓட்டி வந்து மந்தையுடன் சேர்ப்பதற்காகப் போன மருதப்பனைப் பிணமாக்கிவிட்டார்களே......! இவ்

வளவு துயரக் கதைகளைக் கண்ட பிறகும் துணிந்து பிள்ளைகளை அனுப்புவார்களா?

வீரனார் தன் மகன் சேரனையே அழைத்தார். அவனுடன் இன்னுஞ் சிலரையும் சேர்த்து அனுப்ப வேண்டுமே! பக்கத்து வீட்டுப் பரமன் மகள் பாக்கியத்தையும் அனுப்பக் கேட்டுக் கொண்டார். அவரும் கொஞ்சம் தயக்கத்துடன் ஒத்துக்கொண்டார். ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள 'லேபர்' பள்ளியில் படித்துவந்த இன்னும் எட்டுப் பிள்ளைகளையும் சேர்ந்தார். ஆகப் பதின்மர் அறப்போரில் ஈடுபட மறுநாள் காலையில் புறப்பட்டுச் சென்றனர்.

ஊரினுள் நுழைந்து சென்றனர். யாருமே தடுத்துச் சொல்லவில்லை. அவர்களை நிறுத்தவும் இல்லை.

பள்ளியின் வாயிலிலே போய் நின்றனர். கடுகடுப்போடு சுப்பரமணியன் வந்தார்.

"என்ன வேண்டும்...?" — அதிகாரத்தோடு கேட்டார்.

"நாங்கள் இங்கு படிக்கவேண்டும்!"—சேரன் சொன்னான் கணீரென்று! பாக்கியம் அவன் கைகளைப் பற்றியபடி பயந்துகொண்டு நின்றிருந்தாள்.

"அது முடியாது"

"காரணம்...?"

"உங்களைச் சண்டாளர்களாக ஆண்டவன் பிறப்பித்தது......"

"அதே ஆண்டவன் தான் இப்பொழுது எங்களை அனுப்பியிருக்கிறார்" — கேலி கலந்திருந்தது சேரன் குரலில்.

"வாயாடி நாய்......பறக்கழுதை...வாயை மூடுடா! சாண்பயல், சட்டம் பேசுறான்—அடிவிழும்—எல்லாரும் ஓடிப் போங்கடா"

"ஓய், அதிகம் பேசவேண்டாம். எங்களைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று எழுதிக் கொடும். நாங்கள் போய்விடுகிறோம்"

"எல்லாம் உங்க அப்பன் சொல்லிக் கொடுத்த பாடமா—? அதெல்லாம் முடியாது. நான் எழுதிக் கொடுத்தால் சர்க்காருக்கு அனுப்பிக் கிராண்டில் மண்ணைப் போடலான்னு பார்க்கிறானு உங்க அப்பன்"

சேரன் மீறினன். பதின்மரும் உள்ளே சென்றனர். தலைமையாசிரியர் எதையும் செய்ய முடியவில்லை. அவர்களை ஒன்றும் பேசாமல் சேர்த்துக் கொண்டார். ஊர்ப் பெரியவர்களிடம் வேதாந்தம் பேசித் தப்பித்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டார். நம் நாட்டுச் சம்பிர தாயம் ஒரு பந்து!—எப்படி உருட்டி விட்டாலும் வித்தியாசம் தெரியாது! அது ஒரு சுழலும் பொம்மை. சமூகம் என்ற தொட்டிலில் தூங்கும் மக்கள் எனும் இளங் குழவியை அறியாமைத் தூக்கத்திலாழ்த்த, சம்பிரதாயப் பொம்மையை மேலே கட்டிவிட்டு, விருப்பப்பட்ட பக்கம் சுற்ற விடுகிறார்கள். சுப்பிரமணியருக்குத் தெரியும் அவர்களைச் சேர்க்காவிட்டால் வருந்தொல்லைகள்—ஆகவே படிந்துவிட்டார்.

அன்று சேரனுக்குச் சேரியிலே அமோகமான வரவேற்பு—அன்று பாக்கியம் பதினொரு வயதுப் பெண். அவனது துணிகரமான போக்கைக் கண்டு சேரன்மீது ஒரு பாசம் பிறந்துவிட்டது. அவள் எல்லாவற்றையும் மறந்து விட்டாள். சின்னவயதில் அவன் செய்த எவ்வளவோ துன்புறுத்தல்களையும், உதாசீனத்தையும் மறந்துவிட்டாள். எடுத்ததற்கெல்லாம் தலையிலே குட்டு

வான்; விக்கி விக்கியழுவாள். ஆனால் வெளியில் சொல்ல மாட்டாள். அவள் தாய் இறந்துவிட்டாள். தந்தை எப்பொழுதாவது அவள் அழுவதைப் பார்த்துக் கேட்டு விட்டால் எதையாவது புளுகிவிடுவாள். சேரனைக் காட்டிக்கொடுக்க அவள் மனம் என்றுமே துணிந்த தில்லை.

ஒரு நாள் நல்ல நிலவொளியில் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடினார்கள். பாக்கியம் இருளிலே போய் ஒளிந்து கொண்டாள். அதே இடத்தில் சேரனும் ஒளிந்து கொள்ள வந்தான். பாக்கியம் அங்கிருந்தது தெரியவில்லை. ஆனால் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண் டாள் பாக்கியம்.

"சீ, கருப்பி! என்னைத் தொடாதே" என்று சீறினான்.

அவள் தேம்பித் தேம்பியழுதாள்.

"கருப்பி, ஓடு...உன்னை ஆட்டத்திற்குச் சேர்த்துக் கொள்ள முடியாது"—நெருப்பில் எண்ணெயைத் தெளித் தான்!

அவள் அழ, அழ அவன் மனம் குழைந்தது, நெஞ்சு நெகிழ்ந்தது: பரிதாபத்தால் மட்டுமல்ல, பயத்தாலும்!

பாக்கியம் அவளுடைய தந்தையிடம் சொல்லி உதை வாங்கி வைப்பாளோ என்ற அச்சத்தாலும் அவள் அழுகையை நிறுத்த வேண்டும் என்று பார்த்தான். அவளைத் தழுவிக்கொண்டு தேற்றினான். அவள் பாவாடை முனையினாலே அவளது கண்ணைத் துடைத்து அவளை அமைதிப் படுத்தினான். பாக்கியம் அவன்மீது சாய்ந்து கொண்டே கெஞ்சினாள்.

"சேரா! என்னைத் திட்டாதே! இனிமேல்...எனக் கென்னவோ உன்னோடேயே இருக்கணும் போலிருக்கு!

நீ மட்டும் என்னைக் குட்டியும் திட்டியும் விரட்டிரியே... என்னைப் பிடிக்கவில்லையா...?" — குழந்தை உள்ளம் பேசிற்று!

"இனிமேல் இல்லே... அடிக்கவே இல்லே... அப்பா கிட்டே சொல்லிவிடாதே"—இளமை பதில் கூறிற்று!

அந்த இருளில் குழந்தை நெஞ்சங்கள் இணைப்புத் திட்டம் போட்டன... மற்ற பிள்ளைகள் கூவியபடியே அங்கு தேடி வந்துவிட்டனர்.

இந்தப் பழைய நாள் நிகழ்ச்சி அவள் மனத்தில் பட்டென்று தைத்தது.

இளம் பருவத்திலே இணைந்திருந்து பிறகு படிப்பிற் காகப் பிரிந்து சென்றுவிட்டான். இப்பொழுது எம். ஏ. பட்டம் வாங்கப்போகிறான். கல்லூரியில் இருந்த இத்தனை யாண்டுகளாக அவளைப்பற்றி நினைவெழுந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவளுக்கு மட்டும் பேசவேண்டும் என்று கோடி யாசை... ஆனால் அவன் 'பிகு'வுடன் போய் விட்டான். இப்பொழுது வலுவில் வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறான், பாக்கியத்தைப் பார்க்க வேண்டு மென்று வருகிறான்.

சேரன் பாக்கியத்தை நாடி வருகிறான்? அவன் பிணியாளனல்ல, நர்சாக நடிக்க! நண்பனாக இருந்தாலும் இளமை வழியும் ஒரு நங்கையைப் பார்க்க வலுவில் வரு கிறான் என்றால் உள் எண்ணம் ஏதாவது இருக்கவேண்டும். 'காதலடி கற்கண்டே' என்று நிச்சயமாக அவன் சொல்லப்போகிறான். காதல்... அந்த மோகனமான மூன் றெழுத்துக்களால் எத்தனை சோகக் கதைகள், எத்தனை தோல்வி அத்தியாயங்கள், எவ்வளவு முறிவுப் படலங்கள், பிரிவுக் காண்டங்கள்... உலகில் கணக்கிலடங்கா! அதைச் சொல்லவே வரட்டுமே, அவள் உடனே பணிந்து விடலாமா? பெண்மையின் தன்மை பொசுங்கிவிடாதா?

அவளுக்கு மட்டும் அவன்மீது விருப்பமில்லையா? உறுதியாக உண்டு. அதற்காக வந்து நுழைவதற்குள் பகட்டான புடைவையைக் கட்டிக்கொண்டு, பகல் வேடம்போல 'பவுடரை' அடித்துக்கொண்டு பல்லிளித்துக்கொண்டு 'வாரும், என் கண்ணாளரே, வந்தெனக்கொரு முத்தந் தாரும் என் நேசக் காதலரே' என்று பாடவேண்டுமா? அப்படிப் பாடினால் அவன் பெண்மையை மிக எளிதில் ஏறி மிதித்து துவைத்துவிட்டு ஓடிவிட்டால்... முடியாதா? இதுவரை எத்தனை அபலைகள் அந்தப் பயங்கர நிகழ்ச்சியைப் பார்த்துக் கண்களிலிருந்து குருதியைக் கக்கியிருக்கிறார்கள்!

என்ன இருந்தாலும் காதல் உள்ளத்துடன் வரும் அவனை வாட்டலாமா? அவன் மனம் உடைந்துவிட்டால்...? காதல், கண்டனமாக மாறிவிட்டால்...? அவன் படிப்பால் அகம்பாவம் பிடித்துக்கொண்ட கர்வி என்று கருதி விட்டால்......பதவியால் பண்பிழந்த தசைப் பிண்டம் என்று முடிவு கட்டிவிட்டால்......அல்லது பண்டைநாள் வெறுப்பைத் திருப்பிக் கக்குவதாக எண்ணி வருந்தித் திரும்பிவிட்டால்...ஒரு நாளும் இவைகளெல்லாம் நடக்கவே நடக்காது; காதல் ஒரு ரப்பர் கயிறு!—இழுக்க, இழுக்க நீளும், அதிக தூரம் பாய்ந்தோடும்.

பெண் சிரித்தால் போச்சு...புகையிலையை விரித்தால் போச்சு...என்பார்கள். என்ன போய்விடும்? தாமும் காரமும் மறைந்துவிடும்.

சிதம்பர இரகசியம் என்று ஒரு வெளியைக் காட்ட ஐந்து வெள்ளிப் பணங்கள் வாங்குகிறார்களாம் கோயிலில். அவ்வளவுதான் அதற்குப் மதிப்புப் போலும்! ஒரு பெண்ணின் சிரிப்பிற்காக பல மண்டலங்களே மண் மேடான நிகழ்ச்சிகள் ஏராளம் உண்டு. ஆகவேதான் சோனைச் சோரவிட்டுச் சிரிக்கவேண்டும். அவன் சலிப் படைகிற பொழுது தட்டிவிடவேண்டும். தாபத்தால்

துடிக்க விட்டுச் சிரிக்கவேண்டும். அவனது பருவத் துடிப்பைக் கண்டு களிக்கவேண்டும். அவன் கெஞ்சக் கெஞ்ச...அவள் தூரவிலகிக்கொண்டு போகவேண்டும். அவன் வெறுப்படைகிற நேரத்தில் நம்பிக்கை யூட்டுகிற மாதிரியில் நடந்து கொள்ள வேண்டும்......

பாக்கியம் இப்படிப் பலபட எண்ணிக்கொண்டிருந்தாள். அவளையுமறியாமல் சிரித்துக் கொண்டாள் இடையிடையே...! இத்தனை 'திருக்கூத்தை'யும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தங்கம்மா. அவள் அம்மாவுக்கும் பித்து, கித்து...பிடித்ததுவிட்டதோ என்று அச்சப்பட்டாள். அவள் அனுபவக் களஞ்சியம்...ஆசை மணாளன் எவனோ தன் மனத்தில் பட்டதை அட்டையிலே கிறுக்கியனுப்பிவிட்டான் என்பதைப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை.

"அம்மா..."

"என்ன தங்கம்...?"

"ஏன் இப்படிப் பூரித்துப் போறீங்க...எனக்குச் சொல்லக்கூடாதா? அத்தை மகன் வருவதாக எழுதியிருக்கிறா...?" என்று சிரித்தாள்.

அவள் தலை தாழ்ந்தது. நாணத்தால் பெண்மையின் முழுப் பொலிவும் அவளது முகத்தில் தோன்றி நிறைந்தது!

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை......ஒரு நண்பர் வருவதாக எழுதியிருக்கிறார். எப்பொழுது என்றுகூடப் குறிக்கவில்லை.!"

"கார்டுபோட வீடு தெரிந்தவருக்கு நேரில் வரவா வீடு தெரியாது...வரட்டுமம்மா!"

தங்கம்மா இரவு சமையல் செய்ய 'நள தர்பார்' இடத்திற்குச் சென்று விட்டாள். பாக்கியம் சாய்வு

நாற்காலியில் சாய்ந்தபடியே வானத்தைப் பார்த்தாள். நட்சத்திரச் சரத்தை அறுத்துக் கொட்டிவிட்டு குழந்தை சந்திரன் அவைகளைப் பொறுக்கித் தொடுக்க ஓடிவந்து கொண்டிருந்தான்.

"அம்மா சாப்பிடவில்லையா...?"

தங்கம்மாவின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். அப்பொழுதுதான் சுவரில் மாட்டியிருந்த நாழிகை வட்டில் டண், டண்......என ஒன்பது மணியடித்தது! அதுவரையிலும் அவள் மனம் எங்கெங்கோ சுற்றி வந்து நின்றது.

2

அந்தக் கடிதத்தை எழுதி மாணவ விடுதியின் முன்னுள்ள அஞ்சல் பெட்டியில் போட்டதிலிருந்து சேரனின் மனம் குதித்தது, கூத்தாடிற்று......சற்று தாமதித்து அஞ்சி நடுங்கி யொடுங்கியது! பாக்கியத்தின் காதலைப் பெறும் பாக்கியமிருந்தால் மகிழ்ச்சிதான்...... எதிரொலி போல, சீற்றத்தால் கூற்றம்போல நின்று வர வேற்றால்...? ஆகவேதான் தீயிலே சிக்கிய மானுமியைப் போல அவன் மனம் திக்குமுக்காடிற்று! அதனால்தான் மாடியிலிருந்து அந்த அஞ்சல் பெட்டியை......அதற்கு யார்தான் இரத்த நிறத்தைப் பூசவேண்டும் என்று சொன்னார்களோ...அவர் மட்டும் கிடைத்தால் அவர் புத்திக்கு மெச்சி ஒரு சிவப்புப் பட்டுக் கைக்குட்டையைப் பரிசளிக்கலாம்!...பயத்தோடு அவன் பார்த்தான். அது தன் குருதிக் குறுஞ்சிரிப்பால் அவனைக் கேலியோடு பார்த்தது. சிவப்புக் கொடியைக் காட்டினால் புகைவண்டி நின்றுவிடுகிறது. அதுபோல அந்த 'டேன்ஜர் சிக்னல்'

அவனது மன வண்டியைச் சட்டென்று நிறுத்திவிட்டது!

அந்த அஞ்சல் பெட்டி......சாதாரண பெட்டியா அது......இல்லை, இல்லை. அது, எவியா கூறியதுபோல எதையும் விழுங்கிவிடும் துவாரப்பெட்டி மட்டுமல்ல, அது ஒரு தனியுலகம்! அங்கு எதையும் பார்க்கலாம்.

மண்ணைத் தின்ற கண்ணன் வாயில் ஈரேழு உலகங்களையும் பார்த்தாளாம் அவனது வளர்ப்புத் தாய்... ஆனால் இதன் வாயை மட்டும் திறக்கச்செய்து பார்த்தால் வாழ்க்கையென்ற உலகத்தையே பார்க்கலாம்! பண மனுப்புக...என்ற விண்ணப்பங்கள் மட்டுமல்ல அங்கு நிறைந்திருக்கும் கடிதங்கள். கல்லூரிகளிலிருந்து செல்லும் கடிதங்களை மட்டும் பொறுக்கி யெடுத்து வைத்துப் பேசுவோம்! 'ஜாஸ்மைன்' வாசனை நீரை எடுத்துப் பூசிக்கொண்டு அந்தக் கையுடனே எழுதிய கடிதங்கள் இருக்கும்...இம்மாதம் இருநூறு ரூபாய் அனுப்பினீர்கள். இரண்டு 'ட்வீட் பேன்ட்டுகள்' தைத்துவிட்டேன். 'வெல்வெட் கோட்' வேண்டும். ஆகவே, உடனே இன்னும் நூறு ரூபாய் அனுப்புங்கள் என்ற கட்டளைக் கலிப்பா பாடுவன உண்டு. கடிதங்களில் கண்ணீர்ச் சொட்டுக்களைத் தெளித்து அனுப்பியவையும் உண்டு...அப்பா, 'ஸ்காலர்ஷிப்' வரவில்லை. நீங்கள் இருந்த ஆடுகளையும், அம்மாவின் அந்த நாள் தோடுகளையும் வைத்துக் கொடுத்த எழுபத்து இரண்டு ரூபாய்களும் தீர்ந்து போய் நாட்கள் பலவாகிவிட்டன. இன்னும் பத்து, பதினைந்து ரூபாய் அனுப்பினால் பணம் வந்ததும் திருப்பியனுப்பிவிடுகிறேன்...இந்த ரகந்தான் ஏராளம்! குமரிகளுக்குத் தூது மடல்கள் இருக்கலாம்...முறிவுச் சீட்டுகளும் பல காணக்கிடைக்கும். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், கதைகள்... 'ரேடியோ'வுக்கு நாடகங்கள்! பேச்சுக்கள்...இப்படிக் கிடைப்பது அரிதிலும் அரிது.

ஆகவே அதனை அஞ்சல் பெட்டியென்று அழைப்பதை விட தூதுவர் கூடாரம் என்று சொல்லலாமே...!

சேரன் கடிதத்தைச் சேர்த்த பிறகே சிந்தித்தான். போட்டது சரியா, தவறு என்று முடிவுகட்ட முடிய வில்லை. ஆனால் அந்தக் கடிதம் அவசரத்தின் குழந்தை யல்ல, ஆர அமர யோசித்தபின் ஏற்பட்ட திடமுடிவின் அறுவடை! எத்தனை முறை எழுதியெழுதிக் கிழித்துப் போட்டிருப்பான். கடைசியாக அமைந்த வார்த்தை களையே அந்த அஞ்சலட்டையில் எழுதினான். அதை அறுபது தடவைகளுக்குமேல் படித்திருப்பான். ஆனல் இன்னமும் அவன் மனம் அமைதி யடையவில்லை!

அப்பொழுதுதான் ஈருருளை வண்டியில் வந்து சேர்ந்தான் நீலன். அவன் நகரத்திலிருந்து வந்து படிப் பவன். சேரன் அறையிலேதான் வழக்கமாகத் தங்கு வான். அன்று விடுமுறையாக இருந்தும் வந்து சேர்ந் தான். நூல் நிலையத்தில் ஏதேனும் ஏடுகளைப் புரட்டி அதில் புன்தந்துகொள்ள வேண்டுமென்று வந்திருப்பான். நீலனைக் கல்லூரியில் ஆச்சரியக் கண்களுடன் பார்ப்பர். பொறாமைக் கண்கள் உண்டு... அளவில் குறைவு.

பலர் அவனிடம் பேச விழைவர். என்? குறைந்த வார்த்தைகளில் அழகாக எதையும் விளக்கிவிடுவான். சேரன் அவனைக் கண்டதும் கொஞ்சம் ஆறுதலடைந்தான். அவ னிடம் உள்ளத்தைக்கூறி அவனது அறிவுரைகளைக் கேட்டுத் தெளியலாம் என்று எண்ணி மகிழ்ந்து அவனை அன்பு ததும்ப, ஆர்வம் வழிய வழிய, சிரிப்புக் குலுங்கி நடக்க வரவேற்றான்.

இருவரும் அறைக்குச் சென்றனர்.

"சேரா! இன்று காரகா எழுதிய 'நான் கண்ணீரைச் சிந்தினேன்' என்ற ஏட்டை எப்படியாவது தேடிப் பிடித்து எடுத்துவிட வேண்டும்" என்றான்.

"புத்தகப்பித்து—படிப்புப் பைத்தியம்" என்றான் எரிச்சலோடு!

"என்னப்பா, சீறி விழுகிறாய்? உன் முகம் வாடியிருக்கிறது. காரணம் யாதோ?"—நீலன் கேட்டான் பரிவோடு!

"நீலா, என் மனம் இன்று ஒரு களம்—அங்கு போர் நடக்கிறது—மனப்போர், நண்பா, எண்ணச் சண்டை, கருத்துக் 'குஸ்தி', சிந்தனை யுத்தம்!

"மனப்போர் — அதென்னப்பா — போரஸ் அலக்சாந்தர் சண்டையா?"

"கேலியா..."

"எந்த இராசா, எந்த இராசவோடு சண்டை போடுகிறார்... எந்த மண்ணைப் பிடித்து, எந்தப் பெண்ணைத் தூக்கிட...விளக்கமாகச் சொல்லப்பா?"

"நீலா......கிண்டல் போதும். உள்ளதைச் சொல்கிறேன்...கேட்பாயா?..."

நீலன் வேடிக்கையைச் சுருக்கிக் கொண்டான். அவனது கண்கள் அகல விரிந்தன. நெற்றி சுருங்கி விரிந்தது! சேரன் ஏதோ ஒரு நிகழ்ச்சியால் மிகவும் தத்தளிக்கிறான் என்று மட்டும் புரிந்தது. ஆகவே சேரன் பேசிய வார்த்தைகளைப் பொறுமையோடு கேட்டான். மனம், மணிமேகலையின் கையிலிருந்த கிண்டியைப்போல விசித்திரமான பாத்திரம். துன்பச் சோற்றை அள்ளிக் கொடுக்கக் கொடுக்கக் குறையும், பிறகு மறையும்... மடிந்தே விடும். ஆனால் இன்பச் சோற்றை எடுத்துப் பகிர்ந்தளிக்க அளிக்க வளரும், பெருகும்! அதனையுணர்ந்தே நீலன் சேரனின் துன்பச் சோற்றைக் கையிலேந்தி வாங்கிக் கொண்டிருந்தான்.

"பாக்கியம் என்றொரு பெண்..."—சேரனின் தொடக்கம் இப்படி.

"பெண், நச்சு மலரும் அதை முறிக்கும் இலையு முள்ள ஒரு விசித்திரமான கொடி"—இளந் தத்துவ ஞானியின் விளக்கம் இது.

"அவள் எங்கள் ஊர்...பக்கத்து வீடு...பள்ளித் தோழி...பால பருவத்துத் துணை விளையாட்டுக்காரி."

"ஆகவே இப்போழுது அவள் வீட்டுக்காரியாக வேட்கை பிறந்திருக்குமே...!"

"அதனால்தானே இத்தனை மனத்தொல்லைகளும்..."—சலிப்போடு சொன்னான் சேரன்.

"காதல், தொல்லைகளின் ஊற்றுக்கண்..." என்றான் நீலன்.

"அது உண்மையிலும் உண்மை" என்றான் சேரன்.

"அவ்வளவு சுருக்கலாமா செய்தியை, தொடங்கியதை விரிவாக விளக்கமாகச் சொல்லிவிடு. பாகவதத்தைப் பாதியிலே முடித்தால் பாவம்...சொன்னவருக்கும், கேட்டவருக்குங்கூட!"—சிரித்தான் நீலன்.

"அவள் அழகியல்லள்!"

"அப்படியென்றால்...?"

"அவள் உருவ அமைப்பு, நன்றாக இல்லை"

"அவளது உள்ளமும், அதில் வட்டமிடும் எண்ணங்களும் சரியான அமைப்பிலிருந்தால் போதுமே"

"அவள் நிறம் கருப்பு"

"நிறம் அல்ல அழகை நிர்ணயிப்பது. நிறம் மங்கும். சிவப்பு மங்கி மங்கிக் கருப்பாகும். கருப்பு கருப்பாகவே இருக்கும்!"

"இருந்தாலும் அவளிடம் பாசம் வளர்ந்து விட்டது!"

"அவள் அறிவாளியாக இருப்பாள்!"

"ஆம் நீலா—அவள் படித்தவள்—'நர்சா'க இருக்கிருள் திருச்சியில்!"

பிறகு சேரன் பேசினுன்—அவனது மனப் போரின் கடுமை முழுவதும் குறைகிறவரை பேசினுன்.

சின்னஞ்சிறு வயதில் பாக்கியம் அவனிடம் நெருங்கியபோதெல்லாம் விரட்டியிருக்கிருன்—விலகியும் ஓடியிருக்கிருன். ஆனல் இன்ரே சேரன் பாக்கியத்தின் அணைப்பு கிடைக்குமா என்று ஏங்குகிருன். அன்று 'கருப்பி' என்று அடித்து விரட்டினுன். இன்று கண்மணியே கற்கண்டே—என்று கவிதை பாடுகிருன். அன்று ஒட்ட வந்த போது எட்டிப்போடி குட்டி யெனத் திட்டியிருக்கிருன். ஆனல் இப்போதோ அவள் இவனைப்பற்றி நினைக்காத நேரத்தில் அங்கே வரலாமோ, அருள் தரலாமோ—என்று பத்திப் பாசுரம் இசைக்கிருன்! என்ன விசித்திரம்? பருவகாலக் குரும்பின் பயங்கர நடனம்—இளமைத் துள்ளலின் விபரீதப் போராட்டம்... அம்மம்ம, சொல்லுந்தரத்ததோ! மலரிடம் மணமும், நிறமும் ஏன் இருக்கின்றன?......பெண்ணிடம் பருவ மலர்ச்சியும், கவர்ச்சியும், அதற்காகத்தான் குடியிருக்கின்றன! வண்டு பாடுகிறது வனப்புள்ள மலர்த்தோட்டத்தில்!

அன்று புகைவண்டி நிலயத்தில் பாக்கியத்தை ஏன் பார்த்தான்......பார்க்காமலிருந்தால் இந்த மனப்போர் எழுந்திருக்காதே! புதிய 'டாக்டர்' வருகிருர் என்று வரவேற்க ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தினிடையிலேதான் அந்த ஒயிலாள் நின்று

கொண்டிருந்தாள். சோன் பார்த்தான்...ஆச்சரியத்தால் அச்சுப் பொம்மையானான். அவனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை. பாக்கியத்தின் எதிர்கால உருவம் இப்படி மனத்தை உருக்கும் வடிவாக இருக்கும் என்று அவன் எண்ணவே இல்லை! செந்நிறப் 'பார்டர்' வெள்ளைப் புடைவையில் அவளது தோற்றம் அவனை ஆட்டியது—அவன் நெஞ்சத்தை ஊக்கியது—சிந்தனையைக் கலக்கியது—அவனையே அவனது மனச்சாட்சி அறைந்து அறைந்து கேட்டது! அவளைப் பார்த்துப் பேசவேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை வந்துவிட்டது! இருந்தாலும் அந்தக் கூட்டத்திற்கிடையில் அவளை அழைத்துப் பேசுவது அவ்வளவு நன்றாக இருக்குமா—! கொஞ்சம் காலந்தாழ்த்துப் பார்க்கலாம் என்றால் அவன் போக வேண்டிய வண்டியின் 'கார்டும்' 'டிரைவர்களும்' பக்காத் துரோகிகள்...கொடியை ஆட்டிவிட்டார் அந்த 'கார்டு—சத்தங் கொடுத்துவிட்டார்கள் வண்டியோட்டிகள்! பாக்கியத்தை அவன் பார்க்கவேண்டும் என்று கொஞ்ச நேரம் நிறுத்துகிறார்களா என்ன...?

அந்தத் தோற்றம்—பாக்கியத்தின் இரயிலடி தரிசனம்—அவனைப் பக்தனாக மாற்றிவிட்டது. பலநாள் சிந்தித்துப் பிறகு அந்தக் கடிதம் எழுதினான். போட்டும் விட்டான். இப்பொழுது மீண்டும் அதைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டான். போட்டதினால் ஏற்படும் விளைவுகள் எப்படி எப்படி இருக்குமோ என்று அவன் எண்ணினான்.

நீலனிடம் எதையும் ஒளிக்காமல், மறைக்காமல் சொல்லி முடித்தான். பிறகு நீலனின் விடையை எதிர் பார்த்து அமைதியாக அவன் முகத்தைப் பார்த்தான்!

"பாக்கியத்தின் மீது பாய்ந்துள்ள பாசத்திற்குப் பெயர் என்னப்பா?"

"காதல் என்றுதான் கருதுகின்றேன். ஆனால், அதில் எனக்கு நம்பிக்கையில்லை!"

"இலக்கியங்கள் பலவற்றில்...,'

"படித்திருக்கிறேன்...எழுத்தாளர்கள் மண்டியிலே விற்கப்படும் விசித்திரமான பண்டம் அது என்று முடிவு கட்டியும் இருக்கிறேன். ஆனால் அந்த எண்ணம் இப்பொழுது மாறுகிறது!"

"அப்படியானால் இப்பொழுது சகுந்தலை, துஷ்யந்தன் தொடர்பு காதல் என்கிறாய்?"

"காளிதாசர் அப்படித்தானே சொல்கிறார்!"

"காளிதாசர் கிடக்கட்டும்—பாக்கியதாசர் என்ன சொல்கிறார்?"

"காதல் என்றுதான்!"

"அப்படியானால் காதல் என்பதன் இலக்கணத்தை எனக்குச் சொல்லலாமா?"

"தத்துவப் பெரியாரே, தாங்களே சொல்லுங்கள்!"

இப்பொழுதுதான் சேரன் கொஞ்சம் சிரித்தான்.

நீலன் பேசினான்—

காதல் ஒரு 'கார்பன் பேபர்'—ஆண் என்ற மேல் தாளில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை அப்படியே பெண்ணாகிய கீழ்த் தாளில் அமைக்கவேண்டும். இதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். சேரன் மனதிலே மட்டும் பாக்கியம் நிறைந்திருக்கிறாளே ஒழிய, அவள் மனதில் யார் இருக்கிறார்கள் என்று இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அதற்குள் சேரன்—அதுவும் காதலில் நம்பிக்கையில்லாது நேற்று வரை காதலாவது, கொத்தவரங்காயாவது என்று கேலி பேசிய வாலிபன்

இன்று காதல் கொண்டுவிட்டேன் என்று பிதற்று கின்ருன். எடை நிறுக்க, பொருள் தாங்கும் இரண்டு தட்டுகள் வேண்டும் துலாக்கோலுக்கு—உருள இரண்டு சக்கரங்கள் உண்டு வண்டிக்கு—வாழ்க்கை நிலத்தில் காதல் வண்டியோட ஆண்—பெண் எருதுகள் வேண்டும்.

சகுந்தலையை வனத்திலே கண்டு, பேசி, காந்தர்வ மணம் முடிக்கிறேன் என்று கூறி காதல் நாவலின் கடைசி அத்தியாயத்தையும் முடித்துவிடுகிருன் துஷ்யந்தன். சேரன் அப்படியே விரும்புகின்ருனு? காதல் என்று பேசி பெண்மையைக் களங்கப்படுத்தி விடுவதுதானு முறை, நெறி, அறம்...? காந்தர்வ மணம் என்று சொல்வதெல் லாம் அவசரகோலத்தின் அள்ளித் தெளிப்பு வேலைதானு? அடக்கத் திறமில்லாத முறையினுல் பெண்மையை ஏமாற்றிப் பலியிடுவதா? இது காதலா—காமமா...இரண்டு மில்லையா......புதுப் பெயரிட வேண்டிய வாழ்க்கைத் திருவிழாவா?

சாகுந்தலத்தின் மேல் ஏடுகளைப் புரட்டினுல் அதன் விபரீதம் நம்மைப் பார்த்துப் பயங்கரமாக வெறிச் சிரிப்பு வீசும். சகுந்தலையின் வயிற்றிலே குழந்தை, துஷ்யந்தன் மனதை மாற்ற சாபம்...! அந்தக்காலக் காளிதாசருக்கு மனதைக் கெடுக்க முனிவரையும் அவரிட்ட சாபத்தையும் துணைக்கு வரும்படி அழைக்க முடிந்தது. ஆனுல் இன்று சேரன் காலம் மாறுபட்டது. பாக்கியத்தைப்போன்ற பைந்தொடி மகளிர் பலருண்டு. பார்வையாலேயே துர் வாசரின் சாபத்தைவிடக் கடுமையான சாபங்களுக்கு உள்ளாக்குவார்கள். துர்வாசரின் சாபம் அவனின் இன்பக் கேணி எழிலரசி ஒருத்தியை மட்டும் மறக்கச் செய்தது. தற்கால சாபம் பெற்றவரையும், உற்ருரையும், ஊராரையுங் கூட மறக்கச் செய்யும். சேரனை அத்தகைய சாபந் தீண்டாமலிருக்குமா? நிச்சயமாக அப்படி திட மனது இருந்தால்தான் அவன் அவளை நெருங்கவேண்டும். சகுந்

தலைக்காவது வானத்திலே இருந்து பறந்து வந்து அழைத்துச் செல்ல தெய்வலோகத் தாய் உண்டு. பாக்கியத்திற்கு அப்படி யார் இருக்கிறார்கள்?

பாக்கியத்தை உண்மையில் மணக்க உறுதிவேண்டும். இதில் கடினமானது என்று சொல்லத்தக்கதாக ஒன்று மில்லை. இருவரும் ஒரே குலம், இனம், ஊர்...படித்தவர். கள்! ஆகவே தடையில்லாத நேரத்தில் நேரடிப் பாதையிலேதான் செல்லவேண்டும்.

ஆகவேதான் சேரன் காதல், கீதல், அது, இது... வென்று இப்பொழுது உருகுவதில் அர்த்தமில்லை. நேராகச் சென்று அவள் மனதையம் அறிந்து பின்னர் ஒத்த எண்ணமிருக்குமானால் காதல் என்று முடிசூட்டு விழா செய்யட்டும்! ஒரு பக்கமான ஆரவாரத்தை வைத்துக் கொண்டு தீர்மானிப்பது தவறு—மாற்றிக் கொள்ள வேண்டியது.— இப்படி நீலன் அறிவுரை நிகழ்த்தினான்

அவன் மேலும்..........

"சாகுந்தல நாடகத்தில் விதூஷகன் என்றொரு பாத்திரம் உண்டே தெரியுமா" என்றான் திடீரென!

"ஏன்...தெரியும்...இருக்கிறான்!" ஆச்சர்யத்தோடு விடையளித்தான்!

"அவனுக்கு என்ன வேலை?"

"அரசனோடு இருந்து அவன் மகிழ்ச்சியைப் பெருக்குவது...வளர்ப்பது!"

"ஆம்...சேரா, அவனைப்போல என்னை நினைத்துக் கொள். இருவருமே செல்வோம் பாக்கியத்திடம்! கவலையை விடுக...எதிர்காலத்தை எண்ணி நட...எனக்கு இந்தத் துறையில் பிறருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவு பயிற்சி உண்டு"

"நீலா...உண்மையில் என்னுடன் வருகிறாயா? நீ வருவதானால் எனக்கு எவ்வளவு ஆறுதல்...என் மனப் போராட்டத்தில் ஒரு திடீர் மாற்றம்"

இருவரும் சிரித்தனர். பிறகு நூல் நிலையத்தை நாடிச் சென்றனர்.

அன்று இரவே திருச்சிக்குப் புறப்பட்டனர் இருவரும். புகைவண்டியில் நல்ல இடமாகப் பார்த்து அமர்ந்தனர். கூட்டம் அதிகமென்றாலும் நிற்கவேண்டிய சாபமிடவில்லை, எஸ். ஐ. ஆர். தெய்வம்!

சேரனுக்குத் தூக்கம் வருமா? இலக்குமணன் காட்டிலே அண்ணனுக்கும் அண்ணியாருக்கும் காவலிருக்க நித்திராதேவியைப் பதினான்கு ஆண்டுகள் 'டைவர்ஸ்' செய்திருந்தாராம். பாக்கியத்தைப் பார்க்கும்வரை தூக்க மாதை விலகியிருக்கச் சொல்ல முடியாதா என்ன சொல்வதென்ன, பொறுமையாலேயே அவள் ஓடிவிட மாட்டாளா? நீலனுக்கு அர்ச்சுனன் கூடச்சென்ற கண்ணன் 'உத்தியோகம்'...ஆகவே இருவரும் பேசிக் கொண்டே சென்றனர்.

"சேரா...காதல் என்று சொல்கிறார்கள். எனக்கு அடியோடு நம்பிக்கையில்லையென்று சொல்ல முடியா விட்டாலும் அதற்கு ஏற்பட்டுள்ள சுமைகள் அத்தனையும் தாங்கும் வலிமையில்லை! இலக்கிய வல்லுநர், எழுத்துத் திறம்படைத்தவர்கள் காலத்திற்குக் காலம் சுமையை அதிகமாக்கிவிட்டனர்! அதற்கு நானே சாட்சி...நான் ஒரு பெண்ணுடன் பேசுவதுண்டு. அவள் பெயர் வில்லி. அவள் என்னிடம் காதல் கொண்டிருப்பதாகத் தெரிந்து கொண்டேன். எனக்கு அப்படியொன்றும் ஏற்படா விட்டாலும் அப்படியிருப்பதாக நடித்தேன்.......நடிக்கிறேன்"

"ஆனாலும் உயிரான பொருளை மட்டும் மறுக்க முடியாது...காதலின் வலிமையை யாரும் எதிர்த்து நிற்க முடியாது?"

"காதல் ஒரு அலங்காரப் பொருள்...வெறுஞ்சுவரில் சித்திரம் தீட்டுவதுபோல"

"நீ சொல்வது விளங்கவில்லையே...நீலா"

"இத்தனை காதல் இலக்கியங்களையும், அன்புக் காவியங்களையும், ஆசை ஏடுகளையும் அறை கூவியழைத்துக் கேட்கிறேன். கடைசியில் எதில் முடிகிறது. தனியறையில் மங்கிய ஒளியில் என்றுதானே முடிகிறது? ஆம், அதைத்தான் சொல்கிறேன். உடற்பசியை மறைக்கவே பயன்படுத்துகிறார்கள். பச்சை அயோக்கியத்தனத்தை மறைக்கப் பசப்பு வார்த்தைகளைப் பயன்படுத்துவதுபோல, வடித்தெடுத்த வஞ்சகத்தை ஒளித்துவைக்கச் சிரிப்புப் புதரைத் தேடுவதைப்போல காதல் அகப்பட்டுத் தவிக்கிறது என்கின்றேன்"

இருளைக் கிழித்துக்கொண்டு புகைவண்டி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. பல நிலையங்களை 'அசட்டை' செய்துவிட்டு ஓட்டம் ஓட்டமாக ஓடிக் கொண்டிருந்தது. இரத்தின, வைர வியாபாரி கருப்பண்ணன் செட்டியார் வந்தால் ஆண்டவன் நடராசன் துள்ளிக் குதிக்கிறார். குருக்களை ஓடோடி வந்து வரவேற்கச் சொல்கிறார். வண்டியோட்டி வரதன் வந்தால் யார் கவலைப்படுகிறார்கள்! வெளிச்சம் போட்ட பெரிய சந்திப்பு நிலையங்களிலே மட்டுமே வண்டி நின்றது. மற்றவை வண்டியோட்டி வரதனின் நிலையையே பெற்றன!

அவர்கள் உட்கார்ந்திருந்த வண்டிக்குச் சீட்டுச் சோதனையாளன் வந்தான் அவர்களுக்குப் பின்புறம் ஒரு குட்டிக் கலகம்...ஒரு குழந்தைக்கு 'டிக்கட்' இல்லையென்பதற்காக மிகவும் கோபித்துக் கொண்டான். அந்தக்

கலவரத்தைக் காதால் கேட்ட எங்கள் பக்கத்து ஆசாமி திரு திருவென விழித்தான். அவன் மனம் ஓடும் புகை வண்டியை விட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது போலும்...! அவன் நழுவ இடம் பார்த்தான். அவன் ஏன் அப்படித் திருட்டுத்தனமாக வரவேண்டும்? இப்பொழுது இப்படி விழிக்க வேண்டும்? அவனுக்குத் தெரியாதா, பொய், பஞ்சமா பாதங்களில் ஒன்று என்று? அவன் பெற்றோர் சொல்லித் தரவில்லையா? தெரிந்தே இப்படிச் செய்கிறானா?...அறியாமல் செய்த குற்றம் பாவமாகாது என்று ஏசு சொல்லியிருக்கிறாராம். ஆனால் அறிந்தே, வேண்டுமென்றே செய்கிற குற்றத்திற்கு என்ன தண்டனை? இப்படிக் கேட்பதைக் காட்டிலும் அப்படிக் குற்றம் செய்யவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது, அதற்குரிய காரணங்கள், காரணங்களால் ஏற்பட்ட சூழ்நிலை என்னவென்று கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

'டிக்கட்' சோதனையாளன் எங்கள் பக்கம் வந்தான். அவன் யார் என்று நினைக்கிறீர்கள்? முகுந்தன்...எங்கள் இருவருக்குமே நெருங்கிய தோழனாக இந்த முகுந்தனே! அவன் கல்லூரியில் இடைநிலை வகுப்புவரை படித்து விட்டுத் தன் படிப்பு பயணத்தை நிறுத்திக் கொண்டான். அவன் எங்களைப் பார்த்ததும் ஆச்சரியமாக, ஆர்வம் ஒழுக ஒழுகப் பார்த்தான். அவன் தொடர்ந்து எல்லோரிடமும் 'டிக்கட்' இருக்கிறதா என்று பார்த்து விட்டுத் திரும்பினான்.

“நீலா, சோா...எங்கே புறப்பட்டீர்கள்? இதை முடித்துவிட்டு வருகிறேன்!” என்றான்.

“என்ன முகுந்தா ... இப்பொழுது எங்கு இருக்கிறாய்?”

“ஓடும் வண்டியில்...”

"அட அதுதான் தெரிகிறதே...நிலையான தங்கு மிடம்?"

"திருச்சி...இப்படி நாடோடி போல ஓடவேண்டும் இரவு பகலென்று பாராமல்!"

முகுந்தன் அவர்களைப் பற்றி விசாரித்தான். அவர்கள் எம். ஏ. வகுப்பின் இறுதி ஆண்டு என்று தெரிந்து மகிழ்ச்சிகொண்டான்; அவர்களைப் பாராட்டினுன். கல்வி யில் முன்னேறிட வேண்டும் என்று அறிவுரை கூறினுன். பிறகு அவர்கள் திருச்சிக்குப் போகிருர்கள் என்று தெரிந்துகொண்டு மிகவும் ஆனந்தப்பட்டான். இரண்டு நாள் ஓய்வுடன் அவன் செல்கிருன். தனது பழைய நண்பர்களைத் தன் அறையில் தங்கச்செய்து விருந்து செய்து அனுப்பத் திட்டமிட்டான்.

"முகுந்தா! நீ எந்தக் கட்சியப்பா?"

"என்னப்பா, திடீர் குண்டு...அதைப்பற்றி இப் பொழுது என்ன?"

"சொல்லேன்—முதலில்!"

"எனக்கு எந்தக் கட்சியும் கிடையாது. கொள்கைகள் உண்டு — கொள்கையைக் கடைப்பிடிப்பேன். ஆனல் கட்சிகளில் சேர்ந்து கூவுவதிலும், ஆர்ப்பாட்டம் செய் வதிலும் எனக்கு விருப்பமிருப்பதில்லை"

"சரி, உனக்குப் பாவத்தில் நம்பிக்கை யுண்டா?" நீலனைச் சேரன் இடை மறித்தான்.

"முகுந்தா, நீலன்தான் எப்பொழுதும் தத்துவ விளக்கம், அனுபவ ஆராய்ச்சி—என்று ஆரம்பித்து நமது வாயைப் பிடுங்குவதில் கைதேர்ந்த கள்வன் என்று உனக்குத் தெரியாதா?"

"சேரனுக்கு இப்பொழுது ஒருவகை வியாதி—வேல்விழி நோய்—அவனுக்கு நம் பேச்சு பிடிக்காது, நீ சொல்லப்பா!"

அவர்கள் ஆராய்ச்சியிலிறங்கி விட்டார்கள். தகாத காரியங்களைச் செய்யாமல் தடுக்க இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களாம் பெரியவர்கள். ஆபீடியுபா ஒரு இடத்தில் சொல்லியுள்ளார், 'இந்திய நாட்டில் எந்தச் சிறு செயலும், நடவடிக்கையும் மதத் தொடர்பற்றிருப்பதில்லை' யென்று. அது அணுவுக்கு அணு உண்மை. ஒன்றைச் செய்யாதே என்று அவர்கள் நேரடியாகச் சொல்லப் பயந்தார்கள். இதைச் செய்தால் இந்த விளைவு ஏற்படும் என்று காட்டினார்கள். விளக்கைத் தொடாதே என்று சொன்னால் குழந்தைகள் கேட்பதில்லை. தொட்டால் சுடுபுண் உண்டாகிவிடும் என்று கொப்புளக் கொடுமையைச் சொன்னால் அஞ்சுகிறார்கள்! மக்கள் உள்ளமும் அப்படி யென்றே கணக்குப் போட்டார்கள். அதுபோலவே இதைச் செய் என்று கட்டளையிட நினைக்கவில்லை. இதைச் செய்தால் அதனால் உனக்கு இன்னது கிடைக்கும் என்று ஆசை காட்டினார்கள். குளிக்கவும், உண்ணவும் மறுத்து அடம் பிடிக்கும் குழந்தைக்குத் திருவிழாவுக்கு அழைத்துப் போவேன், படக்காட்சி காட்டுவேன், பொம்மை வாங்கித் தருவேன் என்று சொல்லிடும் தாயைப்போலவே நடந்து கொண்டார்கள். ஆகவே, தவறைத் திருத்த அந்தப் பழரசம் பூசப்பட்ட வார்த்தை பயன் படுத்தப் படுவதை எதிர்க்கவில்லை. அதற்காக அறியாமையைப் பெருக்குவானேன்?

பாவத்தைச் செய்யாதே என்று கூறி, புண்ணியத்தைச் செய்யென்று வேண்டி நிற்பதைக் காட்டிலும், அதற்கேற்ற வகையில் சமூகத்தை மாற்றிவிட்டால்—எவ்வளவு சிறப்படையலாம்! உதாரணமாகத் திருடாதே என்று சொல்வதைக் காட்டிலும், திருடினால் சிறை வாசம் என்று பயமுறுத்துவதைக் காட்டிலும் திருட்டு எண்ணமே ஏற்படாத வகையில் எல்லோரிடமும் திருப்திகரமான முறையில் உழைப்பிற்கேற்ற ஊதியம்,—தேவைக்கேற்ற அளவில் அது அமைக்கப்பட்டால் — அந்தப் பாவம்

பயந்தோடி விடாதா?—இப்படி முகுந்தனும், நீலனும் வாதமிட்டுக் கொண்டனர். அவர்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து சேர்த்துப் பெறுக்கிக் கட்டிய மணிமாலைதான் இது!

வண்டி திருச்சிக்கு வந்து சேர்ந்தது. மூவரும் இறங்கினர். முகுந்தன் அறைக்கே சென்றனர். குளித்து முடித்து காலை உணவு ஏற்றனர்.

"இப்பொழுதே போகிறேனே!" — துடித்தான் சேரன்.

"பொறுமை வேண்டும். 'அவசர மின்றேல் அழிவுமில்லை' என்ற பழமொழி கேட்டதில்லையா?" என்ருன் நீலன்.

"பின் என்ன செய்யச் சொல்கிருய்?"

"பத்து மணிக்கு மேல் மருத்துவ மனைக்கே சென்று அவளைச் சந்தி—அவளது வரவேற்பு எப்படியிருக்கிறது என்று வந்து சொல்—பிறகு யோசிப்போம்"

"சரி"யென்ருன்.

முகுந்தன் அவர்கள் தனியாக நின்று பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தான்.

3

லில்லி சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே அன்று வந்த 'பொன்னி' இதழைப் புரட்டிக்கொண்டிருந்தாள். ஆனல் அவள் மனம் அந்த ஏடுகளிலே பதியவில்லையென்பது நன்ருப் புரிந்து விட்டது!

ஆம்! அவள் மதுரை மாசி வீதியில் உள்ள அவர்கள் வீட்டு முற்றத்தில் இருந்தாலும் அவள் மனம் திருச்சியில்

அவளது தோழி பாக்கியத்தின் தனி வீட்டிலேயே தங்கியிருந்தது! அன்று மட்டுமல்ல, அவள் 'ஆபீசில்' தனது வேலைகளில் சிந்தனையைச் செலுத்தும் போதெல்லாம் பாக்கியம் குறுக்கே வந்து நின்று விடுவாள்—பிறகு அவளோடு வார்த்தையாடவே பொழுதிருக்காது!

வில்லிக்குத் தொடர்கதை படிப்பதிலே ஒரு வகையான வேகமான ஆர்வம்—அதுவும் ஒருத்தி—தனது உயிருக்குயிரான தோழியின் உண்மை வரலாற்றையே படிக்க நேர்ந்தால் எவ்வளவு பரபரப்பிருக்கும்! பாக்கியத்தின் கடிதங்களே தொடர்கதை தாங்கி வரும் சஞ்சிகைகள்! அவள் எழுதுகிற பகுதியோ காதல் பகுதி—இனிச் சொல்லவும் வேண்டுமா? அது மட்டுமல்லாமல் அவளும் அத்தகைய புயலிலே சிக்கித் தவித்துக்கொண்டிருந்தாள்! இருட்டு வழி செல்லவேண்டுமே என்று ஏங்கிக்கொண்டு நின்ற வழிப்போக்கனுக்கு அவனுக்குத் தெரிந்த தோழன் ஒரு பெரிய 'அரிக்கன்' விளக்குடன் துணைக்கு வந்து சேர்ந்து விட்டால் அவன் மனத்திலே எவ்வளவு அமைதி ஏற்படும்? அப்படித்தான் வில்லியும் இருந்தாள்.

வரலாமா என்று கடிதம் எழுதிவிட்டு மறுநாளே சேரன் திடீரென்று பத்துமணி யளவில் மருத்துவ மனைக்கே வந்துவிட்டான். பாக்கியம் அவனைப் பார்த்து விட்டாள். ஆனால் பாராதவள் போல இங்கும் அங்கும் சென்று நடமாடிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மனம் சும்மா யிருக்கிறதா... தத்தி நடக்கும் குழந்தை அடிக்கடி எழுந்து நிற்பதும், விழுவதும், பிறகு அழுவதுமாக இருக்குமல்லவா அப்படித்தான் விளையாட்டாடிற்று! சேரன் மட்டும் என்ன அவ்வளவு ஏமாந்தவனா? அவன் மகா குறும்புக்காரன் போலும்! அவளையே போய்க் கேட்டான் கொஞ்சமும் சிரிக்காமல்—'பாக்கியம் என்ற மருத்துவப் பணிப் பெண்ணை அவளது நண்பன் பார்க்க வேண்டும் என்று சொல்கிறீர்களா' என்று! அவளுக்குச்

சிரித்து அப்படியே அவன் கரங்களைப் பிடித்து இழுத்துப் போய் நாற்காலியில் உட்கார வைக்கவேண்டும் என்ற ஆசை—ஆனல் அதை வெளியில் காட்டவே இல்லை, மகா கெட்டிக்காரி! வெறுப்பும், கோபமும் கலந்த பார்வையில் அவனைப் பார்த்தாள். அவன் உண்மையில் கலங்கிவிட்டான். மன்னிக்க வேண்டும்—பாக்கியத்தைப் பார்க்க இப்பொழுது முடியாது—வேலைக்கடுமை!—என்ருள். அவன் முகம் மாறிவிட்டது!

"பாக்கியம்...என்னை மன்னித்துக் கொள்" என்ருன் பெருமூச்சோடு.

"வருந்துகிறேன்......பிறகு சந்திப்போம்"—அவள் சொல்லிக் கொண்டே 'ஆபரேஷன் தியோட்டருக்கு' அவசரமாகச் சென்றுவிட்டாள்.

சேரன் தன்னை அவமானப்படுத்தியதாகத்தான் கருதியிருப்பான். வலிய வந்ததால் இந்த வேதனையான வரவேற்பு என்று மனம் புண்பட்டிருப்பான். பெண்களை மெழுகு என்று நினைத்திருக்கிருர்கள். தங்கள் வார்த்தை அனலில் உருகி விடலாம் என்று கனவு காண்கிருர்கள். பெண் மனம் ஒரு விசித்திரமான உலோகத்தாலானது—உருக்கும் முறையோடு உருக்கினல்தான் இளகும். இல்லாவிட்டால் வெடித்து பொடிப் பொடியாகிவிடும்! சேரன் தவறிவிட்டான? இல்லை! பாக்கியம் அவனை முழுவதும் புரிந்துகொள்ள ஆசைப்படுகிருள். அதற்காக அவள் காதற் பாதையில் அவன் ஓட நினைக்கும்பொழுது அவள் 'ஸ்லோ வாக்கிங்' பந்தயம் நடத்துகிருள்! கொஞ்சநேரம் கழித்துப் பாக்கியம் வெளியில் வந்தாள். சேரன் நிச்சயமாகக் காத்திருப்பான் என்று எண்ணினள். ஏமாந்து விட்டாள். அவள் மனம் வருந்தியது. அவளுக்கு அழுகை கூட வந்து விட்டது. தான் சேரனிடம் மிருகத்தனமான நடந்து விட்டதாகவே எண்ணி விட்டாள். அவன் திரும்ப

வருவானா...அல்லது வெந்த உள்ளத்தோடு வந்த வழியே போய் விடுவானா? உண்மைக் காதலிருந்தால் இந்த ஒரு ஏமாற்றத்திலேயே மனம் உடைந்து விடுவானா? ஏமாற்றம் வெள்ளத்தில் பாயும் வேகத்தில்தான் காதலின் வலிமை பெருகும்! இதை அறிவானா? பாக்கியம் ஏங்கினாள். அவளுக்கு மனம் சரியில்லை. உடனேயே வீட்டிற்குப் போய்விட்டாள்.

அவள் எதிர்பாராத வகையில் சேரன் வந்தான். அவனோடு யாரோ ஒருவனும் வந்திருந்தான். பாக்கியம் அவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்றாள். தங்கம்மா உடனேயே மூன்று கோப்பைகளில் தேநீர் அளித்தாள். மூவரும் அருந்தினர்.

"இவர் என் நண்பர். நீலன் என்று பெயர். என்னோடு வந்திருக்கிறார்!"—சேரன் அறிமுகத்தை ஆதரவாக்கிப் பேச்சைத் துவக்கினான்.

பாக்கியம் புன்சிரிப்பால் நன்றி தெரிவித்தாள்.

'தங்களைச் சந்திக்க நேர்ந்தமைக்கு மகிழ்கிறேன். படிக்கிறீர்களா?" என்றாள் பாக்கியம்.

"ஆம், சேரனும், நானும் ஒரே வகுப்பு மாணவர்கள்! எம். ஏ. வகுப்பு இறுதியாண்டு..."

"என் கடிதம் கிடைத்ததா...பாக்கியம்..." என்று நேரடியாக வந்த வேலையைத் தொடங்கினான் சேரன்.

"கிடைத்தது...மருத்துவ மனையில் நடந்து கொண்ட முறைக்கு மன்னிக்க வேண்டுகிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்!"

"கோபிக்கவா வந்திருக்கிறார் இவ்வளவு தூரம் தனது பழைய நாள் தோழியைப் பார்க்க"

பாக்கியம் வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

நீலன் கண்ணடிப்பால் எதையோ பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டான். பாக்கியம் இரவு உணவு அருந்தி விட்டுத்தான் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள். ஆனால், தக்க காரணம் சொல்லி அவன் நழுவி விட்டான்!

"பாக்கியம்!"—உணர்ச்சிக் கொதிப்போடு அழைத்தான்.

"........."—அவளும் ஆர்வத்தோடு பார்த்தாள். பேசவில்லை; பேசமுடியவில்லை!

அப்பொழுது அடுப்பங்கரையில் தள, புள...என சத்தம் கேட்டது!

"அங்கே யார்...?"

"வேலைக்காரத் தங்கம்மா!"

"பாக்கியம்...உன்னோடு தனியாகப் பேச வேண்டும். என்னுடன் கொஞ்ச தூரம் வரலாமா?"

"ஓ...வருகிறேன்......"

பிறகு இருவரும் வெளியில் கிளம்பினர். அவள் பக்கத்தில் நடந்து செல்வது கூட சேரனுக்கு ஆனந்தமாகப் பட்டது. நடந்து செல்லுகையிலே இறந்த கால நிகழ்ச்சிகள் பலவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றனர். கடைசியில் நீலனுடைய அறிவுரைப்படி முகுந்தனுடைய அறைக்கு வந்து சேர்ந்தனர். அங்கு யாருமே இல்லை. சேரனிடம் தானே சாவி இருக்கிறது; திறந்தான். உள்ளே சென்று அமர்ந்தனர்!

"சுற்றி வளைப்பானேன், பாக்கியம்...நேரடியாகவே கேட்கிறேன்...உன்னை நான் விரும்புகிறேன்... காதலிக்கிறேன்! என்ன சொல்கிறாய்?"—மனப்புயலை அடக்கிக் கொண்டு சொன்னான்.

"நான் கருப்பி..." என்று சிரித்தாள். அவள் பார்வை பழிக்குப்பழி வாங்குவதுபோலத் தெரிந்தது!

"சிவப்பு, செந்தேளின் விஷம் எனக்கு......கருப்பு, கருப்பட்டிப் பாகு என் அகராதிப்படி!"

"என்னால் குட்டுகள் வாங்கமுடியாது...மண்டை வீங்கிச் சாகவும் முடியாது!"

"நீ ஆஸ்பத்திரியிலே இருக்கிறாயே......இருக்கும் மருந்துகளை எடுத்து ஊற்றிக் கொள்ளேன் தலை நிறைய!" என்றான், கேலியில் அவளுக்குக் கொஞ்சமும் இளைத்தவனல்ல என்று காட்டும் நோக்கத்துடன்!

"இதை என்னிடம் சொல்வதைக் காட்டிலும், என் தந்தையிடம் சொல்லுங்கள்...நான் பாக்கியத்தை விரும்புகிறேன் என்று! அவர் தடுத்துச் சொல்ல மாட்டார், தடுத்துரைத்தால் நான் இருக்கிறேன்."

"அப்படியானால்...நீ என்னைக் காதலிக்கிறாயா பாக்கியம்...என் கண்ணே..."—பேசமுடியவில்லை.

"இல்லையென்று எப்படிச் சொல்லமுடியும் கண்ணாளா."

பாக்கியத்தை அப்படியே தழுவிக் கொண்டாள். அவளும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். ஆர்வத்தோடு உதடுகளைப் பதித்தான். மறுப்பில்லை! மறுபதிப்பும் கிடைத்தது!

பிறகு பேசிக்கிடந்தனர் வெகு நேரம்...கதை கதையாக! என்னதான் செய்தி கிடைக்குமோ, யார் கண்டார்கள்...அங்கே எரிந்துகொண்டிருக்கிற விளக்குத்தான் வெளிச்சம்!

சோனுக்கு ஏன் அவ்வளவு அவசரம்...பாக்கியத்தின் கன்னித் தனத்தைப் பாழ்படுத்த அல்லவா துடிக்கி

றுன்! கற்பைச் சூறையிட அல்லவா பார்க்கிறுன்! பாவப் படுகுழியில் தள்ளவா காதல் பயன்படவேண்டும்? விப சாரம் என்ற நச்சு நீரைக் குடிக்கச் சொல்கிறுன்...ஏற்க லாமா? சேரன் நீலனிடம் வாதிட்டபோது எதைப் பாவம் என்ருனே அதை செய்யத் தூண்டுகிறுன். ஒத் துழைக்க மறுக்கும் அவனிடம் கோபம் வருகிறது... வரலாமா? திருமணம் செய்யும் வரை பொறுத்திருக்கத் தான் வேண்டும். அப்படி அவசரப்படுபவன் திரு மணத்தை விரைவில் முடிக்கட்டுமே...இவன் நன்ருகப் படித்து வைத்திருக்கிறுன் என்பதற்காக மார்ச்சில் வைக்க வேண்டிய தேர்வை ஜனவரியிலேயே வைத்து விடுவார் களா?

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவித குறைபாடு இருக்கும். அதைத் தெரிந்துகொண்டால் அவர்களை விருப்பம்போல் ஆட்டுவிக்கலாம்...அப்படி ஏதாவது தந்திரத் திட்டமிட்டு இப்படிப் பாக்கியத்தை அழைத் தாஞ? பெண்மையின் குழைவைப் பயன்படுத்தி அவளை இக்கட்டில் மாட்டுவிக்க நினைக்கிறுஞ...? சேரன் வஞ்ச கக்காரஞ? இல்லை. இருக்கமுடியாது! காதலனே தான்...காதகனே அல்ல!

பிறகு பாக்கியத்தை அழைத்துக்கொண்டு வீட்டிற் குச் சென்ருன். இருவருமே அமர்ந்து ஒருங்கிருந்து உண்டனர். பிறகு அவனுக்குப் படுக்கையை விரித்துக் கொடுத்தாள். அவனுக்கு முத்தமும் இட்டு, இரவு வணக்கம் தெரிவித்துவிட்டுத் தன் தனியறைக்குச் சென்றுவிட்டாள்!...

இந்த நிகழ்ச்சிகளை அப்படியே எழுதியிருந்தாள் பாக்கியம். தான் நடந்துகொண்டது சரியா, தவரு... என்று கேட்டிருந்தாள். இனி எப்படி நடந்துகொள்வது என்று யோசனையும் கேட்டிருந்தாள். அவனது அன்பு

அழைப்பிற்கு இணங்கி விடலாமா...என்றும் கேட்டு வைத்திருந்தாள் இடையே ஓரிடத்தில். லில்லி அதனுல் தான் அதுபற்றிய சிந்தனையாகவே இருந்தாள்.

இந்தக் கதைகள் அவளது சொந்த வாழ்க்கையைப் பாதித்தன. சேரன்...சேரன்...என்று பாக்கியம் எழுதிய வரிகளைப் படிக்கும் பொழுதெல்லாம் அவளுக்கு நீலனுடைய உருவம்தான் கண்முன்னுல் வரும். அவன் அவளுடன் படிக்கா விட்டாலும், படித்தபொழுது வேறொரு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். காலையில் பள்ளிக்குப் போகும்பொழுதும், மாலையில் திரும்பும் பொழுதும் சந்திப்பர். அவன் அவளைப் பார்ப்பான்... உள் எண்ணம் விழியில் தெரியுமாறு சிலநாள் அவள் அசட்டையாக இருந்தாள். பிறகு அவளுக்கும் அவனைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. பிறகு அவளும் பார்த்தாள். அவனும் பார்த்தான்...கண்கள் கவ்விக் கொண்டன; பிறகு அடிக்கடி சந்தித்தனர். அவன் ஏதாவது கதைப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வருவான். மணிக்கணக்கில் பேசியிருப்பான். பிறகு பிரிந்து செல்வான். பள்ளிப்படிப்பு முடிகிற நேரத்தில் அவர்கள் நட்பு காதலாக மாறத்தொடங்கியது! லில்லி மதுரைக்குப் போகும் பொழுது கண்ணீரால் விடைபெற்றுன். அவனுக்கு ஓய்வில் கடிதம் போடுவதாகச் சொல்லி வந்தாள். அப்படியே அவனுக்கு ஒரு முடங்கல் தீட்டினுள்...நண்பரே, பள்ளிப் பருவத்தில் தங்களிடம்தான் பேசினேன். பழகினேன். என் அன்பு உள்ளத்தில் நீங்கள் எப்படியோ இடம் பிடித்து விட்டீர்கள். நம் அன்பு வளரட்டும்... இப்படி எழுதினுள். கடிதத்தின் முறையும், வார்த்தைகளும் மாறின. மாறுவதற்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை. கண்மணியே...கண்ணுளா...தொடக்கம் இப்படி! அன்பு அணைப்புகள்...ஆசை முத்தங்கள்...முடிவுரைகள், மாதிரிக்காக!

வில்வி பெற்றோரிடம் சொல்லி எப்படியும் நீலனை மணப்பதென்று முடிவு செய்துகொண்டாள். ஆனால் நீலனின் முடிவான விடைவேண்டுமே...! அதற்காக ஒரு பொய் முடங்கல் எழுதினாள். ஆனால் திடுக்கிட்டாள். எதிர்பார்த்த விடை வரவில்லை. திருமணத்திற்கு அவசரம் என்ன...என் படிப்பு முடியவில்லை...பெற்றோர்கள் சீறுவார்கள்...இப்படி மழுப்பியிருந்தான். ஆனால் நேரில் வருவதாக மட்டும் எழுதியிருந்தான்.

அவன் எதற்காக நேரில் வரவேண்டும்? பாக்கியத்தை நாடிவந்த சேரனைப்போலவா...கண்ணே, மணியே என்று கொஞ்சிக் குலவிவிட்டு ஓட்டம் பிடிக்கவா? பிறகு வில்வி...ஐயோ, என் காதலரே, அன்று வந்தீர் இன்பந் தந்தீர், அதற்கு அடையாளமும் வந்துவிட்டதே வயிற்றில்...வந்து என் கலி தீருங்கள். திருமணம் செய்வதின் மூலம்...என்று கெஞ்சிட வேண்டிய நிலையை உண்டாக்கவா? ஆணை அதிகார பீடத்தில் அமர்த்தி பெண் மண்டியிட்டு நிற்கவா? குற்றவாளியை நீதிபதியாக்கி, கொடுமைக்காளானவள் அறம் வேண்டி நிற்பதா? இது கூடாது, ஆகாது...அவளை விரும்புபவன், அவளது காதலை ஏற்கத் துடிப்பவன், திருமணம் என்றவுடன் தயங்குவானேன்? இது ஆண்கள் சாகசமா...வஞ்சகமா? அவளிடம் அன்புமழை கொட்ட வருகிறான்...ஆனால் திருமணக்குடை கேட்டால் இல்லையென்கிறான். மழையிலே நனைந்து நடுத்தெருவில் இன்பக் குளிரால் ஏங்கி நிற்பதா? விடுதியிலே சந்தித்தபோது, ஊருக்குச் செல்கையிலே வழி கூட்டி யனுப்பும்போது கன்னியரை மயக்கி பிறகு கைவிட்ட கனவான்களை கண்டபடி திட்டினானே... பெண்கள் ஏமாந்தவர்கள், அவர்கள் எளிதில் ஆண்களின் அன்புப் படையெடுப்பில் தோற்றுவிடுகிறார்கள். அது கூடாது...என்று நீதியுரை வழங்கினானே! பின் ஏன் திருமணம் என்றவுடன் திகைக்கிறான்...உண்மையில் காதலிக்கிறானா—கிடைத்த வரை இலாபம்...அகப்பட்

டதைச் சுருட்டடா ஆண்டியப்பா...காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்...இப்பேர்க்கொத்த 'மாக்கிவெல்லி' தத்து வங்களைக்( ) கடைப்பிடித்து கிடைத்துள்ள வில்லியைத் தன் பருவத் துடிப்பை அடக்கிக்கொள்ள ஒரு கருவி யாக்கப் பார்க்கிறானா... ஒன்றுமே புரியவில்லையே... நீலன் வாழ்வளிப்பானா, வஞ்சனை புரிவானா?

அவனை வரச் சொல்வதா...வந்து தந்தையின் சந் தேகத்தையும் கிளப்பிய பிறகு விபரீதத் துரோகத்தில் முடிந்தால் என்ன செய்வது... ஆகவே அவன் வரக் கூடாது, வரவே கூடாது...! அவன் வரவைத் தடுக்க வேண்டும்...நாளைக்கே ஒரு கடிதம் எழுதிவிடவேண்டும்! ஆண்தான் கோயில் காளை...கண்ட இடங்களில் திரிய லாம். பெண் அப்படியல்லவே, கொட்டிலிலே கட்டிக் கிடக்கும் பசு! நீலன் இதை யறியாதவனா?

இப்படி அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது பாக்கியத்தின் கடிதம் வந்தது. ஆகவே அவளுக்கு எப்பொழுதும் இந்த 'அகநானூறு' கனவு களாகவே போய்விட்டன. வேலை செய்யவில்லை—முடிய வில்லை. பொறியிலே விரல்களைப் பதித்து வார்த்தைகளை அடித்தால் தப்புத் தப்பாக விழுந்தன......அவளுக்கு அப்படியே முகத்தை மூடிக்கொண்டு அழலாம் போலாகி விட்டது!

அவளது மனம் பிளாசி யுத்தகளமாகிவிட்டது! முகலாயப்படை சமாளிக்க முடியாத அளவு வெள்ளையர் படை வந்து விட்டது. வெற்றிக்குக் காரணமாக மீர்ஜா பரின் படையும் வெள்ளையருடன் சேர்ந்துகொண்டது! அதுபோல அவளது மனப் போர்க்களத்தில் வேறொரு படை வந்துவிட்டது. ஒரு நாள் வில்லி காலை உணவுண்டு குடையை எடுத்து விரித்தபடியே வீட்டைவிட்டுப் பணி மனையை நோக்கி நடந்தாள். வழியிலே வந்த அஞ்சல் காரன் இரண்டு பதிவுத் தபால்களைக் கொடுத்தான்.

கையெழுத்துப் பெற்றுக் கொண்டு அவன் போய் விட்டான். காடிகார முள்கள் அல்லவா அஞ்சல்காரர்கள் —அவர்கள் நிற்கமுடியுமா?

பணிமனே சென்றவுடன் உறையைப் பிரித்தாள். முதல் வரியைப் படிக்கத் தொடங்கியதுமே அவள் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது...கடிதத்தை முடித்தவுடன் அவள் சிலேபோல வீற்றிருந்தாள்...என்ன கடிதம்? கடிதம் எழுதப் போவதாசக் கற்பனேக் கனவுகள் கண்டு கொண் டிருந்த கரம் கடிதம் எழுதுகிறது. நேரிலே சந்தித்துச் செல்லவேண்டும் என்று நெடுநாள் ஆசை. சொல்வது அவசியம் என்று என் மனம் எண்ணியபோது நெஞ்சில் துணிவில்லே. துணிவிருக்கும் பொழுது சொல்லவேண்டிய அவசியமில்லே என்று பட்டது. அவசியமும், துணிவும் சேர்ந்திருக்கிற நேரத்தில் ஆள் இல்லே. என் நிலே கையறு நிலேதான்! உன் வாழ்க்கைப் பாதை மாறி விட்டது...அந்தப் பாதையில் வேறு அடிச்சுவடுகள் தெரிந்தும் எழுதுகிறேன் இரண்டு ஆண்டுகளாக மனத் திலே புழுங்கியிருந்த ஆசை, கற்பனே கட்டிய காதல் கோட்டை, இலட்சியம் வளர்த்த இன்பக்கொடி—இந்த இடத்திலே நான் அள்ளிக் கொட்டியிருக்கும் வார்த்தை கள்! என் வாழ்வு மணம்பெற வில்லிவேண்டும் நிச்சயமாக! அவள் கிடைப்பாளா? பொன்னுன காலம் போய் விட்டதா?—நான் அறியேன். சொல்ல நினேத்ததைச் சொல்லிவிட்டேன். அது என் கடமை. காலம் நிர்ணயிக் கட்டும் இந்தக் காதல் சிக்கலின் முடிவை ஆனுல், ஒரு வரம்—வில்லி...கொடுப்பாயா? இனி வாழ்வில் மறக்க முடியாத இலட்சிய ஓவியம் நீ...உன்னேயே எனக்களிக்க மறுத்தாலும் நான் பார்த்து மகிழ உன் படம் மட்டும் எனக்கு வேண்டும். அந்தப் படம் எனது இன்பக் கோயிலின் தெய்வச் சிலேயாக இருக்கட்டும்...இந்தக் கடிதத்தைப் படிப்பதற்கு முன்னுல் 'மனப்போர்' என்ற புத்தகத்தைப் படி...ஒரு முறைக்கு, மும்முறை! அமரன்

என்ற அருமையான ஆசிரியர் எழுதிய கதை—படித்த பிறகு சொல்வாய் அது கதையில்லை, வில்விக்காகவே எழுதிய உண்மை விளக்கம் என்று...நான் சொல்ல வேண்டியவை அத்தனையும் அதிலே அமரன் சொல்லி விட்டார். எழுத்தாளர்கள் அத்தனைபேரும் பொது உடமை வாதிகளோ! எத்தனையோ மனங்களில் பூட்டி வைத்திருக்கும் எண்ணச் செல்வங்களைக் களவாடியது மட்டுமல்லாமல் ஏடாக்கி எல்லோருக்கும் பகிர்ந்து தந்து விடுகிறார்கள்...ஆம், அன்பான வில்லி...என் எதிர்காலத் திற்கு இன்றியமையாது வேண்டப்படுகிற வில்வி...விடை யெழுது இந்த எண்ணம் தவறானால் மன்னித்துவிடு... சரியென்றால் நேரில் வருகிறேன். நாளையே நம் திரு மணத்தை முடித்து விடுவோம்...மறுத்துவிட்டாலும் உன்னை மறக்கமுடியாது...முடியவில்லை! இது அளப்பல்ல உண்மை, முழுக்க, முழுக்க...இங்ஙனம், காதல் பிச்சை கேட்கும் நீலன்...என்று கடிதம் இருந்தது. வில்லியின் மனக்கடலில் எவ்வளவு கொந்தளிப்பு...எத்தனை அலை களின் கும்மாளக் கூத்தாட்டம்...இரைச்சலின் ஏகாதி பத்தியம்! இந்தக் கடிதத்தைப் படித்தவுடனேயே நீலன் மீது வளர்ந்த சந்தேகம், வெறுப்பாக,...லேசாகத்தான் மாறத் தொடங்கிற்று.

பிறகு 'மனப்போர்' என்ற ஏட்டைப் புரட்டினாள்! அதுவும் அவனாலேயே அனுப்பப் பட்டிருந்தது...! மேலட்டை மிக அழகாக அமைந்திருந்தது. தலைவிரி கோலமான ஒரு வாலிபனின் தோற்றம்...அவனைச்சுற்றி கடல் அலைகளின் தாவல்...காற்றில் முறைகெட்ட சுழற்சி...இப்படி முகப்பு அமைத்து ஓவியன் சித்தரித் திருந்தான். அந்தக் கதை ஒரு வாலிபன் சொல்வது போலவே எழுதப்பட்டிருந்தது.

கதை சாதாரணமான கதை தான்...ஒரு பெண்ணை வாலிபன் ஒருவன் காதலிக்கிறான். அவளை அவனுக்குத்

தெரியும். அவளுக்கும் அவன் யார் என்று தெரியும். பேசியதுமில்லை. பேசவேண்டிய சந்தர்ப்பமுமில்லை. ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்பவில்லை. அவன் மனக் களத்தில் அன்பு விதைவிட்டு ஆசைக்கதிர்கள் ஆடுகிறவரை பயிரை வளர்த்து விட்டான். அதை அவளிடம் சொல்ல வேண்டும். சொல்லவோ வெட்கம்...பயம்...சந்தேகம்! ஆனால் ஆசையை...காதலை...அடக்க முடியாத அளவு முற்ற விட்டு விட்டான். அப்பொழுது பட்டாளத்தி லிருந்த ஆள் ஒருவன் அவனது வீட்டிற்குப் பக்கத்தில் வந்து மூன்று மாதங்கள் தங்கியிருந்தான். வந்த ஒரு வாரத்திலேயே அவளிடம் பேசவும், பழகவும் தொடங்கி விட்டான்...அவன் மனம் எப்படி இருக்கும்...வெடிக்கும் எரிமலையாகியிருக்காதா பிறகு ஒரு நாள் சந்திக்கிறான். கேட்டும் விடுகிறான். அவள் அழுதாள், ஏன்? அவள் மன மார அவனைக் காதலித்தாள்...காதல் செத்து மடியவில்லை! ஆனால் பட்டாளத்து வாலிபவனுக்குத் தன் ஒப்புதலைச் சொல்லியும் விட்டாள். அவளது பெற்றோர்களும் அதற் கிணங்கி வைதீக முறைப்படி நிச்சயதார்த்தம் செய்து விட்டார்கள். இவனோ வேறு சாதி...என்ன செய்வான்? அவள் நினைவாகவே பித்துக் கொண்டவன் போலவே திரிகிறான். தினம் ஒரு பக்காமாக தன் மனத்திலே நடந்த போராட்டங்களைச் சித்தரிக்கிறான்...அதுதான் மனப்போர். அதை மிக அழகாக, உள்ள முருகிடும் வகையில் எழுதி யிருந்தார் அந்நூலாசிரியர்.

லில்லி ஏட்டைப் படித்தாள். மீண்டும் ஒரு முறை முடங்கலை வரிக்கு வரி நிறுத்தி நிறுத்திப் படித்தாள்!

அவள் மனம் வெடி வைத்த பாறை போலச் சிதறிச் சுக்கு நூறாகி விடும் போலாகி விட்டது!

அவள் மனம் அப்பொழுது ஒரு பந்தய வெளி...... நீலனும், வேலனும் ஓட்டப்பந்தயம் ஓடுகிறார்கள். யார்

வெற்றி பெறுவார்கள்? நீலனிடம் ஏதோ மயக்கம் அவளுக்கு...அது பழக்கத்தினுல் ஏற்படுகிற பருவ சலசலப்பு என்பது அவளுக்குத் தெரியவில்லே. அது உண்மைக் காதலின் ஆரம்ப நடவடிக்கை என்று அவள் எண்ணிஞள். வேலனிடம் அவளுக்கு இயற்கையாகவே ஒரு வகையான மதிப்பு, அன்பு கலந்ததுதான்! அவளது நீண்ட கடிதத்தைப் படித்த பிறகு அன்பு வளர்ந்தது நின்றதே தவிர குறையவில்லே. ஆணின் மீதுள்ள மதிப்பு என்ற 'டிகாஷனும்' அன்பு என்ற பாலும் கலந்து பெண்ணின் ஆர்வம் என்ற சர்க்கரையும் சேர்ந்துவிட்டால் காதல் என்ற 'காபி' தயாராகிவிடும்! வில்லி வேலனேயும் விரும்பத்தான் செய்தாள்......ஆனுல் அவனேத் திட்டவும் அவள் மனம் இடந்தந்தது ஏன்? இரண்டாண்டுகளாக இந்த எண்ணத்தை ஒளித்து வைத்திருப்பானேன்? எத்தனே முறை சந்தித்த இவன் சொல்லியிருக்கக் கூடாதா? அவளது மனத்திலே ஒரு புயல் வீசச் செய்துவிட்டானே! இவன் அறியாத குழந்தை? நாடகத்திலே நடிக்க ஒத்துக் கொண்டு 'பவுடர்' பூச மாட்டேன், பேசத்தெரியாது, பாடமுடியாது, வேற்றுடை அணியேன்...என்று நடிகன் சொல்லலாமா? காதல் அரங்கத்தில் இறங்கிய பிறகு பேச வெட்கம், கேட்க பயம், பதிலிலே சந்தேகம் என்று பல்லவி பாடலாமா? அப்பொழுது அவன் கேட்டிருந்தால் அவள் மறுத்தா சொல்லியிருப்பாள்! பெண்பார்வையே ஒரு பல்கலேக் கழகம்...அதிலே பத்து நாட்கள் பயின்ருலே போதும்! காதல் பட்டம் பெற்று விடலாமே!

அவள் என்ன செய்வாள்? நீலனே வரச்சொல்லி எழுதுவாளா? அல்லது வேலனின் காதலே ஏற்பாளா? நீலன், வேலன்...அவர்களின் யாரை அவள் ஏற்பாள்? எடைப் பொருளா நிறுத்துப் பார்க்க......தங்கமா, உறைத்துப் பார்க்க...அரிசியா, அளந்து பார்க்க! அழகான, அறிவுள்ள ஆடவர்கள் பெண்மையைக் கவரும்

பண்புகள் இருவரிடமும் உள்ளன. இருவரும் அவளுக்குத் தெரிந்தவர்கள்......ஆனால் கொஞ்சம் வித்தியாசம்— நீலனுடன் பேசி உறவாடியிருக்கிறாள். வேலனுடன் அந்த உறவு இல்லை. ஆனால் அதற்காக அவள் ஏங்கிய நாட்கள் உண்டு. அவன் எதிர்பார்த்தது உண்டென்று அவனே எழுதுகிறான்! பேச்சு உறவைத் துச்சமெனத் தள்ளி விடவும் முடியாது! ஏன்...அதுதான் முன்னுரை காதல் புத்தகத்திற்கு!

நீலன் கோழை போல இருக்கின்றான் கொள்கையில்... திருமணம் செய்யமுடியாதவன்போலவே தோன்றுகிறான். அவன் நிலைமை வைதீக அகழியினால் சூழ்ந்த கோட்டை போலவே இருக்கிறது. வில்லி விலை மகளா...என்ன... அவளிடம் இன்பச் கூட்டுறவுப்பண்ணை வைத்து நடத்தி விட்டு ஓட! அவள் குடும்ப மணி விளக்கு...வீட்டுக் குளிர் தென்றல்......இல்லது எழிரசி! அவள் முறைப்படி மணக்க வேண்டும். ஆனால் அதில் காதல் முன்னின்று நடத்தவேண்டும். வேலன் திருமணம் செய்யத் துடிக் கிறான்......வில்லியின் மனத்தை யார்தான் வருணிக்க முடியும்?

நீலனை ஏற்பதானாலும், வேலனை மணம் முடிப் பதானாலும் ஒரு பெரிய போர் நடத்தியே ஆகவேண்டும்... அப்படியிருக்க, கொள்கையிலே பிடிப்பில்லாதவனோடு நின்று இலட்சியப் போராட்டத்தை நடத்த முடியுமா? காதல் பாதை பயங்கரமான பாதை. அதில் நடக்க எதை யும் இலட்சியம் செய்யாத வீரனின் துணை தேவை பெண் ணுக்கு! இந்த மழுப்பல் ஆசாமியுடன் துணிந்து அதில் பயணத்தைத் தொடங்கி இடையில் அவன் ஓடிவிட்டால் வேறு யார் துணை வருவார்கள்! துணைதான் கிடைக்குமா?

அன்று முழுவதும் அவள் அதே சிந்தனையாகவே இருந்தாள். அவள் எப்பொழுது மாலை வரும் என்று

எதிர்பார்த்திருந்தாள். மணி ஐந்தடித்ததுமே வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்.

உள்ளே நுழைந்ததுமே அவளது தந்தை டேவிட் அவளை வரவேற்றார்.

"அம்மா, 'காபி, சாப்பிட்டுவிட்டு வா...உன்னோடு சில வார்த்தைகள் பேசவேண்டும்" என்றார் அமைதியாக

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. 'காப்பி'யைக்கூடச் சரியாகக் குடிக்காமல் பாதியை வைத்துவிட்டு கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டு தந்தையிடம் வந்தாள்.

"இப்படி உட்காரம்மா—" என்றார் அன்போடு.

பிறகும் அவரே பேசினார்.

"வில்லி—எனக்கு ஒரே மகள்—தாயிழந்த உன்னை அன்போடு வளர்த்தேன். படிக்க வைத்தேன். பணியும் செய்து உன்னையே காப்பாற்றிக் கொள்ளும் அளவு தகுதியும் பெற்றுவிட்டாய்—ஆனால்..."

"என்னப்பா, இன்று புதுமாதிரி பேசுகிறீர்களே!"

"லில்லி—உன்னை இன்னமும் தனியாக வைத்திருக்க விருப்பமில்லை. தக்கதோர் வாலிபனின் ஆதரவிலே வைக்க முடிவு செய்துவிட்டேன்!"

"திருமணமா—?"

அவள் தலை சுழன்றது. மண்டையில் குண்டு பாய்ந்து குடைவது போல இருந்தது—அவள் கண்கள் மூடிக் கொண்டன. அவள் கரங்கள் அவளது தொங்கிய தலையைத் தாங்கிக்கொண்டன. கன்னங்களைப் பிடிப்பாகக் கொண்டு!

"வில்லி—மணம் என்றவுடன் மயக்கமா? உனக்கு இப்போழுது மணந்துகொள்ள விருப்பமில்லையா அம்மா—உன் மனங்கோணும்படி நான் நடக்கமாட்டேன். பயப்படாதே!"

"ஆம், அப்பா இப்பொழுது எனக்கு அந்த வாழ்க்கையில் விருப்பவில்லை"

"அப்படியானால் சரி...ஆனால் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிடுகிறேன். லாரன்ஸ் மகன் எட்வர்டு தெரியுமல்லவா உனக்கு...இந்த ஆண்டுதான் எம். பி,, பி. எஸ்... தேர்விலே முதல்வனாகத் தேறியிருக்கிறான். அவனுக்காக அவர் தந்தையே என்னிடம் வந்தார். அவன் உன்னை விரும்புகிறானாம்..."

அவள் சிந்தனை ஆற்றுச்சுழல் போலாகிவிட்டது.

நீலன், வேலன், எட்வர்டு...போட்டிக்கார உலகம் போக்கிரித்தனமாகப் பந்தயம் வைக்கிறது! ஒருவனுக்கு அவளின் பழக்கம் ஆதாரம்; மற்றவனுக்கு அவனது உள்ளத்திலே வளர்ந்து வந்த ஆசை, இலட்சியக்கனவு துணை; மற்றொருவனுக்கு அவளின் தந்தையே சிபார்சு செய்கிறார்...வில்லியின் மனம் இன்னமும் வெடிக்கவில்லையே! அவளுக்குப் பித்து பிடித்துவிட்டால் கூட ஆச்சரியப்பட முடியாதே!

வில்லி தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள். எழுதுகோலை எடுத்து கடிதம் எழுதவேண்டும் என்று உட்கார்ந்தாள்...எழுத முடிகிறதா என்ன! நீலன் வந்து நிற்கிறான் எதிரில்...வேலன் பரிதாபமாகப் பார்க்கிறான்...எட்வர்ட் அவர்கள் இருவரையும் சந்தேகத்தோடு பார்த்துவிட்டு அவளை எரித்துவிடுவது போல கோபக் கனலைக் கக்குகிறான். யாருக்குக் கடிதம் எழுதுவாள்?

எண்ணங்கள் மகா கள்ளர்கள்...அவர்கள் நம்மையு மறியாமல் நமது இரகசிய அறையாகிய மனத்தில் புகுந்து சிந்தனைப் பெட்டியில் பூட்டி வைத்துள்ள நினைவு என்ற விலை மதிக்க முடியாத பொருளை எடுத்துக்கொண்டு ஓடிவிடு வார்கள்! லில்லி நினைவிழந்தேவிட்டாள்...இல்லாவிட் டால் பேனாவும் கையுமாக அப்படி-அசைவற்றிருப்பாளா? வெகு நேரம் அப்படியே இருந்துவிட்டாள். பிறகு திடுக்கிட்டு எழுந்தாள். உடனே ஒரு கடிதம் எழுதினாள். நீலனை வரவேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லும் பாணியில் எழுதிவிட்டாள்...பிறகு பரிதாபத்திற்குரிய வேலனுக்கு எழுதலாம் என்று எண்ணினாள். எதை எழுதுவது, என்ன எழுதுவது...சிந்தித்தாள். பிறகு எழுதலாம் என்று அவனுக்கு எழுதவில்லை. வேலன் எதிர் பார்த்து, எதிர்பார்த்து ஏக்கத்தால் வாடமாட்டானா... அது ஏன் அவளுக்குத் தெரியவில்லை?

கடைசியில் பாக்கியத்திற்கு ஒரு கடிதம் வரைந்தாள். "தோழியே! என் மனம் சரியான நிலையில் இல்லை. ஆறுதல் மொழி கூறக்கூட ஆளில்லை. உனக்கு இரண்டு திங்கள் ஓய்வு கிடைக்கும் என்று சொல்லியிருந்தாயே! அதை இப்பொழுது எடுத்துக்கொண்டு என்னிடம் வந்திருக்க வேண்டிக்கொள்கிறேன்—தனியாக அல்ல, உன் அன்பர் சோனுடன்! நேரில் உன் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக் கெல்லாம் விடை கிடைக்கும்" என்று எழுதிவிட்டாள்!

பாக்கியத்தின் கரங்களிலே அந்தக் கடிதம் வந்து சேர்ந்ததும் அவள் முகத்திலே களிப்புப் பொங்கிற்று! ஆம், தோழியின் அறிவுரை கிடைக்கும். அதுமட்டுமல்ல... பெண்களுக்கு ஒரு இயற்கையான மனப்பண்பு! சேலை வாங்க வேண்டுமென்றாலும், நகை எடுக்க வேண்டும் என்றாலும்...ஐந்தாறு தோழிமாருடன் சென்று அவர் களின் பாராட்டுதல்களும், வாழ்த்தும் கிடைக்கக் கூடிய 'செலக்ஷன்' நடத்தினால்தான் திருப்தி! பெண்மனம்

என்ற விளக்கில், பிறர் பாராட்டுதல்கள் என்ற எண்ணெய் விடவிட ஒளி அதிகரிக்கும். ஆகவே, தன் காதலனை வில்லி பார்க்கவேண்டும், அவள் பாக்கியத்தின் கிடைத் தற்கரிய பாக்கியத்தை—சேரனை—புகழ்வதைக் கேட்டுப் பூரிக்கவேண்டும்...... இப்படித் திட்டமிட்டாள். ஆகவே தன்னை மதுரையில் வில்லியின் இல்லத்தில் அவசியம் வந்து சந்திக்கவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத் தாள். பிறகு அன்றே ஓய்வுக்கு உத்தரவு வேண்டுமென்று எழுதிவிட்டாள்.

அன்று மாலை மருத்துவ மனையிலிருந்து பாக்கியம் திரும்பி வந்தவுடனேயே மிகக் குதூகலமாக தங்கம்மா விடம் பேசத் தொடங்கினாள்.

"தங்கா, என்னோடு ஊருக்கு வருகிறாயா?"

"நான் எதுக்கும்மா...அதற்குக் கொடுத்து வைத் தவர்...ஊரிலே இருக்கிறார்!"

"யாரடி அம்மா அது, எனக்குத் தெரியாமல் உனக்குமட்டும் தெரிந்த புது மனிதர்?"

"அவர் உங்கள் காதல் வீரர்...சே...ரன்"

"தங்கா...உனக்கு எப்பொழுதும் கேலிதான்... அவர்தான் என்னிடம் கோபித்துக்கொண்டு போய் விட்டாரே!"

தங்கம்மா ஆச்சரியப்பட்டாள். வேடிக்கையாகவே பேசுகிறாள் என்று எண்ணினாள். மேலும் வற்புறுத்திக் கேட்ட பிறகு நாணத்தோடு அவள் கூறிய வார்த்தைகளைக் கொண்டு பார்த்தால், சேரன் உண்மையில் கோபத்தோடு தான் போயிருப்பான்! அவனது ஆவித் துடிப்பை—உலக இன்பத்தின் உச்சிக்கு வா என்று வேண்டிய அன் பழைப்பை...ஆசையின் கட்டளையை...அன்பு முதிர்ச்சி

யின் வற்புறுத்துதலை... அவள் ஏன் மறுத்தாள்? காதலனின் கட்டளையை... மீறுவதுதான் காதலின் இலக்கணமா? அவள் கேட்டும் மறுத்துவிட்டது தவறல்லவா?

பாக்கியம் தவறு என்று ஒப்புக்கொள்ள மறுக்கிருள். எவ்வளவோ போராட்டங்கள் நிகழ்த்தவேண்டுமாம், காதல் பாதையில்...முடிகள் உருண்டதுண்டாம் சிம்மாதனங்கள் ஆடியதுண்டாம், படை மோதல் ஏற்பட்டதுண்டாம், பிணமலைகள் குவிந்ததுண்டாம்—காதலுக்காக, காதலிலே வெற்றியடைவதற்காக—சரித்திரம் சொல்கிறது. பாக்கியம் சேரனிடம் அத்தகைய பயங்கர நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கவில்லை. அவள் அவனிடம் கேட்டதெல்லாம் மனிதனுக இருக்கவேண்டும் என்பதுதான்! விலங்குகளாக மாறிவிடக்கூடாது என்பது அவளது அசைக்கக் கூடாத ஆசை, நம்பிக்கை—! பொறுமை வேண்டும் என்ருள். தவறு என்று கூட வாதிக்கவில்லை. தவணை கேட்டாள். அறவே மறுக்கவில்லை. ஆகட்டும், ஆனுல் கொஞ்ச நாட்கள் தள்ளிவைப்போம் என்ருள்; கடுமையான குரலில் அல்ல, கனிமொழியுடன்! இது கூடாதா, தவரு? காதலுக்காக இந்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியாதவன், வேறு எதைத்தான் செய்யப் போகிருன்? செய்ய முடியும்? மனத்திண்மையோடு எதையும் செய்யும் ஆற்றல் வேண்டும் சேரனிடம் இல்லையா அந்த ஆற்றல்? இனியும் ஏற்படுத்திக் கொள்ள முடியாதா?

அப்படி நடந்துகொள்வது பாவம் என்று சொன்ணளாம் பாக்கியப்—கடைசியில்! தங்கம்மாவினுல் இதை ஒப்புக்கொள்ளவே முடியவில்லை. பாவம் என்று ஒன்றைச் சொல்லிவிட்டு அதைச் செய்யும் சூழ்நிலையிலேயே மனித சமுதாயத்தை வைத்திருப்பது எவ்வளவு கொடுமை — 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று,' 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

என்று பழமொழிகள் நடமாடுகின்றனநாட்டில்—ஆனால் நேற்றுவரை ஆதித்திராவிடருக்குக் கதவடைப்பு கோவில் களில்! முரண்பட்ட நிலைமையில் வாழ வைத்துவிட்டது சமூகம். அந்தக் காலத்துக் கதைகளில் ஒரு பெண்ணைக் கொடுக்க முடியாது என்று சொல்வதற்குப் பதிலாக பல நிபந்தனைகளை விதிப்பானும் அரசனாகிய தந்தை. ஓட்டைக் குடத்தால் கிணற்று நீரைக் காலி செய்தல், ஏழுகடல் தாண்டி பாம்பின் வாயிலுள்ள நாக இரத்தினத்தை எடுத்து வருதல், புலிப்பால் கொண்டுவருதல், குதிரைக் கொம்பு கேட்டல்—! அப்படித்தான் சமூகம் மனித சமுதாயத்தைப் பார்த்துக் கேலி பேசுகிறது. ஒரு காரியத்தைச் செய்யும் சூழ்நிலையைப் படைத்துவிட்டு அதைச் செய்தால் பாவம் என்று சொன்னால் விசித்து விசித்து அழத்தானே செய்கிறது நம் மனம், இந்தக் குணங்கெட்ட சமூகத்தைப் பார்த்து.

பாக்கியம் பாவம் என்று சொல்லித் தடுத்துவிட் டாள்—அதுவரை அவள் கெட்டிக்காரி. அவள் அதுவும் தன்னை விரும்பி, மணக்க முடிவு செய்து வந்த காதல னையே தடுத்துவிட்டாள். அவளுக்கு உள்ளத்திலே கனி விருந்தும் கண்டிப்பாக நடந்துகொண்டாள். ஆனால்— கொஞ்சம் தொடர்பற்றவர்களிடம் கூட மறுப்புக் கூற முடியாமல் மானத்தை இழந்த மங்கைமார்கள் எத்தனை பேர்! பண்ணையாரின் பாதகச் செயலால் பாழ்பட்டவர் கணக்கிலடங்குவரோ! தேயிலைத் தோட்டத்து முத லாளியின் சிந்தனைத் தித்திப்புக்கு எத்தனை இளம் இரத் தத் துளிகளின் கொதிப்பு? மில் சொந்தக்காரர்களின் கருணைக்காக தங்களைத் தத்தம் செய்யவேண்டிய அவ சியத்திலே விடப்பட்ட அபலைகளின் பட்டியல் தர முடியுமா? இவர்களை ஒதுக்கிவிட்டால்கூட தங்களின் வயிற்றுக்காக, வாழ்வையே முறித்துக்கொண்டு, அந்தி மயங்கிய நேரத்தில் சந்து, பொந்துகளில்...நாம் காணும்

நிகழ்ச்சிகள் எவ்வளவு! அவர்களுக்குத் தெரியாதா தாங்கள் செய்வது பாவம் என்று...தெரியாது என்று சொல்லமுடியாதே...சமூகத்தின் கண்களைக் கட்டிவிட்டுத் தானே இந்தக் காரியங்களில் இறங்க முற்படுகிறார்கள்— மறைவிலே இவைகள் நடைபெறவேண்டும் என்று அவர்கள் நினைப்பதிலிருந்தே அவர்கள் சமூகத்தின் திட்டம் தெரிந்தவர்கள் என்றுதானே பொருள்...? பாவம் என்று தெரிந்தும் ஏன் செய்கிறார்கள்? அவர்கள் நரக உலகத்தில் குடியேற ஆசைப்படுகிறார்களா? இல்லையே! பாவத்தைச் செய்பவர்களும் தாங்கள் புண்ணிய உலகத்தில் குடியேறப்போவதாகத்தான் சொல்கிறார்கள்? உலகத்திலே யார்தான் ஒத்துக்கொள்கிறார்கள் தாங்கள் பாவிகள் என்று......ஒத்துக்கொள்பவர்களும் எல்லாம் அவன் செயல் என்று குற்றத்தை 'அவன்' தலையிலே தான் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்கிறார்கள்!

திருடுவது பாவம்—ஆனால் ஒரு உயிரை உண்ணவும் வழியில்லாமல் விடுவது பாவமல்லவா? அந்தப் பாவத்தைப் போக்கச் சமூகம் என்ன செய்துவிட்டது? அது பாவம், இது பாவம் என்று வேதாந்தம் பேசுகிறது — இது போதுமா?

தங்கம்மா அவள் பாவம் என்று சொன்னபோது திகைத்துவிட்டாள். திகைப்பு மாறும் முன் விகாரமாகச் சிரித்தாள். அந்த மூன்றெழுத்துக்கள்.........பாவம்— இட்லர், முசோலினி, டோஜோ ஆகிய மூவரை விட அதிகமாக உலகத்தை ஆட்டித்தான் வைக்கின்றன! அந்தச் சொல் எத்தனை வீரர்களைச் சோதாக்களாக்கிவிட்டது! எத்தனை கடமையுணர்ச்சி உள்ளவர்களையும் கையாலாகாதவர்களாக்கிவிட்டது! செய்யவேண்டியது என்று மனச்சாட்சி சொன்னாலும் செய்யாது திகைத்து வைக்கப்பட்டவர் எவ்வளவு பேர்! ஆம், பாவம் செய்த பாவம் எடுத்துச் சொல்ல முடியாத அளவு பிரிந்துவிட்டது.

பாக்கியத்தின் உரையாடல் தங்கம்மாவின் அந்த நாள் வாழ்க்கைக் குப்பையைக் கிளறி விட்டுவிட்டது. சிந்தனைக் கோழி, எண்ணக் குஞ்சுகளுடன் அந்தக் குப்பையிலே மேயத் தொடங்கிவிட்டது. அதனால்தான் அவள் அப்படிச் சிரித்தாள்.

"தங்கா! ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்ன செய்வது—? அழுகையை மறைக்க வேண்டுமானால் சிரிப்புத்தானே ஏற்ற படுதா—" என்றாள்.

"ஏன் அழவேண்டும்?"

"அழப் பிறந்தவள், அழுகிப் போகப் பிறந்தவள் நான்!"

"தங்கம்மா......நீ மிகவும் துன்பப்பட்டிருக்கிறாய் என்று தெரிகிறது. அதைக் கிளற நான் ஆசைப்பட வில்லை!......நீ என்னுடன் வருகிறாயா என்று மட்டும் சொல்லு."

"எந்த ஊருக்கு அம்மா!"

"மதுரைக்கு..."

மதுரை...அந்தப் பெயரைக் கேட்டதுமே அவள் முகத்தின் விகாரம் கிடுகிடுவென உச்சியை அடைந்து விட்டது! ஆம், அந்த உணர்ச்சி வேகத்தைத் தடுத்து அணை போட முடியவில்லை. ஆகவேதான் அவள் கண்களிலே நீர் வடிந்ததைத் துடைக்கவுமில்லை. பாக்கியம் பயந்து போய்விட்டாள். பரிதாபம் வேறு பற்றிக் கொண்டது!

"தங்கம்மா...நீ ஆச்சரியச் சிலை போலவே இருக்கிறாய். எதைக் கேட்டாலும் சொல்வதில்லை. ஆனால் அநுபவ முத்திரை மட்டும் உன் முகத்தில் பொலிகிறது.

நீ ஏன் அழுகிறாய்? சொல்ல முடியுமானால், சொல்லக் கூடியதானால் என்னிடம் சொல்."

தங்கம்மா சிரித்தாள் முதலில்... அழுதாள் இடையில் ...இப்பொழுதோ மீண்டும் சிரித்தாள்! பாக்கியத்தின் முகவாட்டமும் ஓட்டம் பிடித்துவிட்டது. சமூகம் பாவம் என்று சொன்னதை விடாப் பிடியாய்ப் பிடித்துக் காதலனைக் கலங்க அடித்தவள் பாவமே செய்யாதவளா? அவள் ஆடு மாடு மேய்க்கவேண்டியவள்! இப்படி படித்தது பாவமல்லவா? உயர்சாதிக்காரர்களைத் தொடுவதே பாவ மல்லவா? அவளைவிட உயர்ந்த சாதிக்காரியாகிய தங்கம் மாவை வேலை வாங்கலாமா? சமூகம் இவைகளை எல்லாம் பாவம் என்றுதான் சொல்லுகிறது...! இப்படி நினைத் திருப்பாள் தங்கம்மா. அதனால்தான் சிரித்துவிட்டாள்.

தங்கம்மா ஏன் அழுதாள்...? அது பயங்கரத் தொடர்கதை; சமூகத்தின் கண்களில் அவள் ஒரு பாவி; பஞ்சமா பாதகி...அது எப்படி? அதை அவள் சொல்ல விரும்பவில்லை. பாக்கியத்தின் வார்த்தைகள் அவளது வாழ்க்கை ஏடுகளையெல்லாம் புரட்டி அந்தப் பாவக் கறையேறிய ஏட்டை எடுத்து வைத்துவிட்டன. அதனால் தான் அழுதாள். அந்தத் துயரச் செய்தியை என்றைக் காவது ஒருநாள் பாக்கியத்திடம் சொல்லியழவேண்டும் என்று எண்ணினதுண்டு. ஆனால் அதற்கேற்ற வாய்ப்பு கிடைக்கவில்லை.

"அம்மா......நீங்கள் எங்கிருந்தாலும் அங்குதான் நானிருப்பேன். நான் வருகிறேன்" என்றாள்.

பாக்கியம் அவளைக் கட்டிக்கொண்டாள். அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி...தங்கம்மாவிடம் அவ்வளவு அன்பு! அவளிடம் வந்து சேர்ந்தது மூன்றாண்டுகளுக்கு முன்னால் தான்......அன்றிலிருந்து தனது தாயைப் போலவே பாவித்து நடந்து வந்தாள். அவளும் தன் மகளாகவே

எண்ணி அன்பு வடிவாகவே அவள் கண்களின் முன் நடந்து வந்தாள். சில சில சமயங்களில் அவளைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள். ஆனால் அவள் எதையும் சொல்லவில்லை. சில சமயங்களில் வெப்பமான கண்ணீர்ச் சொட்டுகளையே பதிலாக்கி வந்தாள். ஆகவே அவளை அழவைக்கக் கூடாதென்பதற்காகவே அவளது முன்னால் வாழ்வைப்பற்றிக் கேட்பதில்லை.

பாக்கியம் ஓய்வு கிடைத்தவுடன் வில்லிக்குத் தான் வருவதாகக் கடிதம் எழுதினாள். அன்று இரவு வண்டியிலே தங்கம்மாவுடன் மதுரைக்குப் போவதென்று தீர்மானித்தாள். ஆகவே முன்னதாகவே இரவு உணவை முடித்துக்கொண்டு இருவரும் ஒரு வண்டியில் புகைவண்டி நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு 'கார்' வந்தது எதிர்பக்கத்திலிருந்து... இந்த வண்டியைக் கண்டு நின்றது. 'டாக்டர்' கருணாகரன் இறங்கி வந்தார். அவரைக் கண்டதும் பாக்கியம் துள்ளிக் குதித்து வண்டியிலிருந்து இறங்கினாள்.

"மிஸ் பாக்கியம்...எனக்கு ஒரு உதவி. மதுரையில் என் நண்பர் நாரணன் என்று ஒரு மனோவியாதி மருத்துவர் இருக்கிறார். அவரிடம் நான் ஒரு வேண்டுகோள் விட்டிருக்கிறேன். எனது அன்பிற்குரிய குடும்பத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஒருமாதிரியிருக்கிறான். அவன் பெயர் வேலன். அவனை அங்கு அனுப்ப வேண்டும். அதுபற்றி மறக்காமல் எழுதச்சொல்லு."

"அப்படியே செய்கிறேன்!"

பிறகு கார் போய்விட்டது. வண்டியில் பாக்கியம் ஏறிக்கொண்டாள். நிலையம் அடைவதற்கும் இவர்கள் போகவேண்டிய வண்டி வருவதற்கும் சரியாக இருந்தது. இரண்டு இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுகள் பெற்றுச் சென்றனர். வண்டியில் ஏறி உட்கார்ந்தனர். பிச்சைக்

காரிடையில் ஒருவன் தலைவாழையிலையில் விருந் துண்பது போலத்தான் மேல் வகுப்பு வண்டிகள் இருந் தன! அடித்து உதைத்துக்கொண்டு மூன்றும் வகுப்பு பிரயாணிகள் ஏறி உட்காருவதையும் நிற்க முடியாமல் தவித்துக்கொண்டிருப்பதையும், முதல் — இரண்டாம் வகுப்புகளில் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருக்கும் கனவான்களின் தவிப்பின்மையையும் பார்த்தவர்கள் என்ன நினைப்பார்கள்? எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை...எல்லோரும் இந்நாட்டு மன்னர்...என்று பாரதியார் பாடலை நாம் பாடலா மல்லவா?...

மறுநாள் காலையில் வில்லியின் வீட்டுக்கு எதிரில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு பெண்கள் இறங்கினர். வில்லி ஓடோடி வந்தாள்.

"வாடி, பாக்கியம்..." என்று வரவேற்புரை வாசித் தாள்.

"இதோ வந்துவிட்டேனடி!" என்று கிண்டல் கலந்த நன்றியுரை கூறினாள்.

"என்னடி ஏமாற்றிவிட்டாய்...இன்னும் ஒருவர்... இல்லையே?" என்றாள்.

பாக்கியம் நாணத்தோடு தலைகுனிந்து கொண்டாள்.

4

மறுநாள் பகல் வெகுநேரங் கழித்தே சோன் அறைக்கு வந்து சேர்ந்தான். நீலன் வெகு ஆவலோடு வரவேற்றான். முகுந்தனும் இருந்தான் அங்கு!

"என்னப்பா! படையெடுப்பின் முடிவு என்ன?... தோல்வியா, வெற்றியா?"

"........................"

"ஊமையனாகிவிட்டாயா! அப்பொழுது பாக்கிய தேவியின் அருள் கிடைக்கவில்லையா?"

"அருள் கிடைத்தது...கேட்ட வரமல்ல, முக்கால் பாக வரம்!"

"சேரா...புரியவில்லையே!"

சேரன் பாக்கியத்தின் நடவடிக்கைகளை எடுத்துச் சொன்னான். நீலன் சிரித்தான். பாவ காரியம் என்று எதைச் சொன்னானோ அதையே செய்ய முயன்றிருக்கிறான். முயற்சியிலே தோல்வி கண்டு முகஞ்சுளித்து நிற்கிறான்!

"மறுப்பிற்குக் காரணம்...?"

"பாவம்..."

"அதுமட்டுந்தானா...?"

"காக்கப்படவேண்டியது கற்பாம், நெறியாம், ஒழுக்கமாம்...இன்னும் ஏதேதோ சொன்னாள்."

நீலன் தனது இயற்கையான போக்கிலே சேரனிடம் பேசினான். பாக்கியம் உண்மையிலேயே பெண்களால் வழிபடவேண்டிய தெய்வம்...உணர்ச்சிக்கு அடிமையாகி பிறகு அவதிப்படும் பெண்மணிகளுக்குத் தக்கதோர் வழி காட்டிவிட்டாள். தனியறையில், தன்னால் உண்மையில் விரும்பப்படும் ஒரு வாலிபனிடம் மூன்று மணி நேரத்திற்கு மேல் வாதாடியும், போராடியும் தப்பித்துக் கொண்டாள். தனிமை இனிமையைக் கிளப்பிவிட்டது. காதலன் வற்புறுத்தலை ஏவியபடி இருந்தான். சமயமோ சதிசெய்யத் திட்டமிட்டுவிட்டது—என்றாலும் தப்பித்துக் கொண்டாள். எப்படி? அதுதான் மன அடக்கம்... மன உணர்ச்சிகளுக்கு அவள் போட்டுவிட்டாள் ஆயுள்

தண்டனை! ஆகவே அவள் வென்றாள். அவள் வெற்றியை நாம் பாராட்டுவோமாக!

அவளுக்குத் தெய்வ பக்தி உண்டோ இல்லையோ—அது ஒருபுறம் இருக்கட்டும். பாவம் என்று தடுத்திருந்தால் அதில் நாம் கவலைப்படவேண்டியதில்லை. செய்யக்கூடாதது என்று சொல்வதற்குச் சமூகம் சொல்லிக்கொடுத்த பரம்பரைச் சொல் அது என்ற அளவோடு நிறுத்திக்கொள்ளலாம்! அந்த நேரத்தில் எதையாவது சொல்லி அவள் அவனைத் தடுத்திருக்கவேண்டும். அவன் காதல் வாளை வீச அவள் பாவக் கேடயத்தைப் பயன்படுத்தத்தான்வேண்டும்.

கற்பைக் காட்டித் தடுத்தாளா? அந்தக் கற்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேண்டும்.

ஆண்கள் அடங்காக பிடாரிகளா......அறிவற்றவர்களா—உணர்ச்சிக்கு அடிமைகளா—கடமையுணராத கயவர்களா—நரம்புகளுக்கு நடுங்கிடும் விலங்கினங்களா? ஏன் அவர்களுக்குக் கற்பு என்ற விதி பூட்டப்பெறவில்லை? சமூக சட்டங்கள் செய்த சமூக நிர்ணய சபையில் அன்று பெண் அங்கத்தினர் இல்லவே இல்லையோ—இதையெல்லாம் வகுத்தவர்கள் ஆண்களாகவே போய்விட்டார்களோ! இல்லாவிட்டால் பெண்ணுக்கு ஒரு நீதி, ஆணுக்கு ஒரு நீதி என்று ஏன் எழுதினார்கள்?

பாக்கியம் எதையோ கூறித் தன்னை மனிதப் பிறவி யென்று நிரூபித்துவிட்டாள். அவள் வாழ்க—இப்படி நீலன் பேசவே, முகுந்தன் குறுக்கிட்டான்.

பாவம், கற்பு—என்று வசதியிருந்ததால் பாக்கியம் தடுத்துவிட்டாள். ஆனால் தகாது என்று தெரிந்தும் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டிய அவசியத்திலே தள்ளப்படுகிறார்கள். நெருப்பு என்று தெரிந்தும் அதில் ஓடுகிறார்கள். மடு என்றுணர்ந்தும் அதிலே குதிக்கிறார்கள்.

மலக்குழியென்றும், சாக்கடை வாய்க்கால் என்றும் புரிந்தும் அதில் நடக்கிறார்கள்—ஏன்? அந்த நிலைமையை யார் மாற்றுவது? எப்படித் திருத்துவது? இதுவரை திருத்தாதற்குக் காரணம் அலட்சியமா? அவசியமில்லை என்று கருதியதாலா? முடியாமைதான் காரணமோ! முகுந்தன் தன் வாழ்விலேயே நடந்த ஒரு நாள் நிகழ்ச்சியை மிக உருக்கத்துடன் சொன்னான். இருவரும் உன்னிப்பாகக் கேட்டனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்—ஒரு நாள் பகல்—திருச்சியில் 'டிக்கட்' பரிசோதகனாக இருந்தான் முகுந்தன். மதுரையிலிருந்து வந்த வண்டியிலிருந்து இரண்டு பேர் வந்தார்கள். அவர்களிடம் 'டிக்கட்' இல்லாமையால் வண்டியில் வந்த சோதனையாளன் அவர்களை முகுந்தனிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்று விட்டான். கூட்டங் குறைந்த பிறகு அவர்களைப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஒரு வயதான பெண்மணியும் ஒரு அழகு சுந்தரியும் நின்றுகொண்டிருந்தாள். அவர்களைப் பார்த்தால் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவே தெரிந்தது.

"டிக்கட் இல்லையா?"—முகுந்தன் கடுமையாகவே கேட்டான்.

"இல்லிங்க—கொண்டு வந்த துட்டெல்லாம் இது ஆத்தாளை தேடுறதிலேயே செலவாயிடுச்சு!"—அந்தப் பெரிய அம்மா சொன்னாள்.

முகுந்தன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவள் நாணமும், அச்சமும் கொண்டு பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்.

"ஏம்மா, உன் பெயர் என்ன?"

'டிக்கட்'டைக் கேட்க வேண்டியவன் பெயரைக் கேட்டான்.

"சகுந்தலை—" என்றாள் மெல்லிய குரலில்.

அவளுடைய அழகு முகுந்தன் முகத்திலே இருந்த கடுகடுப்பை விரட்டி விட்டது. அவன் கனிவாகவே பேசினான். அழகு ஒரு விசித்திரமான மயக்கப் பொடி! அது பட்ட இடம் துளிர்க்கும்—முகுந்தனின் கண்கள் அதனால்தான் போலும் விசாலமாக விரிந்தன! அவளைப் பரிவோடு விசாரிக்கத் தொடங்கினான். பெரியவள் இடையிடையே பேசினாலும் சகுந்தலையின் பேச்சைக் கேட்பதிலேதான் அவனுக்கு இன்பம் இருந்தது. பருவமும் பருவமும் விரும்பின, எதிரிடைத் துருவங்கள் இழுத்துக் கொள்வதைப் போல!

சகுந்தலையின் உடனிருப்பவள் அவளுடைய சொந்தத் தாயல்லவாம்! வளர்த்தவளாம். அவளைப் பெற்றவள் அவளுக்குப் பத்து வயதாக இருக்கும் பொழுதே ஓடிவிட்டாளாம். அதிலிருந்து அந்த அம்மாள் தான் வளர்த்து வந்தாளாம். அவளுடைய தாயை யாரோ திருச்சியில் பார்த்ததாக அவளுடைய வளர்ப்புத் தாய் வடிவாம்பாளிடம் சொன்னார்களாம். சகுந்தலை தன் தாயைப் பார்க்கவேண்டும் என்று துடித்தாளாம். ஆகவே மதுரையிலிருந்து புறப்பட்டு வந்தார்கள். 'வழியிலேயே கொண்டுவந்த சிறுதொகை கரைந்து விட்டது. பிறகு துணிந்து புகைவண்டியில் ஏறினார்கள். மாட்டியும் கொண்டார்கள். இப்பொழுது முகுந்தனின் கருணையை எதிர் பார்த்து நிற்கிறார்கள்!

"உங்கள் ஊர்...?"

"மதுரை—"

சகுந்தலை இப்பொழுது சாதாரணமாகவே பேசத் தொடங்கிவிட்டாள்.

"அடடா, என் சொந்த ஊர் அதுதான். நம் ஊர்க் காரர்களாகிவிட்டீர்கள்!"—முகுந்தன் புளுகினான்.

"தம்பி... எங்களை நீதான் காப்பாத்தனும்..."—வடிவாம்பாள் வேண்டுகோள் இது.

"பயப்படாதே அம்மா... சகுந்தலையைப் பார்த்ததிலிருந்து என் மனது படாதபாடுபடுகிறது! நீங்கள் போய்த் தேடிப் பார்த்துவிட்டு என் அறைக்கு வந்து விடுங்கள்..."

முகுந்தன் இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினான். பிறகு தனது அறையின் முகவரியைத் தெளிவாகக் கூறினான். அவர்கள் நன்றியறிதலோடு பார்த்தார்கள். வடிவாம்பாள் அழுதாள். சகுந்தலை அவனை ஆர்வத்தோடு நோக்கினாள். அவர்கள் வெளியேறிச்சென்ற திசையை நோக்கி வெகுநேரம் பார்த்துக்கொண்டே நின்றான்.

அன்று மாலை முகுந்தன் தன் அறையிலிருந்த மாடியின் வெளித்தாழ்வாரத்தில் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தான். ஆம், அவன் அவர்களை எதிர்பார்த்தான். ஏன்? அவன் மனம் சொல்லக் கூசுகிறது. அவன் எண்ணம் நடுங்குகிறது! அவன் மனச்சாட்சி அவன் இதயத்துடன் 'பாக்ஸிங்' போடுகிறது! அவன் என்ன செய்வான்? சகுந்தலை ஏன் அப்படி அனுதை போல வர வேண்டும்... எங்கிருந்தோ வந்து எங்கேயோ போய்விட்டாள். ஆனல், அவன் மனத்தில் தொடங்கிய மனப்போர் மட்டும் இன்னும் முடியவில்லையே! அவள் ஏன் அழகியாக இருந்தாள்? இருந்தது கூடக் குற்றமில்லை. ஏழையாகப்பிறந்து, முகுந்தனின் ஆதரவை நாடவேண்டிய

நிலைமை ஏன் ஏற்பட்டது? ஒவ்வொருநாளும் எத்தனை ஆயிரம் அழகிகள் போகிறார்கள்......அவர்களைப்பற்றி யெல்லாம் அவன் நினைக்கிறானா? நினைவுதான் வருகிறதா? ஆனால் சகுந்தலையிடம் மனம் அப்படி ஏன் ஓட்டவேண்டும்?...அவள் வருவாளா? வராமல் ஏமாற்றி விடுவாளா? வந்தால் என்ன செய்வது? எப்படிப் பேசுவது?

முகுந்தன் சிந்தனை வளர்பிறையாகவே இருந்தது. அப்பொழுது அவன் எதிர்பார்த்தபடியே அவர்கள் தூரத்தில் வந்துகொண்டிருந்தார்கள். முகுந்தன் மாடிப் படிகளில் இறங்கிப்போய் அவர்களை வரவேற்கத் தயாராக நின்றுகொண்டிருந்தான். அவர்கள் வந்ததும் மேலே அழைத்துவந்தான். நிலாபட்ட அந்த மாடித்தாழ்வாரத்தில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.

"சகுந்தலை, கிடைத்தாளா உன் அன்னை...?"—உரிமையோடு பெயரிட்டுக் கேட்டான்.

"இல்லீங்க..."—அவள் சொன்னாள்.

"தம்பி...எங்களை எப்படியாவது ஊருக்கு அனுப்பி விட்டால் கோடிகோடி புண்ணியம்" என்றாள் அவளின் வளர்ப்புத்தாய்.

"நாளைக்காலை வண்டியில் ஏற்றிவிடுகிறேன்" என்றான் முகுந்தன்.

அவர்களை அழைத்துக்கொண்டுபோய் பக்கத்து உணவுக்கடையில் நல்லவிருந்து நடத்தினான். பிறகு தன் அறையிலே அவர்களைப் படுக்கவும் சொன்னான். அவன்மட்டும் தனியாக வெளித்தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டான். ஆனால்...அவனது மனம்? போர், போர், ஒரே போராட்டம்! வெளியிலே நல்ல நிலவு...ஆனால், அவனைச் சுற்றிலும் ஒரே இருட்டு...வெளிப்புறத்தில் மட்டுமா, அவன் உள்ளத்திலும்தான்! சுவர்க்கோழி ஙொய், ஙொய்...என்று அழுதபடியே இருந்தது;

ஆந்தை அலறிக்கொண்டிருந்தது. இருந்தாலும் அவன் மனம் தூங்கவில்லை; பயப்படவில்லை.

பக்கத்து அறையில் ஒரு அழகி தூங்குகிருள்... அனுதரவாய்! நீ நினைத்தால் உன் கனியாவாள். ஏன் அஞ்சுகிருய். போ...போ...போ...என்று விரட்டியது அவன் ஆசை, பயப்படுகிருயா...நாணுகிருயா...எனக்குத் தெரியவில்லையே...அட மதிகெட்டவனே...என்று பருவம் தூண்டிவிட்டது. விழி...எழு...தூங்காதே! முன்னேறு...தூங்கும் பொன் வண்டோடு இன்பத் திருவிழா கொண்டாடு. ஓடு...இதுபோல காமம் தட்டி விரட்டியது.

அவன் மனத்திலே புயல்......வீசத் தொடங்கி விட்டது!

அவள் பேதை முறையோடு யாருக்காவது உரிமைப் படுத்தவேண்டிய செல்வம். பாழாக்கி விடாதே!... அடக்கம் சொல்லிற்று. உதவி செய்தாயே...இரக்கம் உள்ளவன் போலக் காட்டிக்கொண்டாயே...இப்பொழுது உபத்திரவம் செய்யப்போகிருயா? அட துரோகி...... இப்படிப் பொறுமை படபடக்கப் பேசிற்று. அவள் ஏழையடா, அவளது வாழ்வைப் பாழாக்காதே. இன்று விபசாரத் துவக்கவிழா நீ செய்துவிட்டால் நாளை அவள் நல்வாழ்வு நாசமாகிவிடும். அந்தப் 'பெருமை' உனக்கு வேண்டாம் நீதி பேசிற்று. பெண்கள் முன்னேற்றம் என்று அடிக்கடி பேசுவாயே...இதுதான் அந்தத் தொண்டா?...நல்ல வேடிக்கை...எனக்குமட்டும் அதிகாரமிருந்தால் உன்னைத் தூக்கிலே போட்டுக் கொன்று விடுவேன்—கொள்கை கோபத்தோடு கூவிற்று!

அவன் மனத்திலே வெள்ளம்...பெருகத் தொடங்கி விட்டது!

நிலைமை அவனை எழுப்பி விட்டது. நேர்மை படுக்கச் சொன்னது. என்ன செய்வான்? ஆம், நீதி

தோற்றுவிட்டது...தோற்றே போயிற்று! அவன் எழுந்தான். மெதுவாக நடந்தான். பூனைபோலச் சென்றான். ஆந்தையின் அலறல் அவனைத் திடுக்கிட வைத்தது. எங்கேயோ ஒரு நாய் மட்டும் அந்த அமைதியான இரவை அழுது அழுது விரட்டிக்கொண்டிருந்தது.

மெதுவாகக் கதவைத் திறந்தான். அந்தப் பெரியவள் விடும் குறட்டைச் சத்தம் மட்டும் கேட்டது. அவன் நெருங்கினான். அவன் கால்கள் நடக்க மறுத்தன. அவன் இரத்தம் எண்ணெய்க் கொப்பரையாகக் கொதித்தது. அவளை மெதுவாக எழுப்பினான். அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவளைச் சத்தமின்றி வெளியில் அழைத்து வந்தான்.

"என்னங்க..."—அவள் பேசினாள். தொண்டை அடைத்துக்கொண்டது.

"வந்து..."—முகுந்தன் பேசினான் எதைப் பேசுவது...?

பிறகு...அவள் புரிந்துகொண்டாள்.

"ஐயோ...இது பாவம்! பெண் பழி பொல்லாது என்னைக் கெடுக்காதீர்கள்... நீங்கள் செய்த உதவியெல்லாம் இதற்குத்தானா?"—அவள் விசித்து அழுதபடியே சொன்னாள்.

தடுக்கக்கூடிய அளவு தடுத்தான். முடியவில்லை. முகுந்தன் தன் எண்ணத்தை முடித்துக்கொண்டான். அவன் அவளைப் பிறகு அவள் படுக்கைக்கு அனுப்பிவிட்டான், தனது கயிற்றுக் கட்டிலில் வந்து படுத்தான். அப்பொழுதும் ஆந்தை அலறிக்கொண்டிருந்தது, எங்கோ ஒரு மூலையில் கழுதை வேறு 'சங்கீதக் கச்சேரி' நடத்திக்கொண்டிருந்தது, அவன் மனம் போராடிக் கொண்டுதானிருந்தது.

பொழுது விடிந்தது. வடிவாம்பாள் எதுவும் தெரியாதவளாகத் தென்பட்டாள். முகுந்தன் மனத்தில் மட்டும் துரோகம் உதைத்துக்கொண்டே இருந்தது. சகுந்தலை அவனை ஓரக் கண்களாலேயே பார்த்தாள், இரவு அழுத கண்ணீர்க்கோடு ரோடாக அவள் கன்னங்களில் தெரிந்தது. வடிவாம்பாள் தாயைக் காணுத ஏக்கத்தால் அழுதிருக்கிருள் என்று எண்ணிக்கொண்டாள். அவளுக்கல்லவா தெரியும்—இரவிலே ஒரு இன்பக் கொள்ளை நடந்தது என்று! பாவக் கூட்டுறவு ஏற்பட்டுவிட்டது என்ற உண்மை! பாவத்தைச் செய்தாள், பாவம் என்று தெரிந்துகொண்டே! பரிதாபம்!

காலையுணவை முடித்துக்கொண்டு அவர்களை மதுரை வண்டியிலேற்றி விட்டான். வடிவாம்பாள் கையெடுத்துக் கும்பிட்டாள்... தன்னலங் கருதாத பேருபகாரி தங்கமனது படைத்த தம்பி, இரக்க உள்ளங்கொண்ட இலட்சியவாதி, நேர்மையிலே நாட்டமுள்ள வாலிபன் நீதியிலே நம்பிக்கையுள்ள இளைஞன், ஏழைகளின் தோழன், அனுதைகளின் ஆதரவாளன், திக்கற்றவரின் தக்க துணை... இப்படிப்பட்ட வார்த்தைகளால் அவள் அவனைப் புகழவில்லை. ஆனுல், இந்தக் கருத்துள்ள சொற்களை அவளது இயற்கையான தமிழில் சொல்லி வாழ்த்தினுள். சகுந்தலை கொஞ்சம் சிரிப்பும், முழுக்க முழுக்க அழுகையோடும் அவனைப் பார்த்தாள். வண்டி நகர்ந்தது.

சாபியில் 'காபின்' என்ற நஞ்சிருக்கிறது என்று தெரியும். ஆனுலும் குடிக்கிறேம்! செங்கல் பொடியினுலும், சாம்பல் தூளினுலும் பல் விளக்கினுல் தீது என்று பாடஞ்சொல்லும் விஞ்ஞான ஆசிரியர் கூட அந்தச் சாம்பலினுல் பல் துலக்குகிருர், சில சமயங்களில் அது போலத் தான் பாவமும்! கொலை செய்வது பாவம். ஆனுல், நம் குல 'தெய்வங்களின்' கைகளிலே உள்ள ஆயுதங்களைப்

பார்த்தாலே குலே நடுங்குகிறது! பொய் சொல்வது பாவம். ஆனல், பொய்யைச் சொல்லிக் கலகம் விளேவிப்பதே தொழிலாகக்கொண்ட திரிலோக ஞானி நாரதர் நம் தொழுகைக்கு உரியவர்! காமம் ஆகாதது நமக்கு. ஆனல், 'பர்ணகசாலே நுழைவதே!...' கொள்கையாகக் கொண்ட இந்திரன் நமக்குக் கடவுள்! சூதாடுவது குற்றம் இங்கு. சூதாட்டத்தில் மனேவியையும் வைத்துத் தோற்றதாகக் கூறும் கதை நமக்கு இதிகாசம்! குடிப்பது இங்கு கூடாத செய்கை. ஆனல், குடிப்பதே குலதர்மம் என்று கொண்ட தேவர்கள் நமக்கு உயர்ந்தவர்கள்!...என்ன விசித்திரம்!

முகுந்தன் சகுந்தலே கதையைச் சொல்லிப் பாவத்தில் நிலேமையை விளக்கினன். நீலனும், சேரனும் சிந்தனேயில் ஆழ்ந்தனர்.

பிறகு ஊருக்குப் புறப்பட்டனர். அதே வண்டியில் முகுந்தனும் வந்தான். அவர்கள் கல்லூரிக்கு வந்து சேர்ந்தனர்.

மறுநாள் நீலன், சேரன் அறையில் நுழைவதற்கு முன்னலேயே சேரன் திருத்தாண்டவமாடினன்!

"போவோம் புறப்படு, மதுரைக்கு..."

"அறுபத்து ஐந்தாம் திருவிளேயாடல் புரியவா?"

"ஆமாமப்பா, பாக்கியம் வரச்சொல்லி யெழுதி விட்டாள். அவளது தோழி வில்லியின் வீடாம் மதுரையில்... நான் சந்திக்க வேண்டுமென்று அன்பின்மீது ஆணேயிட்டு அழைத்திருக்கிருள். நான் கட்டாயம் போக வேண்டும்!"

வில்லி...நீலனே வரவேண்டாமென்று எழுதி விட்டாள். அவள் வீட்டில் பாக்கிய மிருக்கிருள். சேரனுக்கு அழைப்பு விட்டுவிட்டாள். நீலன் முகம் சிறிது வாட்டமடைந்தது!

"அது சரி — இது ஐந்தாம் ஆண்டு என்பதை மறந்துவிட்டாயா? அலமாரியிலே அறிவு மூச்சு விட்ட படியே நம்மைப் பார்த்துச் சிரிக்கும் பேராசிரியர்களைக் கேள்—வின்சன்ட் ஸ்மித், டன்னிங், மன்ரோ, சர்க்கார், சர் தேசாய், எட்மன்ட் பர்க், மெயிட்லண்டு—இவர்களை வேண்டிக்கொள். அவர்கள் உத்தரவு கொடுத்தால் போ—பாக்கியத்தோடு கொஞ்சிக் குலவு"

"இந்த ஆண்டையே ஒத்திப்போடலாம். ஆனால், காதலைத் தள்ளிவைக்க முடியுமா?"

"அப்படியானால் போப்பா, போ—உடனே புறப்படு!"

"நீயும் வாயேன்—இரண்டு தினங்களில் திரும்பி விடலாம்!"

நீலன் முகம் இன்னும் கடூரமாக மாறிற்று. அவன் வருவதா—மதுரைக்கு! வருகிறேன் என்று எழுதியும் வசாந்த என்று எழுதிவிட்டாளே லில்லி!

"வெனிஸ் வியாபாரி கதையிலே வரும் மாப்பிள்ளைத் தோழனுக்கும் மணம் நடப்பதைப்போல—வம்புகள் வந்து சேரவேண்டுமா? நான் ஒரு ஏக்கத்தைக் கட்டிக் கொண்டு அழவேண்டுமா? நான் வருகிறேன் இரயிலடி வரையில்—"

தன் மனநிலையை வெளிக்காட்டாமல் மறைக்க இந்த வார்த்தைகளால் வேடிக்கையை அழைத்தான்!

நீலன் தன் தோழனை அனுப்பிவைத்தான். திருச்சி வரை எந்த வகையான இடையூறுமின்றித் தூங்கியபடியே சென்றான். திருச்சியிலே இறங்கி மதுரை வண்டியைப் பிடித்தான். அங்கு ஒரு வாலிபன் இருந்தான். அவன் தலையைப்பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரிய வில்லை. அவையெல்லாம் அகதியர் கூட்டப்போலவே கிடந்தன. அவன்கண்களில் மஞ்சள்படிந்த ஒரு நிறம்-அது

பார்க்கவே ஒரு வகையான உணர்ச்சியைக் கொடுத்தது! அவன் சட்டையைப் பற்றியோ, கீழே அணிந்திருந்த 'பைஜாமா'வைப் பற்றியோ சிந்திக்கவே இல்லைபோலும்! அழுக்கேறி ஆட்சிபுரியும் அந்த மஞ்சள்நிறச் சட்டைக்குப் பொத்தானும் இல்லை. வெள்ளைக் கால்சட்டை கருப்பைக் கடன் வாங்கியிருந்தது. அவன் பக்கத்திலே ஒரு பை. அது நிறையத் துணிமணிகள்! அவன் கையிலே ஒரு 'சிகரெட் டின்', இன்னொன்றில் தீப்பெட்டி. எப்பொழுதுமே புகைப்பான்போலிருக்கிறது! ஒரு வெண் சுருட்டுக்கு நெருப்புக் கிடைத்துவிட்டால் பிறகு தீப்பெட்டிக்கு வேலையில்லை—ஆம், அவன் நிறுத்தாமல் ஒன்று மாற்றியொன்ருக எடுத்துப் புகைத்துக் கொண்டிருந்தான்! அவன் பக்கத்திலே போய்த் தன் பெட்டியை வைத்துவிட்டு உட்கார்ந்தான் சோன். வண்டி நகர்ந்தது. அருகிலிருந்த வாலிபன் தானகவே பேசினன்!

"எனக்குப் பைத்தியமாம்—பிரதர்—என் பெற்ருேர்கள் நினைக்கிருர்கள். நண்பர்கள் அப்படிச் சொல்கிருர்கள்."

சோன் ஆச்சரியப்பட்டான்.

"நீங்கள் சொல்லுங்கள்—நான் பைத்தியக்காரனு?"

"………………"

"ஏன் பேசாமலிருக்கிறீர்கள்! நீங்களும் அப்படியேதான் நினைக்கிறீர்களா?"

சோனுக்கு அந்த வாலிபனின் பேச்சுக்கள் வியப்பையே தந்தன. அவன் மேலும் மேலும் பேசவே அவன் ஒருவேளை கொஞ்சம் 'மாதிரிதானு' என்று எண்ணினன். ஆனல், அதைத் திடமாகவும் சொல்ல முடியவில்லை. ஆகவே, அந்த வாலிபனைப்பற்றி அறிந்து கொள்ள விரும்பினன்.

"நண்பரே—நான் அப்படி நினைக்கவில்லை" என்றான் அழுத்தமாக.

"உலகத்தில் எத்தனை இங்கர்சால்கள் இருந்தார்கள்? ஒருவர்தானே! அறிவாளிகள் எண்ணிவிடக்கூடியவர்கள். நீங்களும் அதில் ஒருவர்..."—அவன் இப்படிப் பேசினான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்...?,'—சேரன் கேள்வி.

"நான் மதுரைக்குப் போகிறேன்..."

"அடடா, நானும் அங்கேதான் போகிறேன்"

"அப்பொழுது இருவரும் நெருங்கிவிட்டோம்"

பிறகு கொஞ்ச நேரம் அமைதி...இருவரும் பேசவே இல்லை.

"மதுரையில் என்ன வேலை...?"

"எனக்குப் பிடித்திருக்கும் மனக் குழப்பத்திற்கு மருந்து சாப்பிடவேண்டுமாம். அங்கு "டாக்டர், நாரணன் என்பவர் மகா மேதாவியாம்—அவரிடம் போகச்சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள்., ஆகவே புறப்பட்டேன். ஆனால் 'டாக்டரை'ப் பார்க்க அல்ல, வேறொருவரை...என் மனச் சுழற்சியை மாற்றவல்ல ஒருவரை!"

"டாக்டரிடம் காண்பிப்பதில் குற்றம் ஒன்றுமில்லையே..."

"குற்றமில்லை 'பிரதர்,' எனக்கு மருந்திருக்கும் இடமே தெரியும். அதனால்தான் மதுரைக்குப் புறப்பட்டேன்"

"எனக்குப் புரியவில்லையே!"

"ஒரு பெண்ணின் இதயத்தை ஆளும் அரசனாக விரும்புகிறேன். அவளை என் இதயத்தின் அரசியாக.

இருக்கச் செய்ய எண்ணுகிறேன். அவள் காதலைமட்டும் பெற்றுவிட்டால் பிறகு பிச்சைக்காரனுகத் திரிந்தாலும் கவலைப்பட மாட்டேன்:.....இது என் குறிக்கோள் 'பிரதர்'"

"ஆம், அதற்காக..."

"பைத்தியமானேன்..."

அந்த வாலிபன் பிறகு தன் வாழ்க்கை வரலாற்றை விரிவாகச் சொன்னுன். அவன் பெயர் வேலன். அவன் வில்லி யென்ற பெண்ணைக் காதலித்தானும். ஆனுல், அந்த எண்ணத்தை, விருப்பத்தை, காதலை மூடி மூடி வைத்தானும். நெருப்பைத் துணியில் மூடுவதுபோலவே அவன் முயற்சி வீணுகிவிட்டது. அது மட்டுமா? காலங் கடத்தியதால் அந்தக் கிளி பறந்துவிட்டது. மற்றொருவன் கையிலே சிக்கிவிடுவது போலவும் தெரிந்தது. இருப்பினும் அவன் அவளைப் பிரிய முடியவில்லை. சாவை அவன் வரவேற்கத் தயார். ஆனுல் பிரிவை அவனுல் தாங்க முடியவில்லை. நெருப்பிலே இறங்கத் தடங்கலில்லை. ஆனுல், குளிரோடை போன்ற அவள் கண்களை மறக்கவே முடியாது. இந்த உலகத்தையே விட்டோடிவிடக்கூடிய முறையில் ஒரு தண்டனையிருந்து, அதைச் செய்வதும் சாத்தியமானுல் அதை எற்கவும் அவன் பயப்படவில்லை. ஆனுல், அவளது முத்துப் பல் வரிசையின் ஒளிச் சிரிப்பை இழக்க முடியாது. ஆம், அவன் தன் உயிரை அவளிடம் குடியேற்றி விட்டான். பிறகு உயிரைப் பிரிந்து அவன் இருக்க முடியுமா?

அவளை மறக்க அவன் மேற்கொண்ட செயல்கள் அப்பப்பா, பாவக்கறை படிந்தவை; உலகு உகந்ததல்ல என்று ஆண்டு பலவாய் உபதேசித்தவை; நல்லோர், பெரியோர் தள்ளிவைத்தவை! ஒரு பாவையை மறக்க அவன் பாவியானுன்...பாவத்தைச் செய்தும் அந்தப்

பதுமையை அவனது உள்ளக் கோவிலிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. புகை பிடித்தலை எவ்வளவு கேலியாகப் பேசியிருப்பான். அவன் குடும்பத்திலேயே யாருமே அந்தப் பழக்கத்தை மேற்கொண்டவர்கள் கிடையாது. அந்தப் புகை தரும் சூட்டினால் அந்தக் குளிர்பனி நினைவை உருக்கி வெளியில் ஓட்டிவிடலாம் என்று பார்த்தான். முடியவில்லை. மதுவிலக்கு என்று மகான்கள் பேசுகிற நேரத்தில்மங்கையின் நினைவை மறக்கடிக்கக் குடித்தான்; குடித்தேவிட்டான்! குமரி மோகத்தால் குடியனானான். கண்ணாடிக் கோப்பைகளின் விளிம்புகளில் தன் உதடுகளைப் பதித்து அவளது உணர்ச்சி வெடிப்புகளை மாதுளை பிளப்புகளை மறக்க மகேந்திரஜாலம் பண்ணினான். முடிந்ததா? தோற்றான். போதையிலே தன் நினைவை ஆழ்த்தி அந்தப் பெண்ணணங்கின் எண்ணத்தை விரட்டி விடலாம் என்று திட்டமிட்டான். போதையிலும் அவள் பெயரையே உளறினான். கடைசியாகக் 'கலவிக்கடை' வரையிலும் சென்றான். ஆனாலும் வில்லி...அவன் கட்டிய இன்பக்கோட்டையின் எழிலரசி... இலட்சிய நல்லாள்... அவனை வாட்டிக்கொண்டே இருந்தாள். ஆகவே, கடைசியாக அவள் அவனைப் பித்தனாக்கிவிட்டாள். ஊரார் பித்தன் என்று சொல்கிற அளவு காதல் வேகத்தில் தன்னை மறந்தான்...!

"வில்லி யென்றால் யார்?"

"அவள் இப்பொழுது ஒரு 'டைப்பிஸ்ட்'. அவளது தந்தை ஒரு வழக்கறிஞர். அவர் பெயர் டேவிட்."

"நண்பரே, நாம் இருவரும் ஒரு பாதையிலே பயணஞ் செல்கிறோம். நீர் வில்லியைத் தேடுகிறீர். நான் வில்லி வீட்டிலே தங்கியுள்ள அவளது தோழி பாக்கியத்தை நாடிச்செல்கிறேன். நாம் ஒரு பட்டியலிலே பெயர்ப் பதிவு செய்துகொள்ள வேண்டியவர்கள்."

வேலன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். சேரன் அவனுடன் மிகவும் நெருங்கிய நண்பனைப் போலவே பழகத் தொடங்கிவிட்டான்.

"நண்பரே, காதல் என்றால் என்ன?"

"புயல்காற்றிலே சிக்கிய வர்ணக் காற்றாடி!"

"மணம் என்பது?"

"அது ஒரு செய்தி இலாகா!"

பாக்கியம் முதலில் அந்தச் செய்தி இலாக்காவின் மூலம் உலகத்துக்கு அவர்கள் இருவரும் உரிமைப் படுத்தப்பட்ட துணைவர்கள் என்று சொல்லிவிடச் சொல்கிறாள். பிறகு எந்த வகையான உரிமையோடு தரும் கட்டளைகளையும் அவள் நிறைவேற்றுவதாகச் சொல்கிறாள். ஆம், தன்மீது பழிவரக் கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு அப்படிக் கூறினாள். அதுதான் நேரான வழி. ஆத்திரம் அவனை அப்படி ஆட்டிவைக்கிறது. சகுந்தலையின் கதி—இலக்கிய சகுந்தலை கிடக்கட்டும்... முகுந்தன் சொன்ன சகுந்தலையின் முடிவு அவளுக்கு வரலாமா?

வேலனும் லில்லியை உடன் மணக்கத்தான் விரும்புகிறான். அவன் வேறு சாதி, மதம்...அவள் வேறு மதத்தவள். அப்படியிருந்தும் எதிர்ப்பை எண்ணாமல், சமூகத்தின் சாபத்தைப் பொருட்படுத்தாமல் அவன் துடிக்கிறான். ஆனால், சேரன்...தன் சாதியைச் சேர்ந்த பெண்ணை மணக்கத் தயக்கமேன்? தவக்கம் எதனால்...? பாக்கியத்தை அவன் விரும்புவது உண்மையானால், அவளிடம் காதல் கொண்டிருப்பது உறுதியானால் உடனே மணத்தை முடிக்கவேண்டும். பாக்கியத்திடம் அடக்க முடியாத காதல்கொண்டு விட்டான். அதுவும் அவளது மன அடக்கத்தை எண்ண எண்ண அவன் காதல் தீ

கொழுந்துவிட்டு எரிந்தது—அவளது தடுப்பு அவனது எண்ணக் கடலில் இன்ப ஓடத்தைத் துரிதமாகத் தள்ளும் துடுப்பாக மாறிவிட்டது.

ஆனல், அவளுடைய தந்தையை எப்பொழுதுமே அவனுக்குப் பிடிப்பதில்லே. அவர் தாழ்ந்த குலத்திலே பிறந்ததற்காக வருந்துவார். ஆனல், அதைத் திருத்த முனேவதில்லே. திருத்துவோரையும் வெறுப்பார். அவர் தன் உயர்வையே பெரிதாகக் கருதுவார். தன் இனத்தின் இழிவைத் துடைக்க எண்ணமாட்டார். அவர் படித்தவர். பட்டம் பெருவிட்டாலும், பட்டம் பெற்றவர்களே விட கெட்டிக்காரர்! அதுவரை மகிழ்ச்சிதான்...ஆனல், அந்தப் படிப்பைத் தன் உடன்பிறந்தவர்கள் உயரப் பயன்படுத்தினல் எவ்வளவோ சிறப்பாக இருக்கும். அதை அவர் செய்யவில்லே. அவர் அந்தக் குலத்தில் பிறந்ததாகச் சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுவார். சமூகம் சொல்கிற குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொள்கிருர் என்று அர்த்தமா...? அவர்கள் பாவிகளா? தீண்டத் தகாதவர்களா? அதை எதிர்த்துப் போராட அவர் ஏன் எண்ணவில்லே? பாக்கியத்தின் தந்தை பரமன் இந்தப் பிறந்த மண்ணிலே வாழவும் கூசி மலேயாவுக்குச் சென்று விட்டார். அங்கு பெரும் பணக்காரனகவும் ஆகிவிட்டார். இந்தியாவில் தன் மகளேப் படிக்கச் செய்தார். சேரனின் தந்தை வீரனரோ பரமனுக்கு நேர் எதிர்மாறு...! தன் இன முன்னேற்றமே தனது முன்னேற்றம் என்ற கொள்கையுடையவர். இவர் எப்படி ஒத்துப்போக முடியும்? பெண் கேட்டுப் பெற்று 'சம்பந்தம்' போடமுடியுமா? அது நல்ல முறையில் நீடிக்குமா?

சேரனின் பெற்ருேர்கள் அவன் விருப்பத்திற்கு மாருக எதையும் செய்யமாட்டார்கள். ஆனல், அவர்கள் என்ன கோட்டை கட்டியிருக்கிருர்களோ, யார் கண்டார்கள்? இதைப் போய்ச் சொன்னல் திடுக்கிட்டுப் போய்

விட மாட்டார்களா? சேரனைப் படிக்கவைக்க அவர் எவ்வளவு தியாகம் செய்கிறார்...எவ்வளவு பொருட் செலவு! அவரை எப்படி எதிர்ப்பது? அவருக்கு நிச்சயமாகப் பரமனின் கூட்டுறவு பிடிக்காது. ஆனால் அவன், விருப்பத்திற்கு எதிரிடையாகப் போகக்கூடாது என்பதற்குப் பரமனிடம் சென்றாலும் அவர் எதிர்த்தே பேசுவார்; இணங்கமாட்டார்! அப்பொழுது என்ன செய்வது? பாக்கியம் பார்த்துக் கொள்வாளா? அவள் முயற்சிசெய்து இதற்கு ஒப்புக்கொள்ளச் செய்வாளா? காதலுக்காகக் காட்டையும் மேட்டையும் கடந்து, நாட்டையும் வீட்டையும் துறந்து, உற்றார் பெற்றாரை மறந்து நின்றவர்களின் கதைகளை நாம் படித்திருக்கிறோம்! ஆனால், ஒரு தந்தையின் கல்மனத்தைத் தன் கண்ணீரால் கரைக்க மாட்டாளா ஒரு பெண். நிச்சயமாகச் செய்வாள். ஆம், பாக்கியத்தைச் சந்தித்தவுடன் இந்தச் சிக்கலைச் சொல்லி உடனே அவளின் தந்தைக்கு எழுதச் சொல்லவேண்டும்.

வேலன் மீண்டும் தொடர்ந்து பேசினான். அவன் கடைசியாகத் தன் விழைவை ஒரு கடிதம் மூலம் தெரிவித்தானாம். அத்தோடு அமரன் எழுதிய 'மனப்போர்' என்ற அழகிய கற்பனைச் சித்திரத்தையும் அனுப்பிவிட்டானாம். விடையில்லையாம்! அவள் ஏன் விடை எழுதவில்லை? அவனை விரும்பவில்லையா? அல்லது வேறு எவனையாவது காதலிக்கிறாளா? அல்லது யோசிக்கிறாளா? செத்த மௌனத்திற்குக் காரணம் சினமா, வெறுப்பா, வேறு காரணமா?

கண்களைக் கம்பியில்லாத தந்தியென்பார்கள். அந்தத் தந்தியிலே கூட அவன் பேசியதில்லை. இரண்டாண்டுகள் கூட வாய்மூடி ஊமையாகி, கண்மூடி குருடாகி, செவியடைத்து செவிடாகி...இப்பொழுது கைநீட்டி கடிதம் வரைந்தால் காதல் வந்துவிடுமா? காதல் காலத்திலே விதையிட்டு, பயிராக்கி, களைநீக்கி அறுக்கவேண்டிய நெற்கதிரல்லவா? காகிதத்திலே விளைந்துவிடுமா? காகிதத்

தூதிலே காதல் கிடைத்துவிடுமானல் இதுவரை எழுத்தாளர்கள் எழுதிக் குவித்த கதைகளெல்லாம் வெறும் எண்ணப் பிசகுகளா? அவை அத்தனையும் சொல்லோடு நின்றுவிடும் இனிக்கும் பிரமைகளா? அவைகளைப்போல நடப்பதில்லையா? நடக்காத, நடக்க முடியாத செயல்களைத்தான் எழுத்தாளர்கள் எழுதிக் குவித்தார்களா? கடிதத்திலே, அதிலும் திடீரென எழுதும் ஒரு கடிதத்திலே காதல் பிறந்துவிடும் என்று எண்ணுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்?

எதிரி, கோட்டையிலே புகுந்து அவர்களின் கண்களிலே மண்ணைத் தூவிவிட்டுத் தன் இன்பப் புருவை எடுத்துக்கொண்டு பறந்துவிட்டானமே குதிரையில், பிரிதிவிராஜ் என்ற மன்னன். அவன் அப்பொழுது அதிகப் பிரசங்கியா? கடிதத்திலே காரியம் சாதிக்கத் தெரியாதவனு? அல்ல அல்ல, அப்படியல்ல வேலனின் வேதனை மிக்க காதல் முற்றுகை. அவன் சிறந்த அறிவாளி, சிந்தனைக்காரன். அவன் மனத்திலே காதல் விதை தூவ முனைந்த பெண் உழவர்கள் பலர் நிலத்திலே இறங்கவும் முடியாமல் ஓடிவிட்டனர்! ஆனல், வில்லி ஒருத்தியால் தான் அது முடிந்தது. விதையிட்ட அவளை விளைவை அறுக்க அழைக்கவேண்டும். அது முறை, அறநெறி அதற்காக அறிஞன் கையிலே உள்ள புரு, கிளி, அன்னம், தோழி, பாங்கன் எல்லாம் அவனது எழுதுகோல். எழுத்து, கற்பனை...! ஆகவே அதைத் தூதாக்கினன். அந்தத் தூது வெற்றிபெறும் என்ற நம்பிக்கையும் இருந்தது. அவனுக்கு ஏன்? அவன் விரும்பியது அறிவை. அறிவு முறையால் கவர முயற்சி செய்தான். இதில் தவறென்ன?

சேரன் சிந்தித்தான். வேலன் இடையிடையே இது போன்ற கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வந்தான் வழி நெடுகிலும்! வண்டியும் மதுரை வந்துவிட்டது. அவர்கள்

மிகவும் ஆழ்ந்து பேச்சில் முழுகியிருந்ததால், காலம் போனது அறியாமல் இவ்வளவு விரைவிலே வந்து விட்டதே என்று ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், பக்கத்துப் பலகையிலிருந்து இறங்கியவர் பெருமூச்சோடு கட்டைவண்டி, ஒரு மாதிரியாக வந்து சேர்ந்தது என்று குறைபட்டுக்கொண்டே இறங்கினார். ஒரே நிகழ்ச்சி, இரு வேறு கருத்துரைகள். இதுதான் உலகம்! இதை ஏன் பலர் புரிந்துகொள்வதே இல்லை!

சேரன் இறங்கியவுடன் நேராக அந்த வீட்டிற்குப் போக விரும்பவில்லை. முதலில் ஒரு உணவு விடுதியில் அறை வாடகைக்கு வாங்கிக் குளித்த பிறகே போக வேண்டும் என்று திட்டமிட்டான். வேலவனும் அதுவே சரியென்று 'ஆமாம்' பூசாரியானன். ஆகவே அவர்கள் வ. உ. சி. உணவு விடுதியில் தங்கினர். பெட்டி, படுக்கை முதலியவைகளை அறையில் போட்டுவிட்டுக் குளித்து முடித்தனர். வேலன் நல்ல முறையில் சேரனை அலங்காரம் செய்தான்.

"நண்பரே, என்னுடன் இப்பொழுதே வருகிறீரா?"

"இல்லை—நான் எப்படி வருவது? அவள்தான் விடையே எழுதவில்லையே"

"..................."

வேலன் சொல்லிய விடையைக் கேட்ட சேரன் சிந்தித்தான். அவன் மனத்திலே ஒரு எண்ணம் மின்னவிட்டது. அந்த மின்னலின் பளபளப்பு அவனது முகக் கண்ணாடியில் நன்ருகத் தெரிந்தது!

"அப்படியானல் இங்கேயே இருங்கள். இன்று மாலை நீர் பார்க்க விழையும் டாக்டர்—வில்லியம்மை உங்களைச் சந்திப்பார்!"

அவன் மகிழ்ச்சியை உடனே எடுத்துப் பற்றவைத்த 'சிகரெட்'டின் புகை வழியாகக் காட்டத் தொடங்கி விட்டான்! சேரன் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான்.

சேரன் போய்ச் சில மணித்துளிகளுக்கெல்லாம் இனிமையாகப் பாடும் ஒரு பெண்ணின் குரல் கேட்டது. அவள் குரலின் இனிமை வேலனை வெளியில் இழுத்தது! அவன் வெளியிலே வந்தான். ஆ—அவள் ஏன் பிச்சை யெடுக்க வேண்டுமா? அவள் கரத்திலே ஒரு சின்னஞ் சிறு குழந்தை! அவளோ மாசு படிந்த மாணிக்கம். அவ ளிடம் பலர் அழகுப்பிச்சை கேட்கவேண்டும். ஆனால், தன் வயிற்றைக் கழுவத் தெருத் தெருவாகப் பிச்சை எடுக் கிறாள். பரிதாபம்...அவளுக்கு வாழ்க்கையை நடத்த வேறு வழியே இல்லையா? 'ஏற்பது இகழ்ச்சி; என்பது நம் இனச் சித்தாந்தம் என்பது அவளுக்குத் தெரியாத பொன் மொழியா? கை நீட்டி யேற்பது எப்பொழுதும் இழிவான செயல் என்று அவள் மனம் அவளுக்குச் சொல்லவில்லையா? அவள் அறிந்திருப்பாள்...அதனால் அவள் உரக்கக் கூவி பிச்சை கேட்கவும் வெட்கப்படுகிறாள். வெட்கத்தைப் பார்த்தால் பசியப்பர் 'சும்மா' விடுகிறாரா? ஆதரவற்ற ஒரு பெண் இந்த உலகில் தனியாக என்ன செய்யமுடியும்? தேவை 'தேவன்' பசி என்ற நோயைப் பெருக்கிவிடுகிறான்! அதற்கு வேண்டிய மருந்து வேண்டு மானால் பாவ காரியங்களிலேதான் அவள் ஈடுபடவேண்டும்! திருடலாம்...மனத்தில் தைரியமும், உதைவாங்க உடலில் உறுதியும் இல்லை! கொலை செய்து கொள்ளையடிக்க அவ ளிடம் கொடூரமோ, அதற்கேற்ற உடற்கட்டோ, உள்ளத் திண்மையோ, பயப்படாத் தன்மையோ கிடையாது... குழைவும், நெளிவுங் கொண்டே செய்யப்பட்ட பெண்' பொய் சொல்லலாம். ஆணாக இருந்தால் அதனால் வாழ் வடைய வசதியுண்டு. ஆம், பெண்ணுக்கு ஒரே ஒரு வழி, 'சாலிகள் காட்டிய பெருவழி' அதுதான் பாதகன்

களிலே மகா பாதகம். பாவங்களின் அரசன், கொடுமைகளின் தாய், சமூக சல்லித்தனங்களின் குழந்தை... விபசாரம்...! அதை அவள் செய்ய விரும்பவில்லை. ஆகவே பிச்சை எடுக்கிறாள்!

மதனராசா, காமாந்தகாரா மாதரென்றால் மதவெறியோடா—என்ற சினிமாப் பாட்டைப் பாடிக்கொண்டே வந்தாள். பிறகு அவன் பாடிய பாடல்கள் எல்லாம் 'கத்தரிக்கோல்' என்று பெயர் போட்டுக்கொண்டு தொகுப்புகள் என்று வெளியிடுவார்களே அது போன்ற சினிமாபாட்டுத் தொகுப்பு! அது அவள் அளிக்கும் பரிசு, தனக்குப் பிச்சையளிக்கும் பிரமுகர்களுக்கு! அவள் வேலன் நின்ற இடத்திற்கே வந்து பாடினாள். உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ... என்று தொடங்கி, மெய்க் காதல் ஒன்றிருந்தால் எது வந்தால் என்னே என்னே என்பதாக மாறி, சாமி உமையிடைய என்ன தவம் செய்தேன் என்று திரிந்து, இந்த இன்பமே சொந்தமதானால் வானுலகம் வேண்டேன்... என்று ஓடி, அந்தோ பிரிந்தாரே, என் ஆசைக் காதலர்... என்ற அடியாகி, எப்போ வருவார் என் கலி தீர்க்க—என்று இசைத்து, பெண்ணாய் ஏன் பிறந்தேன் என்று ஒருவாறு முடித்தாள். வேலனுக்குச் சங்கடமாக இருந்தது. இங்கு கதாநாயகன், கதாநாயகி யாரென்று அவனுக்குப் புரியவில்லை! அவன் அவளைப் பார்த்து மிகவும் பரிதாபப்பட்டு தன் பையிலிருந்த ஒரு ரூபாயைக் கொடுத்தான். அதை அவள் கண்டதும் மிரண்டுவிட்டாள். அதை வாங்கவே மறுத்துவிட்டாள். வேலனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

"ஐயா எனக்குக் காலணா, அரையணா கொடுக்கிற கருணையாளர்கள் போதும். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்கள் கொடுத்துப் பிறகு வருகிறாயா என்றழைக்கும் 'அதிகக்' கருணை காட்டுபவர்கள் வேண்டாம்" என்றாள்.

"பெண்ணே, வேதனை மிகுதியினால் பேசுகிறாய்... நான் அந்தக் காலிகள் கூட்டத்திலே நிற்கவே கூசுபவன். பணத்தைக் கொடுத்து உன்னைப் பலியிட அழைக்க மாட்டேன். வாங்கிக்கொள். பின் உன் விருப்பம்போல் போ" என்றான்.

அவள் அழுதாள். அவன் தேற்றினான்.

"உன் பெயர் என்ன அம்மா?"

"சகுந்தலை" என்றாள். குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. அதை அமைதிப்படுத்திக் கொண்டே நகர்ந்து விட்டாள்.

5

லில்லி தன் தோழி பாக்கியத்தைக் கண்டவுடனேயே மகிழ்ச்சிச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு பறக்க ஆரம்பித்து விட்டாள்.

"பாக்கியம், நானும் ஒரு மாத ஒய்வு பெற்று விட்டேன். முப்பது நாளும் என்னுடன் இருக்க வேண்டும்"

"அறுபது நாளானாலும் அசையமாட்டேன். நீபாகப் பிடித்துத் தள்ளினால்தான் போவேன்"

"அது சரியடி அம்மா...என்னை ஏமாற்றவே திட்ட மிட்டு வந்தாயா? 'அவர்' எங்கேடி? எனக்குக் காட்டக் கூடாதா?"

"லில்லி—நிச்சயமாக வருவார்."

இப்படிப் பேசிக்கொண்டார்கள். அன்று முழுவதும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தாள் என்று சொல்லி

நிறுத்துவதே போதும். தங்கம்மா தன் சொந்த வீடு போலவே வீட்டின் உட்பகுதிக்குச் சென்று வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள்!

அன்று மாலை டேவிட் தனது கருப்புக் கோட்டு வகையராவைக் களைத்துவிட்டு வந்து உட்கார்ந்தார். லில்லியும், பாக்கியமும் எதிர்ப்புறத்தில் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்தனர். பாக்கியத்தைத். தன் தந்தைக்கும் அறிமுகப் படுத்தினாள் லில்லி. அவரும் அன்பு வார்த்தைகளால் அவளை வரவேற்றார். அவர் வரவால் தன் மகளின் மகிழ்ச்சி எல்லையைக் கடந்து விட்டது என்று குறிப்பிட்டார். தன் மகளின் மகிழ்ச்சியொன்றே தன் வாழ்க்கையின் இலட்சியம் என்று எடுத்துக் காட்டினார். பிறகு பாக்கியமும், லில்லியும் அவருடைய அனுமதியின் பேரில் வெளியில் கிளம்பி விட்டனர்.

டேவிட் ஏதோ ஒரு வழக்கு சம்பந்தமான கட்டுகளைப் புரட்டிப் கொண்டே இருந்தார். அப்பொழுது யாரோ ஒருவன் தன் மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு வணக்கம் தெறிவித்தபடியே உள்ளே நுழைந்தான்.

"வாப்பா வடிவேலு...உன் வழக்கு சம்பந்மாகத் தான் பார்க்கிறேன்...இப்படிப் பலகையிலே உட்கார்!"

அவன் உட்கார்ந்தான்.

"ஐயா, எப்படியும் ஜீவனாம்சம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடணுங்க. வடிவாம்பாள் என் பெண்சாதி தான்...அவள் நடத்தையிலே சந்தேகமுங்க...அதுக்கு ருசு வேணுமின்னா இரண்டு வருசத்துக்கு முன் வரை அவள் ஆசையா வளர்த்த பெண் சகுந்தலை தானுங்க...நான் சிங்கப்பூரிலிருந்த போது அவள் எப்படியோ பெற்று எங்கேயோ வளர்க்கச் செய்து இப்படிச் சேர்த்துக் கிட்டாங்க...இப்படி வழக்கு போகணுங்க...!"

அடுப்பங்கரையிலே சமைத்துக்கொண்டிருந்த அந்த வீட்டு மேரியம்மாளுக்குத் துணை செய்து கொண்டிருந்த தங்கம்மாவின் காதுகளில் இவர்களின் உரையாடல் தெளிவாக விழுந்தது! அவளுக்கு இரண்டு குரல் களும் பழகியவை போலவே பட்டன. ஆகவே அவள் மனந்துடித்தது. அவர்கள் யார் என்று பார்க்கவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு வெளியில் வந்தாள்... அவ்வளவுதான், அவள் திகைப்பு பிம்பமானுள்! அவளால் அவள் கண்களை நம்பவே முடியவில்லை. அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்......இமைகள் படபடவென அடித்துக்கொண்டன. விழிகள் பெரிதாக வளர்ந்து விட்டன! ஆம், அவளால் நிற்கவும் முடியவில்லை. அந்தச் சந்திப்பை அவள் விரும்பவும் இல்லை; எதிர்பார்க்க வும் இல்லை. அவளின் துன்ப வாழ்விலே கோர நாட்டியம் போட்ட யானைகள்...இன்ப வேதனையில் பங்கு கொண்ட இரண்டு பசித்த புலிகள்...அங்கே உட்கார்ந்திருப்பதை அவள் ஏன் பார்க்க வேண்டும்? இரண்டு பாவிகள் அங்கே கூடிப் பேசுகிறார்கள்!

பாக்கியம் மதுரைக்கு வருகிறாயா...என்று அழைத்த போதே தங்கம்மா அழுதுவிட்டாள். மதுரை என்ற பெயரை மறக்க முடியுமா? மறக்கக் கூடிய, மறக்க வேண்டிய பெயரா அது...ஒரு வீரனின் பெயர், ஒரு தன்மானத் தமிழனின் பெயர்; அவளின் ஆசைக் காதலனின் பெயர் மதுரை! ஆம், மதுரையென்றவுடன் மதுக்குடம் பொங்குவது போல அவள் உள்ளக்குடம் பொங்கி வழிந்தது; பூரித்துப் பெருகிற்று!

மதுரை இப்பொழுது எங்கே? இறந்தானா...இருக் கிறானா? அவளை வெறுத்தோட்டி விட்டானா...இவள் தான் அவனை விட்டுப் பிரிந்துவிட்டாளா? சின்னஞ் சிறு வயதிலிருந்து காதலால் கட்டுண்டு பெற்றோர்கள் அனுமதி யும் பெற்று, ஊராரின் முன்னிலையில் அரைப்பவுன்

தங்கத்தாலி கோத்த மஞ்சள் கயிற்றினல் உரிமையும் ஆக்கிக்கொண்டான். மதுரை—தங்கம்மா என்ருல் பிரிக்க முடியாத ஜோடிப் புருக்கள் என்று அவர்கள் கிராமத்து மக்கள் அர்த்தம் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

வயிற்றுப் பிழைப்புக்காக வந்துசேர்ந்தார்கள் மதுரைக்கு...மதுரை இதோ, கிழவடிவிலே உட்கார்ந்திருக்கும் மாபாவி டேவிட் என்ற 'வக்கீலிடம்'தான் வேலைக்கமர்ந்தான். வீட்டுவேலைகள் அத்தனையும் செய்து முடிப்பதுதான் அவனுக்குள்ள வேலை...மாடுபோல உழைத்து, கொடுத்த கொஞ்சத் தொகையினலேயே மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்! ஏழை மகிழமுடியும், கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைகிற பொன்குணமிருப்பதால்...! ஏழ்மையைக் கிழித்தெரியவேண்டும். உண்மை. ஆனல், அதிலேயும் ஒரு புனித திருப்தி பூரணப்பொலிவுடன் இருக்கமுடியும் என்பதை மறுக்க முடியாது. தமிழ்நாட்டுப் புலவர்கள் எல்லாம் ஏன் வறுமையிலே வாடினர்கள் என்று கேட்டார்களாம் சிலர். அதனல் அவர்கள் பெருமையடைந்தார்கள் என்ருராம் ஒரு புலவர்!

சிலநாட்களில் மதுரை மாலை வேளைகளில் தன் அன்புப் பிழம்பான தங்கம்மாவை 'சிவிச் சிங்காரித்துக்'கொண்டு கடைவீதிக்கு அழைத்துச்செல்வான். அவளுக்கு மருக்கொழுந்து மல்லிகைப்பூ என்ருல் உயிர். அவைகளை வாங்கிக்கொடுத்து அவள் மகிழ்வதைப்பார்த்து அவன் மகிழ்வான்! அப்படிப்போகும் பொழுதுதான் அந்தப் பயங்கர நிகழ்ச்சி தனது இரும்புக்காலை முதலடியாகப் பெயர்த்து வைத்தது. அவர்கள் இருவரையும் டேவிட் பார்த்தார்...பார்த்தார்...! அவர்கள் இருவரும், விகாரம் அவர் கண்களில் தலை விரித்தாடுகிறது என்று புரிந்துகொள்கிற அளவு பார்த்தார்! பிறகு பேசினர்...பேச்சா அது, நச்சு

நினைப்பு எனும் சாக்கடையில் நெளியும் புழுக்களை உதிர்த்தார்!

"மதுரை...இங்கே வா" என்று கூறிக்கொண்டே நடந்தார். தங்கம்மா நின்ற இடத்திலே இருந்துகொண்டு அவனைப் போகும்படி சாடை காட்டினுள். அவன் அவரைப் பின்தொடர்ந்தான்.

"அடே...இது யாருடா, புதுக்குட்டி"

"என்னங்க...அப்படிக் கேவலமாகக் பேசுகிறீங்க... அவள் என் பெண்சாதிங்க..."

"எத்தனை நாளாக..."

"ஐயா, நீங்க தப்பா நினைக்கிறீங்க......நான் தாலி கட்டிய பெண்டாட்டிங்க"

"அது சரிடா..."

அவர் பேசாமல் இருந்தார்... அவர் முகம் உண்மையை வெளிப்படுத்திற்று. அவர் கண்கள் மனத்திலே பிடித்துக்கொண்டிருந்த படத்தைப் போட்டுச் 'சென்சார் போர்டாருக்கு' விளக்கிக் கொண்டிருந்தது. மதுரை சிறினுன்.

"நாளைக்கு மன்மத ஓட்டல் மாடியிலுள்ள எட்டாம் எண் அறைக்கு அவளை அழைத்து வா...வர விருப்பமில்லையானல் இன்ளோடு நின்றுகொள்..."

"அடபாவி...கொண்ட மனைவியைக் கேட்க உமக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்...இதைவிட பட்டினி கிடந்து சாவேன். உம் படிப்பில் மண்விழ...உம் பதவியில் இடி விழ...நீ மனிதனு, மிருகமா? போய்பா, பெரிய மனிசரே."

இப்படிக் கத்திவிட்டான். இதை இவ்வளவு சீக்கிரத்தில் எதிர்பார்க்காத டேவிட் வேகமாக நடந்து விட்டார்.

மதுரை தனது எசமானன் நடந்துகொண்ட முறையை எண்ணிஎண்ணி ஆத்திரப்பட்டான். அதை அப்படியே தங்கம்மாவிடம் வந்துசொன்னான். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வேலைக்குப் போகா விட்டால் அவர்கள் எப்படி வாழமுடியும்? புதிய இடத்தில் போய்ச் சேர்ந்தாலும் அந்தப் 'பெரிய மனிதர்' அந்த இடத்திலும் கெடுதல் செய்யலாமே! அப்பொழுது பட்டினி கிடைக்கமுடியுமா? பசிக்கவேண்டிய அவசியத்தை ஏன் இந்த ஆண்டவன் ஏற்படுத்தினான்? அந்தப் பசிதான் உலகத்தேவைகளின் ஊற்றுக்கண்; உலக நடமாட்டத்திற்கு அதுதான் அச்சாணி! அந்தப் பசியை எதிர்த்து எப்படிப் போராடுவது? இப்படி எண்ணினான். அதற்காக மானத்தை விற்பதா? கற்பை அடமானம் வைப்பதா? அதுவும் முடியாது, இதுவுங்கூடாது! என்ன செய்வது?

மறுநாள் மதுரை எங்கெங்கோ வேலைக்கு அலைந்தான். யாரும் வேலையில் வைத்துக்கொள்வதாக இல்லை. இப்படிப் பலநாட்கள்...இரயிலடியில் மூட்டைகளைத் தூக்கிக் கூலி பெற்றான்; மண் சுமந்தான் கொத்தர்களுடன்; விறகு ஒடித்தான் விறகுவெட்டிகளுடன்! என்னென்ன வேலைகள் கிடைத்ததோ அவைகளையெல்லாம் செய்தான்...தங்கம் மாவின் முகத்திலே வாட்டம் தெரியக்கூடாது என்ற குறிக்கோளோடு! அவன் நினைக்கிறபடியெல்லாம் செய்ய முடிகிறதா? அவள்போட்டிருந்த தோட்டையும், கட்டைக் காப்பையும் விற்கவும் நிலைமை அவனைத் தள்ளிக்கொண்டு போய்விட்டது. வறுமை ஒரு ஈசல்புற்று...அதிலிருந்து துன்ப ஈசல்கள் வந்துகொண்டே இருக்கும். இல்லாமை

யென்பது ஒரு தொழுநோய். நாளாக ஆக அதன் கொடுமை வளரும்!

மதுரை சிந்தித்தான்...இனி அவன் வாழ வேண்டு மானுல் திருடத்தான் வேண்டும்; இல்லாவிட்டால் பிச்சை யெடுக்க வேண்டும். தாய் பசிக்க, மனேவி கண்ணீர் வடிக்க, குழந்தை அழ...பார்த்தாலும் இழிவான செயலைச் செய்யாதே! வள்ளுவர் சொல்லிவிட்டார். பிச்சை யெடுப்பதை அவன் இழிவு என்று கருதினுன். திருடுவதை அவன் முதலில் பாவ காரியம், ஆகாத தொழில் என்றே எண்ணினுன். ஆனல், அதை வெகு நாள் வரை நீடிக்க விட முடியவில்லை. திருடுவது யாரிடம்? இல்லாதவன், இருக்கிவறனிடம்...அவனுகப் பார்த்துக் கொடுக்க வேண்டும். கொடுக்காததால், கேட்க நேர மில்லாததால், சந்தர்ப்பம் ஏற்படுத்த விரும்பாததால் அவனுகவே எடுத்துக் கொள்கிருன். இது திருட்டா?

திருட்டு கூடாது என்று கூறுகிற சமூகம்...அது பாவம், களவு, கொடிது...என்றெல்லாம் புலம்பும் சமூகம் இதற்குப் பதில் சொல்லட்டும். மதுரையை ஏன் வாட விட வேண்டும்? அவன் உடலில் வலுவில்லையா? உழைக்க முடியாது என்று சொன்னதுண்டா? மேனி வாடாமல் கூலி வேண்டும் என்று கேட்டதுண்டா?...இல்லையே... அவன் தன் உழைப்பை வலுவில் கூவிக் கூவி ஏலம் விட்டும் எடுப்பாரில்லாமல் அதை வேறு வகையில் திருப்பவேண்டிய அவசியத்தில் விட்டதால்தான் திருடவும் துணிந்தான். அவனுக்குத் தெரியும் திருடுவது சமூகத்தின் பாவப் பட்டியலிலே ஒன்று என்று... எனினும் திருடுகிருன், 'போலிஸாரின்' நினைவிருந்தும், நீதி மன்றமிருப்பது அறிந்தும், சிறைக்கூடம் உண்டு என்பதை யுணர்ந்தும்! உலகத்தில் வியாபாரி, வக்கீல், நடிகன், பாடகன்...என்று ஏதேதோ பேர் சொல்லிக் கொண்டு திருடுகிருர்கள். அதற்கு அந்தப் பெயரில்லை.

ஆனால், செயல் மட்டும் மதுரை தீர்மானித்ததுதான். ஆம், அவன் பிச்சையேற்க விரும்பவில்லை. திருடவே முடிவு செய்தான்!

ஒரு நாள் மாதா கோவில் வழியாக ஒரு குழந்தை வந்துகொண்டிருந்தது. மதுரையும் அவன் மனைவியும் மூன்று நாட்கள் தொடர்ந்து 'ஏகாதசி விரதம்' 'துவாதசி' இன்னும் எத்தனை நாட்களுக்குப் பிறகோ...யார் கண்டார்கள்? மதுரை தன் தாடியும், பரட்டைத்தலையும் பயங்கரத் தோற்றத்தை அள்ளி வீச அந்த வழியாக வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அந்தக் குழந்தையைப் பார்த்தான். அவன் கழுத்தில் அழகான இரண்டு வட தங்கசெயின் மின்னியது. திருடு, திருடு என்று விரட்டியது அவன் சங்கடப்பட்ட மனம். அவன் கையிலே இரண்டணாதான் இருந்தது திரும்பினான். நான்கு 'சாக்லட்' மிட்டாய்களுடன் அந்தக் குழந்தை சென்ற திக்கிலேயே ஓடினான். அவன் நினைத்தபடியே குழந்தை ஏமாந்தது அது மட்டுமா? அது அவன் வாழ்வைக் கெடுத்தவனின் மகள். ஆகவே அவன் மனம் இரும்பாகிவிட்டது. மாதா கோவிலில் பின்புறத்தில் அழைத்துச் சென்றான்...அங்கேயுமா? 'துரதிர்ஷ்டம்'... வறுமைத் தூதுவர்கள்...கெட்டகால 'எமன்கள்'... துரத்தி வரவேண்டும்! அங்கே வேலை செய்துகொண்டிருந்த தோட்டக்காரர்கள் பிடித்துக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் கூட்டம் கூடிவிட்டது! ஆம், திருட நினைத்தபோதே திருடனாகப் பிடிபட்டான்.

குழந்தையை அவருடைய தந்தையாரே தேடிக் கொண்டு வந்து விட்டார். குழந்தையைக் கண்டதும் அவர் ஓடோடி வந்து அணைத்துக் கொண்டார்.

"லில்லி...உன்னை அந்தப் பாவி ஒன்றும் செய்ய வில்லையே!"

"சாக்லட் கொடுத்தானே......அப்பாகிட்டே அழைச்சுப் போறேன்னுனே. முன்னுலே நம் வீட்டிலே இருந்தானே...அவன் தான்..."

குழந்தை லில்லி சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போனுர் டேவிட்.

அவர் கள்ளனைப் பார்த்தார், மிரள, மிரள விழித்தார். ஆத்திரத் தீ கொழுந்து விட்டெறிந்தது அவர் கண்களில்!

ஆ......மதுரை"

அதற்குமேல் எதையும் பேசவில்லை.

மதுரையை டேவிட்டின் வீட்டுக் கூடத்தில் கட்டி விட்டார்கள். கூட்டமும் கலைந்துவிட்டது! டேவிட் மட்டும் எதிரில் உட்கார்ந்திருந்தார்! கொஞ்ச நேரத்தில் 'போலீசார்' வந்தனர். அவன் அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டான்!

மாலையில் இந்தச் செய்தி தங்கம்மாவுக்கு எட்டியது. அவள் ஓடோடியும் வந்து அவர் கால்களில் விழுந்து அழுதாள்! அழுது பயன்...? காமம் என்ற கருநாகத்தின் நஞ்சு ஏறியிருக்கும் அந்த மனிதருக்கு இரக்கம் வருமா? அவர் ஒரு நிபந்தனையின் பேரில் அவளது கணவனை விட்டுவிட ஏற்பாடு செய்வதாகச் சொன்னுர்...நிபந்தனை சொல்லித் தெரிய வேண்டிய அவசியத்திலில்லை! பழைய கோரிக்கை...மன்மத ஒட்டலில் படுக்கை விரிப்பு, அதில் தங்கம்மாவின் இணைப்பு சுகம்...அவள் சிந்தித்தாள்; சீறினுள். ஆனுல், அவன் அவளைப் பலி கொண்டுவிட்டான்.

வழக்கறிஞர்களின் நாக்கு சுழலும் தன்மையுள்ள தாமே...திருப்பிவிட்டு அவனை வெளியில் வரச்செய்து

விட்டார். மதுரை, மதுரை நகரின் தெருக்களிலே திரி கிறான் தன் மனைவி தங்கம்மாவை நாடி. அதே நேரத்தில் தங்கம்மா பசியெடுத்த புலியின் வாயிலே இருக்கும் மானாக மாறியிருக்கிறாள்...இது அவனுக்கு எப்படித் தெரியும்! மூன்று நாட்கள் அவளை வெளியிலே அனுப்பவே இல்லை. பிறகு வெளியில் விட்டார். ஆச்சரியம் அங்கு போகும் பொழுது ஒருத்தியாகப் போனாள், திரும்பும் பொழுது இருவராகத் திரும்பியிருக்கிறாள் என்ற உண்மை இரண்டு திங்களுக்குப் பின்னால்தான் தெரிந்தது!

மதுரை இரண்டு நாட்கள் தேடித் திண்டாடி ஒரு வாறு உண்மையை உணர்ந்து விட்டான்—அவ்வளவுதான்! அந்தக் காமுகன் டேவிட்டைத் தொலைத்து விடுவது என்ற முடிவுடன் தன் கத்தியைத் தீட்டினான். திருடன் கொலைக்காரனாகிறான். பாவி மகாபாவியாகிறான்! ஏன்...? பதில் தெரிந்துகொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். அன்று இரவு அவர் வீட்டில் நுழைந்து படுக்கைறையிலேயே குத்திக் கொன்றுவிடுவது என்று முடிவு செய்துவிட்டான்! இரவும் வந்தது. அவன்தான் அந்த வீட்டின் வேலை செய்தவனாயிற்றே! ஒவ்வொரு இடமும் அவனுக் நன்றாத் தெரியுமே. கள்ளத்தனமாக நுழைந்து படுக்கை அறையில் நுழைந்தான் ... ஆ ... ஓங்கிய கரம்... குத்தி விட்டான், குத்தி விட்டான் ... இரத்த வெள்ளம் ஆவித்துடிப்பு...உயிர்போகும் பிணத்தின் உதைப்பு, அவன் ஓடி விட்டான் இரத்தச் சிரிப்பைச் சிந்தும் கத்தியுடன்!

'போலீசா'ரிடம்தானே போய்த் தனது கொலையைச் சொல்லிக் கொண்டான்...ஆனால் அவன் நினைத்தது நடக்கவில்லை! கொலை யுண்ட டேவிட் அவன் எதிரில் நின்றார்...பின், கொலை செய்யப்பட்டது யார்? அவரின் மனைவி எலிசா அம்மை ஐயோ...ஒரு புனிதவதியை

அன்புள்ளம் கொண்ட ஆதிரையை கருணை வடிவான கண்ணகியைக் கொன்றுவிட்டான்! மதுரை பாவிதான்... பாவிதான்...ஆனால் பாதகன் தப்பிவிட்டானே டேவிட் தப்பிவிட்டதால் புண்ணியசாலியா? அந்த மனிதன் எப்படித் தப்பினான்? மனிதன் செய்யும் குற்றத்திற்கு மனிதனே தண்டனை தர முடியாது. அப்படியானால் சிறைக் கூடங்கள் ஏன்? சாட்சிக் கூண்டுகள் ஏன்? காமுகன் தப்பிவிட்டான்......வறுமைச் சூறாவளியால் அடிபட்ட ஒரு மாசிலாமணி கொலைகாரனாகிவிட்டான். பாவம், புண்ணியம் பேசுவோரே ஏன் இந்த நிலை? எப்படி ஏற்பட்டது இந்தக் கொலை? விதியா...சதியா? தானே நடந்ததா? ஆண்டவனுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லையா?

தங்கம்மா ஓடிவந்தாள். கூண்டிலே நிற்கும் தன் கணவனைக் கண்டு அழுதாள்; புலம்பினாள். ஆனால் மதுரை கலங்கவில்லை. கொலை செய்தேன். உண்மை... ஆனால் கொல்லப்படவேண்டியவன் இன்னும் உயிருடன் இருக்கிறானே என்பதுதான் என் கவலை...எனக்கு எந்தத் தண்டனை தந்தாலும் நான் ஏற்கத் தயார். எனக்கு நீதியில் நம்பிக்கையில்லை. நீதி சாகாமலிருந்தால் இதோ எதிரில் நிற்கும் இந்த டேவிட் என் இடத்திலிருக்க வேண்டும். குற்றவாளி, என்னைக் கேள்வி கேட்கிறான்... இது நீதியா?...இப்படிப் பேசினான். ஒழுங்கு ஒழுங்கு என்று கூறி அவன் பேச்சை நிறுத்தினர். அவன் தூக்கி விடப்பட்டான் முடிவில்!

காலிலே ஒரு இடத்தில் இடித்துக்கொண்டால் மீண்டும் மீண்டும் அதே இடத்தில் அடிபடும்...இது இயற்கை! அதுபோலவே தங்கம்மா ஒரு பெண்குழந்தையைப் பெற்ற பிறகும் வறிதிருக்க வழி கிடைக்கவில்லை. அவன் குடியிருந்த வீட்டின் பக்கத்து இல்லத்தில் ஒரு பெண்மணி தனியாக இருந்தாள். அவள் பெயர் வடிவாம்பாள். அவளது கணவன் சிங்கப்பூரில் லுங்கி வியா

பாரியாம்! மாதா மாதம் பணமனுப்புவான். அந்த அம்மாவுக்குத் தங்கம்மாவின்மீது மிகவும் பிரியம்...தங்கச்சி என்று அன்பாக அழைப்பாள். தங்கம்மா பெற்றெடுத்த பெண் குழந்தைக்குச் சகுந்தலையென்று பெயரிட்டதும் அவளேதான்! அந்த ஏழைக் குடும்பத்தை அவளே காப்பாற்றியும் வந்தாள்.

ஓராண்டு கழித்து வடிவாம்பாளின் கணவன் வடிவேலு திரும்பி வந்தான். வந்து சில நாட்களிலேயே தங்கம்மாவின்மீது மோகப் பார்வையைச் செலுத்த ஆரம்பித்துவிட்டான். தங்கம்மா முதலில் பயந்தாள். பிறகு துரோகம் என்று எண்ணினாள். ஆனால் வடிவேலு விடுவதாக இல்லை. சமயம் நேரும்பொழுதெல்லாம் குறும்புகளை நிறுத்தவே இல்லை! அவளும் பெண்தானே— பெண்மனம் ஒரு மணல் குவியல். அள்ளுவது ஒரு கை கண்ணாலும் சரிவது அதிகம்! அரைக்கண நேரச் சந்திப்பில் ஆறுமாத உறவைப் பெருக்கிவிட முடியும்! இந்தச் சூட்சமத்தை நன்றாக அறிந்தவன் போலும் அவன்! ஆகவே வடிவாம்பாள் பார்க்காத நேரத்தில் தங்கம்மா கிடைத்துவிட்டால் அவளைப் பம்பரம்போலச் சுற்ற விட்டான். அவள் முதலில் முழு மூச்சாக எதிர்த்தாள். பிறகு அறிவுரை சொன்னாள். அன்பாக அதட்டினாள். கடைசியில் அவள்தான் சரணாகதியடைய நேரிட்டது! ஆம், தங்கம்மா அவனுக்குத் திருட்டு மனைவியானாள்... ஆக்கப்பட்டாள்!

வடிவாம்பாளைப் பார்க்கும்பொழுதெல்லாம் தங்கம்மாவுக்கு அழுகைதான் வரும். அவள் வெள்ளையுள்ளங் கொண்ட தெய்வம்...வடிவேலுவின் சூதையும், தங்கம்மாவின் துரோக நடத்தையையும் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை. சந்தேகம்கூடப்படவில்லை. அவளே தங்கம்மாவை விட்டு வடிவேலுவுக்குப் பணிவிடைகள் செய்யச் சொல்வாள்...எனக்கு உடம்பு என்னவோ போல

இருக்கு...மாமாவுக்கு இன்று நீயே சோறு போடு... என்று அவளாகவே அனுப்புவாள். இப்படித் தங்கம்மா வால் வனச்சாட்சியைச் சித்திரவதை செய்துகொண்டு வாழவே முடியவில்லை!

இந்த உலகத்தில் அவள் ஏன் வாழ்கிருள்?—ஏதாவது குறிக்கோள் உண்டா?—அவள் நினைத்துப் பார்த்தாள். அவள் தன் மகள் சகுந்தலாவுக்காகத்தான் வாழ வேண்டும்...அதற்கு எவ்வளவு பாவ மூட்டைகளைக் கட்டிச்சேர்ப்பது? விபசார வாழ்வில் காலம் கழிப்பது? தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்! ஆம்; வேறு வழியில்லை. இந்தத் திருட்டு வாழ்க்கையில் அவளுக்குத் துளியும் விருப்பமில்லை. இந்த எண்ணத்தை வடிவேலுவின் செய்கைகள் துரிதப்படுத்தின! ஏன்? அவன் எப்பொழுதும் வடிவாம்பாளைத் துன்புறுத்தத் தொடங்கி விட்டான். அந்த அன்புச் சிலையை அவனது சூதுக்கார புத்தி எப்பொழுதும் துன்புறுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தது. அவளை அவசியமில்லாமல் அடிப்பதும், திட்டுவதும்...பல கொடுமைகள் புரியத் தலைப்பட்டான். அவளால் இந்த அநியாயத்தைச் சகிக்க முடியவில்லை. தங்கம்மா அவனைக் கண்டித்தாள். ஆனல் அவள் இருப்பது இடையூறு, ஒழித்துக் கட்டிவிடுகிறேன் என்று துணிந்து கூறினுன். ஐயோ.........இன்னமும் உயிருடன் இருக்கலாமா? தனக்கு ஆதரவு காட்டிய பெண்ணைத் தனக்காக ஒழிக்கப்போகிருனும்—என்ன கொடுமை!

அப்பொழுதுதான் அந்த ஊரை விட்டே ஓடிவிடுவது என்று திட்டமிட்டாள். அப்படியே ஒரு நாள் இரவு மறைந்துவிட்டாள்! எங்கெங்கோ அலைந்தாள். அலைந்து கொண்டிருந்தபொழுதெல்லாம் தன் மகள் சகுந்தலையைப் பற்றியும், தனது உடன் பிறவாத தமக்கை வடிவாம்பாளைப் பற்றியுமே நினைத்து நினைத்து அழுவாள்......அதற்குப்

பிறகுதான் பாக்கியத்திடம் அவள் வந்து சேர்ந்தது. இந்தத் துயரக் கதையைத்தான் அவள் யாரிடமும் சொல்வதில்லை என்ற முடிவிலிருந்தாள்.

அந்தப் பாவிகள் இப்பொழுது கூடித் திட்டமிடுகிறார்கள்—வடிவாம்பாள் இவனை விட்டு விலகிவிட்டாள் போலும். மேலும் வழக்கும் போட்டுவிட்டாள். அவளுக்குப் பணங்கொடுக்கப் பயந்து 'வக்கீலுக்கு' மட்டும் பணங் கொடுக்க வந்துவிட்டான் புத்திசாலி.

இவனும் பாவி, அவனும் பாவி... பாவிக்குப் பாவி பக்கத்துணை! பாவம், பாவத்தை நட்புக்கொள்கிறது... டேவிட் பணமிருப்பதாலேயே புண்ணியசாலியாகிவிட முடியுமா? வடிவேலு சொத்துக்காரனாகவே. அவன் பாவங்களுக்கெல்லாம் பாவ மன்னிப்பு கிடைத்துவிட்டதா? மதுரை பாவியானதினால் வருந்தினான், தூக்கில் மாட்டப் பட்டான் என்றால் இந்தப் பாவிகள் ஏன் வருந்த வில்லை? இதற்கு யார் நீதி வழங்குவது? 'மனிதன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்'...... என்பார்களே! இத்தனையாண்டுகள் கழித்தும் பாவத்திற் கேற்ற தண்டனை பெற்றதாகத் தெரியவில்லையே! ஐயோ... பாவம் என்ற பாம்பு, பணம் என்ற மகுடிச் சத்தத்தில் அடங்கியொடுங்கி விடுமா? அடங்கினாலும் அந்த நஞ்சு மடியாதே... அதன் வேகத்தின் முடிவு என்ன...! எப்படித் தெரிந்துகொள்வது?

கடைசியில் இந்த இரண்டு பாவிகளின் கூட்டுப் பண்ணையில் வந்தா அவள் சிக்கிக்கொண்டாள்? இனி அங்கு இருக்கலாமா? ஓடவேண்டியதுதான்! இனி இந்தப் பாவிகளின் நிழல் படும் இடத்திலே கூட நிற்கக் கூடாது. பாக்கியத்திடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகலாமா? எங்கே போவதாகச் சொல்வது........

எப்பொழுது திரும்புவது என்று கூறுவது? முடியாது. எந்தக் காரணம் சொன்னாலும் அவள் விடமாட்டாள்! ஆகவே, இப்பொழுதே ஓடிவிடவேண்டும். ஆம், வெளியேறிவிடுவது கடினமல்ல...பிறகு என்ன செய்வது? தற்கொலைதானா? சாகவேண்டியதுதானா? சாவின் அணைப்பிலேதான் சாந்தியா? அவள் செய்த பாவங்களுக்கு இயற்கை விதிக்கும் ஒரே தண்டனை தற்கொலைதானா? தங்கம்மா பாவியா? அதற்குத் தண்டனை இதுதானா? வேறு வழியே இல்லையோ!

சாவதற்கு முன் கடைசியாக ஒருமுறை வடிவாம்பாளைப் பார்த்தால் என்ன! அவளிடம் தன் துரோகத்தைச் சொல்லி அழுதால் என்ன! அவள் ஓடிப்போனதைப் பற்றி அவள் என்ன நினைக்கிறாள். சகுந்தலை இப்பொழுது எங்கு இருக்கிறாள். மணமாகியிருக்குமா? அல்லது அவளைப்போலவே ஆகிவிட்டாளோ! இதையெல்லாம் எப்படி அறிந்துகொள்வது? அந்த வீட்டிலேதான் இருக்கிறார்களா...அது அவளின் சொந்த வீடுதானே போய்ப் பார்க்கலாமா? இப்படி அவளின் மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

அவன் சொன்னானே இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை அவள் வளர்த்த பெண் சகுந்தலை யென்று...அப்படியானால் இப்பொழுது சகுந்தலை எங்கே... ஓடி விட்டாளா? தாயைப்போலப் பெண் என்று காட்டி விட்டாளா? இதை எப்படியும் அவள் தெரிந்துகொள்ள வேண்டும்!

தங்கம்மா சுற்று முற்றும் பார்த்தாள். மேரியம்மா சமையற்கட்டில் இருந்தாள். வாசலை அடைத்துக்கொண்டு அந்தப் பாவிகள் உட்கார்ந்திருந்தார்கள்! ஆகவே மெதுவாகத் தோட்டத்துப் பக்கம் சென்றாள். அதன்வழியாக

அடுத்த வீதிக்குப் போக வழியிருந்தது. ஆகவே அப்படியே வெளியேறிவிட்டாள்!

இருட்டிலே நடந்துகொண்டிருந்தாள். இரவு வரவர வளர்ந்துகொண்டிருந்தது. எங்கே போகிறது என்ற குறியே இல்லாமல் கிடைத்த பாதைகளிலெல்லாம் போய்க்கொண்டிருந்தாள். ஆரம்பத்தில் கூட்டங் கூட்டமாக மக்கள் வந்துகொண்டிருந்தார்கள் நடமாட்டமே குறைய ஆரம்பித்துவிட்டது! அவள் மனப்போர் மட்டும் முடிந்தபாடில்லை. எப்படியும் வடிவாம்பாளைப் பார்த்து அவள் கால்களில் விழுந்து அழுது அவளது கண்ணீரால் அவளுடைய கால்களைக் கழுவிவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டே நடந்தாள்.

அப்பொழுது எதிரில் இரண்டு பெண்கள் வந்துகொண்டிருந்தார்கள்; அவர்களின் குரலைக் கேட்டவுடனேயே தங்கம்மா ஒரு இருட்டுத் திண்ணையில் உட்கார்ந்துவிட்டாள்.

"மணி ஒன்பதாகிவிட்டது. அப்பா மிகவும் வருத்தப்படுவார்..."

"தங்கம்மாகூட கோபித்துக்கொள்வாள்."

"சரி, வேகமாக நட, அந்தக்குட்டி நன்றாகப் பாடுகிறாள் அல்லவா?"

"அவள் குரல் இனிமையாக இருக்கிறது"

"அவள் பெயரும் அப்படித்தான். பிச்சைக்காரிக்குப் பெயர் சகுந்தலை"

இப்படி வில்லியும், பாக்கியமும் பேசிக்கொண்டே சென்றார்கள். அவர்களை நிறுத்தி ஏதாவது சொல்ல வேண்டும்போலிருந்தது. அவள் எழுந்தாள்... ஆனால் நா பேசவே மறுத்துவிட்டது! பிச்சைக்காரியின் பெயர் சகுந்தலை. ஆம், அவள் மகள் பெயர்கூடச் சகுந்தலை தான். இந்தப் பிச்சைக்காரி எந்தத் தங்கம்மா பெற்று விட்டதோ! அவளுடைய சகுந்தலை எங்கு இருக்கிறாளோ? ஒருவேளை இதே சகுந்தலைதானா? அவள் மேலும் நடந்தாள். மனப்போர் இன்னும் மும்முரமாகிவிட்டது.

கடைசியாக அவள் முன்னிருந்த வீட்டிற்குச் சென்று விசாரித்தாள். அங்கு வடிவாம்பாள் இல்லை யென்றும், கணவனின் கொடுமை தாங்கமாட்டாமல் தன் தாய்வீடு போய்விட்டாள் என்றும் கேள்விப்பட்டாள். அவளுடன் இருந்த பெண் ஒருநாள் இரவில் ஓடிவிட்டா ளாம்... அவளால் இந்தச் செய்தி தாங்கக்கூடயதாக இல்லை. அவள் இதயம் வீங்கிவிட்டது. இனி வெடிக்க வேண்டியது தான் பாக்கி!

தங்கம்மா நடந்தாள்... இரவில், இருட்டில் கால் விட்டவழியே எங்கே போகிறாள்? அவள் சாவை நோக்கி, இறப்பை எதிர்கொண்டழைக்க அதற்கு இடம் எங்கு கிடைக்குமோ அதுதான் அவள் முடிவாக நிற்கப்போகும் இடம். மரக்கிளையில் தொங்குவாளா? அதற்குக் கயிறு கூட இல்லை. ஆற்றில், குளத்தில் விழலாமா? முடியும்... செய்யலாம்... ஆற்றை அடைவதற்குள் பொழுதே விடிந்துவிடும்போல் இருக்கிறதே! நஞ்சு கிடைத்தால் குடித்துவிடலாம். நஞ்சு வியாபாரி யார்? யார் கொடுப் பார்கள்?

அவளால் நடக்க முடியவில்லை. கால்கள் தடுமாறின. சாந்தி வேண்டி சாவு பூமிக்குப் பிரயாணம் கிளம்பிவிட் டாள். அமைதி கிடைக்குமா என்று தேடிக் கடைசியில்

எமனுலகை நோக்கி யாத்திரைப் புறப்பட்டுவிட்டாள்! ஆனாலும் தளர்ச்சி, அயர்வு, சோகம்...வந்து அவளை நிறுத்திற்று. எதிரில் ஒரு சாவடி தெரிந்தது. அங்கே உட்காரலாம் என்று போனாள். சிறைச்சாலைகளும் சாவடிகளும் தான் இன்று நாட்டில் ஏராளமாகத் தேவைப்படுகின்றன போலும்! வாழத்தெரியாதவர்கள் ஒன்று குற்றம் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் இழிவான பிச்சைத் தொழில் ஏற்கவேண்டும்! ஆகவே சிறை, மடம் தேவை, தேவை! அங்கு உட்காரக்கூட இடமில்லை. ஒரு சிறு திண்ணையோரம் போய் அமர்ந்தாள்.

அங்கு ஒரு கந்தல் துணியில் ஒரு குழந்தை கிடத்தப் பட்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு பெண் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். இருட்டில் அவள் முகம் நன்றாகத் தெரியவில்லை!

இத்தனை பேர்களும் பிச்சைக்காரர்கள் ஏன் இந்த இழிதொழில் இவர்களுக்கு! படைப்புத் தெய்வமே, இவர்களை இப்படித்தான் வாழவேண்டும் என்று அன்றே அவர்கள் மண்டையிலே எழுதிவிட்டாயாமே! உனக்கு வேறொன்றும் எழுத வரவில்லையா? எழுதத் தெரியாதா? சிறுபிள்ளை முருகனிடம் ஒருமுறை பாடங் கற்றுக் கொண்டாயாமே அந்தப் பாடம் உனக்குப் போதாது! இன்னும் ஒரு மனிதனிடம் பாடங் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் பெயர் கார்ல்மார்க்ஸ் அவனது பாடத்தைப் படித்த பிறகு இப்படி எழுதமாட்டாய் இந்த ஏழை எழுத்துக்களை மறந்துவிடுவாய்? அந்த உபதேசம் பெற எப்பொழுது புறப்படுகிறாய்? அந்த நாள் எந்நாளோ? அதுவே வாழ்வின் திருநாள்!

அந்தத் திண்ணையின் எதிரில் ஒரு பாழுங் கிணறு இருந்தது. அதைக் கண்டதும் தடதடவென எழுந்தோடினாள். அந்த அவசரத்தில் படுத்திருந்த பிச்சைக்

காரி விழித்துக்கொண்டாள். எழுந்தாள். ஒருத்தி கிணற்றில் விழுவதைக் கண்டதும் ஓடோடிப் பிடிக்க முயன்றாள். கொலை—தற்கொலை—என்று கூவிவிட்டாள். சாவடியில் இருந்தவர்கள் விழித்துக்கொண்டு வெளியில் வருவதற்குள் அந்த வழியே வந்த வாலிபன் கிணற்றில் குதித்துவிட்டான். அவனைக் கொண்டுவந்து சேர்ப்பதற்குள் அவன் மிகவும் துன்பப்பட்டான்.

அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. சாவடித் தலைவன் கையில் விளக்குடன் கிணற்றடிக்கு வந்துவிட்டான்.

அந்த அம்மாவைத் தன் மடியில் கிடத்திக்கொண்டு அழுதாள் அந்தப் பிச்சைக்காரி. எதிரில் மூச்சு வாங்க வாங்க நின்றுகொண்டிருந்தான் அந்த வாலிபன். விளக்கு இருட்டுத் திரையைக் கிழித்தது!

"அம்மா—நீதானா இப்படித் தற்கொலை செய்து கொள்ள முனைந்தாய்—இதோ உன் மகள் சகுந்தலை" என்று கதறினாள்.

"சகுந்தலை......"

அந்த வாலிபன் குனிந்து பார்த்தான். இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துத் திரும்பிய முகுந்தனுக்கு அது மூன்றாவதாக முடிந்தது!

6

வ. உ. சி. உணவு விடுதியில் அந்த அறைக்கு அன்று அவ்வளவு பெருமை வரும் என்று யாருமே எதிர் பார்த்திருக்கமாட்டார்கள். அங்கு ஒரே கூட்டம் என்றே சொல்ல வேண்டும்.

“வேலா—என் பாக்கியம் ஒரு பாவம் செய்யத் துணிந்து விட்டாள்” என்றான் சேரன்.

“பாவமா...” என்று விழித்தாள் பாக்கியம்.

“பெற்றோரின் அனுமதியின்றியே மணந்துகொள்ள முடிவு செய்வதே பாவமல்லவா!”

“சுத்தப் பேத்தல்...” என்று சிரித்தாள் அந்தக் ‘கருப்பி.’

“அப்படியானால், பாக்கியம் அம்மையாரே, ஒரு வேண்டுகோள்: தங்கள் தோழி வில்லியையும் ஒரு பாவம் செய்யத் தூண்டவேண்டும்!”—வேலன் வேண்டினான் கிண்டலாக!

“என்ன பாவமாகவே இருக்கிறது!”

“ஆமாம், சாதியை விட்டு, மதத்தை மறந்து ஒருவனை மணப்பது பாவமல்லவா?”

“என்னடி, வில்லி பாவியாகிறாயாடி?”

“போடி, போ—இந்தப் பாவத்தைச் செய்ய எப்பொழுதுமே பயப்படக்கூடாது!” என்றாள் வில்லி.

சமூகம் சில சட்டுப்பாடுகளை ஏற்படுத்திவிட்டது ஆதியில்...அதை எவருமே உடைக்கக்கூடாது என்பது அதன் ஆசை. அதற்கு என்ன செய்வது? யாரைக் காவலாக வைப்பது என்று புரியவில்லை. உடனே ஒரு சிப்பாய் கிடைத்தான்...பாவம் என்ற நாமகரணத்தோடு-! சமூகத்தின் எண்ணம் நிறைவேறிற்று! ஆனால் சட்டங்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க முடியுமா? மக்கள் வாழ்க்கைக்காக விதிகளே ஒழிய, வகுத்த விதி

முறைகளுக்காக வாழ்க்கையை நடத்த முடியாது! தலைக்கேற்ற தொப்பி வேண்டும்! உடலுக்கேற்ற சட்டை தைக்க வேண்டும்! படத்திற்கேற்ற சட்டம் போட வேண்டும்! கண்ணின் குறைக்கு ஏற்ற கண்ணாடி மாட்ட வேண்டும்! சமூகத்தின் நிலைமைக் கேற்றபடி விதிமுறைகள் அமைக்கப்பட வேண்டும்! சேர்ப்பதற்கும் வசதி வேண்டும்; குறைப்பதற்கும் இடம் தரவேண்டும்! வேண்டாமென்றால் எடுத்தெறியவும், அவசியமென்றால் புதிதாக ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும். ஆகவே தொடாதே, அதைக் குறை சொல்லாதே என்று சொல்வதை யாரும் நம்பமுடியாது... அதற்கு அடங்கி யொடுங்கி நடக்க முடியாது!

சமூகத்தைப் பிளந்து ஒரு கூறை, சண்டாளர் என்று பெயரிட்டு அவர்களைத் தொடவும் கூடாது, தொடர்பே கூடாது, தொடர்பே தகாது...என்று கூறினன் பாவமெனும் காவற்காரன். இதை ஏற்க முடியுமா? சாதிகள் வேண்டும், சாதிகளுக்குள் கலப்பு மணம் செய்வது ஆகாது...என்றான் அதே ஆள். நம்மால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவேதான் பாவம் பல வழிகளில் வேண்டாதவற்றைக் காப்பாற்றித் தந்திருக்கிறது. சில சமயங்களில் உதவியும் செய்திருக்கிறது!

சேரன் வேலனை விட்டுவிட்டு நேராக வில்லியின் வீட்டிற்குச் சென்றான். பாக்கியமும், வில்லியும் அன்போடு, ஆர்வத்தோடு வரவேற்றார்கள். தங்கம்மாவைக் காணவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த அவர்களுக்கு அவன் வரவு கொஞ்சம் ஆறுதலை யளித்தது.

"வில்லி...இவர்தானடி 'அவர்"...என்றார்.

"பார்வையிலே புரிகிறதடி யம்மா!"...வில்லி சொன்னாள்.

" இன்னொரு 'அவர் கூட வந்திருக்கிறாரே' என்னுடன் " ...என்றான் 'சந்தடிசாக்கில்'...

"யார்...?"—வில்லி திகைப்போடு கேட்டாள்.

" அவர் இங்கு இல்லை. வ. உ. சி. உணவு விடுதியில் தங்கியுள்ளார். வேண்டுமானால் அவரை மாலையில் காட்டு கிறேன்"

வில்லி சிந்திக்க ஆரம்பித்துவிட்டாள். வந்தவுடனேயே பாக்கியத்திடம் தனது மனப்போர் எடுத்துச் சொல்லிவிட்டாள். பாரதப் போர் முடிந்துவிட்டதாம்... இராவண யுத்தமும் முடிந்துவிட்டதாம்...இரண்டாம் உலகப்போர் கூட அடங்கிவிட்டது...ஆனால் அவள் மனப்போர் மட்டும் அடங்கவில்லை பாக்கியம் எவ்வளவோ ஆதரவு மொழிகளைக் கூறினாள்.........அடங்குகிறதா புயல்?

"வேலன் வராண்டி, அந்த தெருவில் வராண்டி..." என்று பாடினாள்—பாக்கியம் வில்லியை வம்புக்கிழுக்க.

"போதுமடி உன் பாட்டு...இன்னொருவர் யாரென்று கேட்டுச் சொல்லடி!" என்றாள் பொய்க் கோபத்தோடு.

"பாக்கியம்...உனக்கு வேலனைத் தெரியுமா? அவரும் வந்திருக்கிறார் என்னுடன்! வில்லியைப் பார்க்கவேண்டுமாம்..."

"வேலனா... இங்கு வந்திருக்கிறாரா?"

" ஆம்...மாலையில் அவரைச் சந்திப்போம்."

பிறகு அவர்கள் உணவெடுத்துக் கொண்டனர். பாக்கியம் தனியாகச் சேரனைச் சந்தித்தாள். சேரன் தன் மனத்திலே பட்ட எல்லா எண்ணங்களையும் சொல்லி விட்டான். அவள் கடைசியாகச் சொன்னாள்...யார் எதிர்த்தாலும், இனி நம்மைப் பிரிக்க முடியாது! பிரிக்க நினைப்பவர் ஏமாந்துவிடுவர் என்று பிறகுதான் பாக்கியத்தையும் வில்லியையும் அழைத்துக்கொண்டு அந்த விடுதியை நோக்கிப் புறப்பட்டான். வில்லி மறக்காமல் 'மனப்போர்' என்ற ஏட்டை எடுத்துக் கொண்டாள்! சேரன் அதைப் பார்த்துச் சிரித்தான்.

போகும் வழியிலே பாக்கியம் திடீரென்று ஒரு சந்தேகத்தைத் கிளப்பினாள்.

"வில்லி, இங்கு டாக்டர் நாரணன் வீடு எது?"

"ஏன், போகும் வழியில்தான்..."

"அவரைப் பார்க்க வேண்டும்"

இதைக் கேட்டவுடன் சேரனுக்கு வேலனின் நினைவு வந்துவிட்டது!

"பாக்கியம்" உனக்கு ஏதாவது மன வியாதியா...... சிகிச்சை பெறவா?"

"உங்களுக்கு எப்படித் தெரியும் மனோதத்துவ மருத்துவர்அவர் என்று? 'டாக்டர்' கருணாகரன் பார்க்கச் சொன்னார். இப்பொழுது சொன்னீர்களே வேலன்...... அதே பெயருள்ள வாலிபன் ஒருவனுக்கும் சிகிச்சை செய்யவேண்டுமாம்!"

"வேலன் ஆறு குழந்தைகளை அணைத்துப் பிடித்த தால் ஒரு குழந்தையானதாகப் புராணம்...நீ சொன்ன வேலனும் நான் சொல்கிற வேலனும் வெவ்வேறானவர்க ளல்ல, ஒரே ஆள் தான்! அவருக்குப் பித்தந்தந்த வில்லியை இன்று மருந்து தர அழைத்துப் போகிறேன்"

வில்லி நாணத்தால் பின்னிப் பின்னி நடந்தாள். பாக்கியமோ அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவதுபோல விரைவுபடுத்தினாள்.

"இன்னொரு செய்தி. நேற்று இரவிலிருந்து என் னுடன் வந்த தங்கம்மா எங்கோ போய்விட்டாள்!"

"அவள் எந்த 'அவரை'த் தேடிக்கொண்டு போனாளோ?"

சேரன் சிரித்தான். வில்லி வந்த சிரிப்பைக் கரங் களால் வாய்புதைத்துத் தடுத்துவிட்டாள்.

'சுத்தக் குறும்பு. அவளுக்கு என்ன வயது. அவள் தேடிப் போயிருக்கிறாளாம் காதலரை! நீங்க மகா கிண்டல் பேர்வழி!'

பிறகுதான் உணவு விடுதியை அடைந்தனர். பாவம் செய்வதாக வேடிக்கையிலேயே தாங்கள் விரும்பிய செய்தி களைச் சொல்லிக்கொண்டனர்.

"பாக்கியம், இளம்பு! வேலன் விழியாலேயே வெளியே போங்கள் என்று கட்டளையிடுகிறார்!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை!" வார்த்தைகளை விழுங் கினான் வேலன்.

பாக்கியமும் சோனும் வெளியே கிளம்பினர். சிறிது தூரம் நடந்து போகும்பொழுதே ஒரு குதிரைவண்டியிலிருந்து யாரோ கைதட்டி யழைத்ததுபோலிருந்தது! யார்? உற்றுப் பார்த்தான் முகுந்தன்! அவன் எங்கு அங்கு வந்தான், ஏன் வந்தான்?

ஓய்வு கிடைக்கிறபொழுதெல்லாம் நல்ல முக்கிய ஊர்களைச் சென்று பார்ப்பது அவன் வழக்கம். அப்படியே அன்று மதுரைக்கு வந்தான். அங்கு 'ஏழை அழுத கண்ணீர்' என்ற ஆங்கிலப் படத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது தற்கொலை யென்று யாரோ கூவவே ஓடோடிக் கிணற்றில் குதித்து அவளைக் காப்பாற்றினன். அவள் சாகவில்லை. அதிர்ச்சியால் கொஞ்சம் நலக் குறையுடன் இருக்கிருள். காயம் கூட ஏற்படவில்லை!

கடைசியில் அவள் அன்றொரு நாள் அவனுக்கு இன்பம் தந்து மறைந்த சகுந்தலையின் தாயாம். தங்கமாம்! பக்கத்திலே அழுதவளோ அவள் மகள் சகுந்தலை அவளுக்கு ஒரு குழந்தை! தாயைத் தேடி வந்தபொழுது அவளையே தாயாக்கிவிட்டான் முகுந்தன். அதிலிருந்து அவள் தப்பவே முடியவில்லை. ஆகவே வடிவாம்பாளை விட்டுப் பிரிந்துவிட்டாள். அவளும் கணவனுடன் போராடிப் போராடித் தோற்றுத் தாய்வீடு போய்விட்டாள் சகுந்தலை பிச்சைக்காரியானுள்.

பாக்கியமும், சோனும் வண்டியை நெருங்கினர். பாக்கியத்தைக் கண்ட தங்கம்மா அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். சோன் அவர்கள் தொடர்பை எடுத்து விளக்கினன்.

"எந்த ஓட்டலில் தங்க வசதியுண்டு?"—முகுந்தன் கேட்டான்.

"என்னோடு வாப்பா" என்று அழைத்தான் சேரன்.

பிறகு தானும் முகுந்தனும் ஒரு குதிரை வண்டியிலே ஏறிக்கொண்டனர். சகுந்தலை தங்கம்மா, பாக்கியம் ஆகியோர் ஒரு வண்டியிலே அமர்ந்துகொண்டனர். இரண்டு வண்டிகளும் வ. உ. சி. உணவு விடுதியில் வந்து நின்றன. எல்லோரும் இறங்கி வேலன் இருந்த அறையினுள் நுழைந்தனர். இவர்கள் வரும் ஓசையைக் கேட்ட பின்னிக்கிடந்த அன்றில் பறவைகள் பிரிந்தன!

"அட தங்கம்மா எங்களிடம் சொல்லாமல் எங்கே போய்விட்டாய்?"—லில்லி கேட்டாள்.

"என் மகளைத் தேடி! உன் தங்கையை நாடி!"

"இந்தப் பெண்ணு?"

"ஆம், அம்மா! உனக்கு நான் சின்னம்மா—இவள் உன் தங்கை சகுந்தலை உன் தந்தையைக் கேட்டுப்பார்!"

எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தனர். அப்பொழுது டேவிட்டும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார். நெடுநேரமாகியும் தன் மகளைக் காணாததால் மேரியம்மாளைக் கேட்டுக்கொண்டு அந்த விடுதிக்கே வந்துவிட்டார்.

அவர் தங்கம்மாளைப் பார்த்தார். அவரை அவள் பார்த்தாள்.

"தங்கா........"

"இதோ உங்கள் மகள் சகுந்தலை"

"இது கனவுலகமா?"—டேவிட் பேசினார்.

"ஆச்சரியப்படவேண்டாம் தங்கம்மா சொல்வது உண்மை. அவள் என் மனைவி அவளுக்கு இத்தனை துயரங்களைச் சேர்த்து வைத்தவன் நான். என் குற்றங்களை யெல்லாம் எண்ணி ஏங்கி இவளைத் தேடும்பொழுது இவள் கிடைக்கவில்லை. ஒருவன் ஒரு தவறு செய்து விட்டதாலேயே வாழ்க்கை முழுவதும் பாவங்களைச் செய்வான் என்ற நியதியில்லை. தவறிவிட்டதும் உண்மை. என் மனைவி இறந்த பிறகு இதுவரை பெண் நினைவின்றியே வாழ்ந்துவிட்டேன். தங்கம்மாவிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று எண்ணிய நாட்கள் எத்தனையோ இதோ அவளிடம் மன்னிப்புக் கேட்கிறேன்."

"எல்லோர் முன்னிலையிலும் நான் ஒரு பாவம் செய்யப்போகிறேன் என்ற பயங்கர உண்மையைச் சொல்லி விடுகிறேன். இந்த இளங் குழந்தையுடனிருக்கும் பிச்சைக்காரியை சாதியை எதிர்த்து சாத்திரத்தைத் துச்சமெனத் தள்ளி, கோத்திரத்தை உதறியடித்துத் திருமணம் செய்யப்போகிறேன்" என்றான் முருந்தன்.

எல்லோரும் சிரித்துவிட்டனர்.

"விருப்பமிருந்தால் போகிற கதிக்குப் புண்ணியந் தேடிக்கொள்ளலாம்!—தங்கம்மாவுக்கு நான் செய்த பாவத்திற்குப் பதிலாக அவன் ஒரு பாவம் செய்ய வேண்டும். விதவையான அந்தப் பாட்டியை, மனைவியைப் பிரிந்து பல ஆண்டுகள் பெண் சுகமேயின்றி வாழ்ந்த இந்த ஐம்பத்தாறு வயது நிறைந்த பாட்டன் மணக்க விரும்புகிறான்!" டேவிட் சொன்னார் தீர்மானத்தோடு!

"இதென்ன கேலிக்கூத்து"—என்று பலமாகத் தலையை ஆட்டி மறுத்தாள் தங்கம்மா.

"இந்த விசித்திர முடிவில் என் ஆருயிர் நண்பன் நீலன் இல்லையே என்று வருந்துகிறேன்" என்றான் சேரன்.

"நீலனா"...என்று பெருமூச்செறிந்தாள். வில்வி அப்பொழுதும் அவள் கையைவிட்டுப் பிரியாத 'மனப்போர்' ஏடு சிரித்தது. வேலன் முகத்தில் களிப்பு நாடக மாடிற்று!

"எல்லோரும் புறப்படுங்கள் வீட்டிற்கு" என்றார் டேவிட்.

சமூகம் ஒரு கடல். அதில் பாவ, புண்ணியம் அலைகள்! எது பாவ அலை, எது புண்ணிய அலை என்று பிரிப்பதே கடினமாகப் போய்விட்டது. ஆனால் அலைகள் இல்லாது கடல் இருக்க முடியுமா? குறைபாடு என்ற காற்று வீசிக்கொண்டிருக்கும்வரை இந்த அலைகள் ஓயவா போகின்றன...!